Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 192 | ஞாயிற்றுக்கிழமை | வைகாசி 23 நாள் 06 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

# இலங்கையில் கொரோனா 200,000

## கடந்த 4 நாள்களில் மட்டும் 13 ஆயிரம் தொற்றாளர்கள்!

கொழும்பு, ஜூன் 6

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தைத் தாண்டியது. கடந்த 4 நாள்களில் மட்டும் 13 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு கொரோனாத் தொற்று பரவியுள்ளது. 15

## கொரோனாத் தொற்று முல்லைத்தீவில் முதல் இறப்பு!

முல்லைத்தீவு, ஜூன் 6

கொரோனாப் பெருந்தொற்றால் முல்லைத்தீவில் முதலாவது கொரோனா இறப்புப் பதிவாகியுள்ளது. புதுக் 15

## கிளிநொச்சியில் இருவர் கொரோனாவால் இறப்பு!

கிளிநொச்சி, ஜூன் 6

கொரோனாத் தொற்றுக் காரணமாக கிளிநொச்சியில் மேலும் இரு இறப்புக்கள் பதிவாகியுள்ளன. 46 மற்றும் 67 வயதுடையவர்களே உயிரிழந்துள்ளனர். 15



ஒன்றரை வருடங்களாக சாவகச்சேரியில்

## சீனத்துக் கொடி பறப்பது அரசுக்குத் தெரியாதாம்!

கொழும்பு, ஜூன் 6

யாழ்ப்பாணம் சாவகச்சேரியிலுள்ள ஒரு கட்டடத்தில் சீனத் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருப்பது தெரியாது என்று வெளிவிவகார அமைச்சு கொழும்பு ஆங்கில ஊட 15

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

முச்சக்கரவண்டி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் ஒருவர் உயிரி 13

## வாளால் வெட்டி கொள்ளை; இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 6

சுன்னாகம் கந்தரோடையில் வீடொன்றுக்குள் புகுந்து வாளால் வெட்டி கொள்ளையில் 13

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

## 3 சிறுவர்கள் உட்பட 13 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 6

10 வயதுக்கு உட்பட்ட 13 சிறுவர்களுக்கு வடக்கில் நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 மற்றும் 8 வயதுச் சிறுவர்கள் இருவருக்குத் 13

## வடக்கில் 140 பேருக்கு கொரோனாத் தொற்று

### சண்டிலிப்பாயில் 56

யாழ்ப்பாணம், ஜூன் 6

வடக்கில் ஆயிரத்து 57 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 132 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதில் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் உடுவில் 15

## ஆடைத் தொழிற்சாலையை நாளை திறப்பதற்கு அனுமதி

### நேற்றும் 20 பேருக்குத் தொற்று

முல்லைத்தீவு, ஜூன் 6

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொத்தணி கட்டுப்பாட்டுக்குள் வர முன்னரே அதனை நாளை 15

## மண்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தில் நால்வர் இறப்பு!

கொழும்பு, ஜூன் 6

மாவனெல்ல, தெவனகல பிரதேசத்தில் மண்சரிவில் சிக்கி காணாமல்போயிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும் சடலங்களாக 15

## உழவியந்திரத்திலிருந்து விழுந்தவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 6

உழவியந்திரத்தில் இருந்து வீழ்ந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். மிருசுவிலைச் சேர்ந்த மயில்வாகனம் மோகனராசா (வயது-63) 15



## சீரற்ற காலநிலை 10 பேர் இறப்பு!

### 200,000 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 6

அடைமழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவால் நாட்டில் நேற்றுமாலைவரை 10 பேர் பலியாகியுள்ளனர். இருவர் காயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமல்போயுள்ளார் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் 8 மாவட்டங்களில் 54 ஆயிரத்து 126 குடும் 15

## தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி

### சுற்றறிக்கை விரைவில் வெளியாகும் என்கிறார் மருத்துவ நிபுணர் கேசவன்

யாழ்ப்பாணம், ஜூன் 6

தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவதற்கு சுகாதார அமைச்சு முடிவுசெய்துள்ளது. இது தொடர்பான வழிகாட்டல் சுற்றறிக்கை சுகாதார அமைச்சின் குடும்ப நல சுகாதாரப் பிரிவால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. 15

உதயன்

செய்திகளுக்கு 021 493 0000 077 1209994

விளம்பரங்களுக்கு 021 493 1111 077 1209972



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் மூழ்கும் தெற்கு: கொட்டித் தீர்க்கின்றது மழை!



- சீரற்ற காலநிலையால் 16 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிப்பு
- வெள்ளத்தில் சிக்கி சிறுவனொருவன் உள்ளிட்ட இருவர் காணாமல் போயுள்ளனர்.
- இரத்தினபுரி மாவட்டத்தில் 3 மண் சரிவுகள் பதிவு
- மாவில பிரதேசத்திலுள்ள சுமார் 70 வீடுகளுக்குள் 4 அடியில் வெள்ள நீர்
- கடந்த 24 மணித்தியாலங்களில் 300 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 6

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று தினங்களாகக் காணப்படும் சீரற்ற காலநிலையால் 16 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதேநேரம் மற்றொரு பெண் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மண்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி சிறுவனொருவன் உள்ளிட்ட இருவர் காணாமல் போயுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் வெவ்வேறு பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் 3 மண் சரிவுகள் பதிவாகின. இதன் போது அயாகம பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிரிஎல்ல பிரதேசத்தில் வீடொன்றின் மீது மண் மேடு சரிந்து விழுந்ததில் 16 வயதுடைய செத்மினி லக்மாலி பெரேரா என்ற பாடசாலை மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.



புத்தளம் மாவட்டத்தில் மஹவெவ பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 15 வயது சிறுவனொருவன் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.



வெள்ளம் காரணமாக கொழும்பு கோட்டை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தியவன்னாஓயாவின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் நாடாளுமன்ற வளாக வீதி நீரில் மூழ்குவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடுவலை பிரதேச செயலகத்துக்குட்பட்ட நவகமுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹரிததனவத்த என்ற பிரதேசத்தில் 8 வீடுகளில் ஒரு அடி உயரத்துக்கு நீர் உட்புகுந்திருந்தது. திம்பிரிகஸ்யாய (தெமட்டகொட) பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாவில பிரதேசத்திலுள்ள சுமார் 70 வீடுகளுக்குள் 4 அடி உயரத்துக்கு வெள்ள நீர் புகுந்ததுள்ளது.

கடும் மழை காரணமாக 44 ஆயிரம் மின் பாவனையாளர்களுக்கு மின் விநியோகம் தடைபட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடும் மழையால் ஏற்பட்ட அனர்த்தங்களே இதற்கான காரண என்றும், மின்விநியோக தடை இடம்பெற்றுள்ள பிரதேசங்களில் துரிதமாக அவற்றை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் பெய்யும் கடும் மழை காரணமாக சில நீர் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள் ளன என்று நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மழையுடனான காலநிலை நீடிக்குமானால் நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் உயர்வடையக் கூடும் என்பதால் அவற்றை அண்டிய பிரதேசங்களிலுள்ள மக்களை மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 300 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பல பகுதிகளில் பதிவாகியுள்ளது. ஆறு மாவட்டங்களுக்கு ஏற்கனவே விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது. கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே மண் சரிவு எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.



களுத்துறை மாவட்டத்தின் புலத்சிங்கள, இங்கிரிய, பாலிந்தநுவர, அகலவத்த ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு மண்சரிவுக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புத்தளம், குருநாகல், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கேகாலை, கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 175 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என்று சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் தென் மேற்கு பகுதிகளில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பலஇடங்களில் மாலையில் அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி ஏற்றியவுடன் அனைத்தும் சரியாகா!

*அவதானமாக செயற்பட வேண்டும் என சுகாதார பணிப்பாளர் அறிவுரை*

**கொழும்பு, ஜூன் 6**

**தடுப்பூசி ஏற்றியவுடன் அனைத்துமே சரியாகிவிடும் என்ற மன நிலையில் மக்கள் உள்ளனர். தடுப்பூசி ஏற்றப்பட்டாலும் ஒரு மாதத்தின் பின்னரே உடலில் நோய் எதிர்ப்பு சக்தி வேலைசெய்ய ஆரம்பிக்கும். தடுப்பூசி ஏற்றியவுடன் மக்கள் அலட்சியமாக செயற் படக்கூடாது.**

இவ்வாறு சுகாதார பணிப்பாளர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசி ஏற்றலில் பல பகுதிகளை நாம் நிராகரிக்கின்றோம் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்படு கின்றன. அது தவறாகும்.

அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி ஏற்றும் முயற்சிகளில் மில்லியன் கணக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான எதிர்பார்ப்புடன் அரசு சர்வதேச நாடுகளுடன் பேச்சு நடத்துகின்றது.

ஆனால் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தடுப்பூசிகளே எமக்கு கிடைக்கின்றன. தடுப்பூசிகளின் பற்றாக்குறை தற்போது சிக்கலான நிலையொன்று உருவாகக் காரணமாக உள்ளது.

நாட்டில் சகல பகுதிகளிலும் மக்களுக்கு தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகின்றது. அச்சுறுத்தலான பகுதிகளென அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளுக்கு நாம் தடுப்பூசிகளை வழங்கிக் கொண்டுள்ளோம். மேல் மாகாணமே அதிக அச்சுறுத்தல் பகுதியென ஆரம்பத்தில் இருந்து எச்சரிக்கப்பட்டு வருகின்ற நிலையில், மேல் மாகாணத்தில் தடுப்பூசிகளை பகிரும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கும் தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்படுகின் றன. வடக்கு மாகாணத்துக்கு இதுவரையில் ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

அடுத்த வாரத்தில் இருந்து கிழக்கு மாகாணத்தில் மக்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றும் வேலைத்திட்டத்தை நாம் நிச்சயமாக ஆரம்பிப்போம்.

எமக்கு தடுப்பூசிகள் கிடைக்கும் அளவுக்கே எம்மால் பகிர்ந்து கொடுக்க முடியும். அரசின் தலையீட்டில் பல்வேறு நாடுகளிடம் தடுப்பூசிகளை இலவசமாக பெற்றுக் கொள்ளவும், பணத்துக்கு கொள்வனவுசெய்யவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் அனைவரும் எமக்கு வழங்குகிறோம் எனக் கூறிய தொகையை விடவும் குறைவான தடுப்பூசிகளே எமக்குக் கிடைக்கின்றன. தற்போது நாட்டில் சைனோஃபார்ம், ஸ்புட்னிக், கொவிஷீல்ட் ஆகிய தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன- என்றார். (ஏ-இ)



இலங்கைக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கான 6 மில்லியன் டொலர் பெறுமதியான முன்கள மருத்துவ உபகரணங்களை அமெரிக்கா வழங்கியுள்ளது. இவை நேற்று அதிகாலை சிறப்பு விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தன. (ஏ-இ)

## ஆபத்தான நிலைமைக்கு நகர்கின்றது இலங்கை!

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூன் 6

புத்தாண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட கொத்தணியில் இதுவரை சுமார் 97 ஆயிரம் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். நாட்டின் மொத்த கொரோனா உயிரிழப்புகளில் 60 வீதமானவை புத்தாண்டுக் கொத்தணியில் இனங்காணப்பட்ட நோயாளர்களை உள்ளடக்கியுள்ளது. நாடு ஆபத்தான கட்டத்தில் உள்ளது. இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினரான மருத்துவ நிபுணர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரையில் நிகழ்ந்த ஆயிரத்து 608 மரணங்களில் சுமார் 974 பேர் புத்தாண்டுக் கொத்தணியில் இனங்காணப்பட்டவர்களாவர். மிகக்குறுகிய காலத்தில் 60 சதவீதமான கொரோனா மரணங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதனால் நாடு மிகவும் ஆபத்தான நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டால் தற்போது இனங்காணப்படும் நோயாளர்களை விடவும் மூன்று அல்லது நான்கு மடங்கான நோயாளர்கள் இனங்காணப்படுவார்கள். தொற்றின் தீவிரத்தன்மையைக் குறைப்பதற்கு எமது நாட்டின் சனத்தொகையில் 70 சதவீதமானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட வேண்டும்- என்றார். (ஏ-இ)

## கொவிட் அலைகள் உருவாகும் அபாயத்திலேயே நாடு உள்ளது!

*பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஜூன் 6



நாடளாவிய ரீதியிலான பயணக் கட்டுப்பாடு எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் தாக்கம் சாதகமான விதத்தில் வெளிப்படும் என நம்புகின்றோம். ஜூன் மாத இறுதியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்தாலும் அச்சுறுத்தல் நிலையில் இருந்து நாடு மீளவில்லை. மீண்டுமொரு கொவிட் அலை உருவாகும் சாத்தியம் உள்ளது.

இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு முடக்கப்பட்டாலும் கூட, நாட்டின் தற்போதைய நிலை குறித்து திருப்தியடைய முடியாது. வீடுகளில் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்படும் நிலையில், பயணத்தடையால் தொற்றுப் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை தெளிவாக வெளிப்படுகின்றது. அதேவேளை, இந்தப் பயணக்கட்டுப்பாடு காலத்தில் அத்தியாவசிய தேவைகள் என கூறிக்கொண்டு மக்கள் வாய்ப்புகளை தவறாக பயன்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களைப் பொறுத்த வரையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பயணக்கட்டுப்பாட்டில் வீடுகளில் உள்ளனர். ஆனால் 20 வீதமான மக்கள் இன்னமும் நிலைமைகளை சரியாக விளங்கிக்கொள்ளவில்லை.

**ஆனால் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைகின்றது என்பதற்காக நாடு வழமையான நிலைக்கு திரும்பியுள்ளதென அர்த்தமில்லை. மீண்டும் ஒரு கொவிட் அலை உருவாகும் அச்சுறுத்தல் நிலையிலேயே நாடு உள்ளது- என்றார். (ஏ-இ)**





## அஸ்ராஜெனகாவுக்கு மாற்றாக ஸ்புட்னிக் தடுப்பூசி பயன்பாடு!

*மருந்தாக்கல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கூறுகின்றது*

கொழும்பு, ஜூன் 6

ஆறு லட்சம் பேருக்கான அஸ்ராஜெனகா தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியாது போனால், முதலாம் கட்டத்தில் அஸ்ராஜெனகா தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்களுக்கு இரண்டாம் தடுப்பூசியாக ஸ்புட்னிக் அல்லது ஜோன்சன் அன் ஜோன்சன் தடுப்பூசியை ஏற்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. மாற்றுத்தடுப்பூசிகள் ஏற்றுவதனால் எந்தவொரு தீங்கும் உடலுக்கு ஏற்படாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தேசிய மருந்தாக்கல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் விசேட வைத்தியர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அஸ்ராஜெனகா தடுப்பூசியை ஏற்றிக்கொண்டவர்களுக்கு இரண்டாம் தடுப்பூசியாக அதே தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதற்காகவே நாம் தொடர்ச்சியாக வெளிநாடுகளிடம் பேச்சு நடத்தி வருகின்றோம்.

அரசு இந்த முயற்சிகளை மேற்கொண்டும் இன்னமும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. ஏனெனில் சகல நாடுகளுமே வைரஸ் தொற்றால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், எம்மைப்போன்றே அவர்களும் தமது மக்களுக்கான பாதுகாப்பை கருத்தில் கொண்டு தடுப்பூசிகளை களஞ்சியப்படுத்துகின்றனர்,

அதனால் அவர்கள் எமக்கான தடுப்பூசிகளை வழங்க மறுக்கின்றனர் என கருதுகின்றோம். எவ்வாறு இருப்பினும் நாம் மாற்று நடவடிக்கைகளை கையாள வேண்டியுள்ளது.

கடந்த சில மாதங்களாக நாம் இது குறித்து அதிக கவனம் செலுத்தி ஆய்வுகளுக்கு உட்படுத்திப் பார்த்துள்ளோம். அஸ்ராஜெனகா தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட ஒருவரது மாதிரியை எடுத்து எத்தனை நாள்களில் எவ்வாறான மாற்றங்கள் உடலில் ஏற்படுகின்றன என்பதை அவதானித்தோம். அதேபோல் ஏனைய இரண்டு தடுப்பூசிகளின் சோதனை முயற்சிகளிலும் சாதகமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன. எனவே மாற்றுத் தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க முடியும் என்ற தீர்மானத்தை நாம் எட்டியுள்ளோம்- என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 14 ஆம் திகதிக்குப் பின்னரும் பயணத் தடைக்கு அதிக வாய்ப்பு

அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 6**

**நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயணத் தடை கட்டுப்பாடுகள் ஜூன் 14ஆம் திகதிக்குப் பின்னரும் நீடிக்கப் படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.**

இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் ஜூன் 14 க்குப் பிறகு மேலும் நீடிக்கப்படலாம்.

பயணக் கட்டுப்பாடுகளை மேலும் நீடிக்க வேண்டுமானால் பொதுமக்களுக்கு மேலும் சிரமங்களைத் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும். கொவிட் -19 தொற்றுநோய்க்கு எதிராக அரசு இது வரை 286 பில்லியன் ரூபா செலவிட்டுள்ளது- என்றார்.

பயணத் தடை நீடிப்புக்கு வாய்ப்புள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் கூறியிருந்த நிலையில், தற்போது அமைச்சரவைப் பேச்சாளரும் இவ்வாறு கூறியுள்ளார். (து-இ)

எவ்வித காரணமுமின்றி

# 1,386 வாகனங்கள் கொழும்புக்குள் நுழைவு

கொழும்பு, ஜூன் 6

கொழும்புக்குள் வருகைதரும் வாகனங்களின் எண்ணிக்கை கடந்த நாள்களைவிட குறைவடைந்துள்ள போதிலும், எவ்வித காரணமுமின்றி வருகைதந்த ஆயிரத்து 386 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த வாகனங்களில் பயணித்த அனைவரும் எச்சரிக்கப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்புக்குள் நுழையும் வாகனங்கள் தொடர்பில் தற்போது விசேட கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கமைய நேற்று முன்தினம் காலை 6.30 மணிமுதல் முற்பகல் 9.30 மணிவரையில் முன்னெடுக்கப்பட்ட மூன்று மணிநேர கணக்கெடுப்பின்போது 59ஆயிரத்து 280 வாகனங்கள் கொழும்புக்குள் வந்துள்ளன என்று பதிவாகியுள்ளன. கடந்த இரு தினங்களுடன் ஒப்பிடுகையில் நேற்றுமுன்தினம் வந்த வாகனங்களின் தொகை 3ஆயிரம் என்ற அடிப்படையில் குறைவடைந்துள்ளது.

மேலும், வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களின் பணியாளர்களை அழைத்து வந்த 16ஆயிரத்து 282 வாகனங்கள் பதிவாகியுள்ளன. மேல்மாகாணத்தின் எல்லைப் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கையின் போது 2ஆயிரத்து 942 வாகனங்களில் பயணித்த 5ஆயிரத்து 249 பேர் கண்காணிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய போக்குவரத்துக் கட்டுப்பாடு சட்டவிதிகளுக்கு புறம்பாக எல்லையைக் கடக்க முற்பட்ட 139 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த வாகனங்களில் 198 பேர் பயணித்துள்ளனர். அவர்கள் அனைவரும் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (து-இ)

# 975 பேர் வெள்ளியன்று கைது

கொழும்பு, ஜூன் 6

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய மேலும் 975 பேர் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நாட்டில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் 22 ஆயிரத்து 950 பேர் இந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை,நேற்றுமுன்தினம் காலை 6:30 மணி முதல் 9:30 மணி வரை 59 ஆயிரத்து 280 வாகனங்கள் கொழும்புக்குள் நுழைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். இது முந்தைய நாளோடு ஒப்பிடும்போது 3 ஆயிரத்தால் குறைந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-இ)

# பாடசாலைகள் தொடர்பில் வெளியான தகவல் வதந்தி

கொழும்பு, ஜூன் 6

கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை மீளத் திறத்தல் குறித்து எந்த வித தீர்மானமும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் பாடசாலைகள் நான்கு கட்டமாகத் திறக்கப்படும் என்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். பாடசாலைகளை மீள திறத்தல் குறித்து சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ள செய்தி குறித்து வினவியபோது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் 4 கட்டங்களாக பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன என்று சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் பொய்யானது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் பாடசாலைகளை மீளத் திறத்தல் குறித்து எவ்வித தீர்மானங்களும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

இந்தவருடத்தில் இடம்பெறவுள்ள தேசிய பரீட்சைகளை நடத்தும் காலம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே அந்தத் தீர்மானத்திலும் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. கொவிட்-19 வைரஸ் தொற்றிலிருந்து நாட்டு மக்கள் அனைவரையும் பாதுகாக்க நெருக்கடியான சூழ்நிலையில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கொவிட் 19 வைரஸ் காரணமாக கல்வித்துறைக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. இந்தச் சவாலை வெற்றிகொள்ள மறுசீரமைக்கப்பட்ட திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டுள்ளன. குறுகிய காலகட்டத்தில் பாடத் திட்டங்களை சிறந்த முறையில் நிறைவுசெய்ய புதிய கொள்கை திட்டத்தை செயற்படுத்துவது அவசியமாகும். பாடசாலைகளை மீளத் திறத்தல் குறித்து பிரதேச தொடர்பு குழுவினரது பரிந்துரைகளுக்கும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கும் அமையவே தீர்மானம் எடுக்கப்படும். பாடசாலைகளை மீளத் திறத்தல் குறித்து பல்வேறு தரப்பினருடன் பேச்சு மாத்திரம் முன்னெடுக்கப்பட்டுள்ளதே தவிர, எவ்வித தீர்மானங்களும் இதுவரையில் எடுக்கப்பட வில்லை- என்றார். (து-இ)

# தென்னாபிரிக்கா சென்றோர் இலங்கை வர தற்காலிக தடை

கொழும்பு, ஜூன் 6

கடந்த 14 நாள்களில் தென் அமெரிக்க நாடுகள் மற்றும் தென்னாபிரிக்காவுக்கு சென்றவர்கள் இலங்கைக்கு வருவதற்குத் தற்காலிக தடை விதிக்கப் பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு அனைத்து விமான நிறுவனங்களுக்கும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது என்று சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தேமிய அபேவிக்கிரம தெரிவித்தார்.

இந்தமாதம் முதலாம் திகதி முதல் விமான நிலையங்கள் அனைத்தும் மீளத் திறக்கப்பட்டபோதும் இந்தியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு சென்ற பயணிகளுக்கு விதித்திருந்த தற்காலிக தடை கொரோனா தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

# நிவாரண நிதிக்காக ஒன்றுகூடவேண்டாம்

சமுர்த்தி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 6

நாட்டில் 4 லட்சத்துக்கும் அதிக குடும்பங்களுக்குத் தற்போது 5 ஆயிரம் ரூபா நிவாரண தொகை வழங்கப்பட்டுள்ளது. நிவாரண நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருப்பதை பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சமுர்த்தி மற்றும் நுண்நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் தாக்கத்தை அடுத்து நாடு தழுவிய ரீதியில் பயணத்தடை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதனால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க தீர்மானிக்கப்பட்டு, 5 ஆயிரம் ரூபா நிவாரண நிதி வழங்கப்படுகின்றது. இந்த நிதியை பெற்றுக் கொள்ள இம்முறை 60 இலட்சம் குடும்பங்கள் தகுதி பெற்றுள்ளன.

தற்போது 4 லட்சத்துக்கும் அதிக குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டுள்ளது. பொது மக்கள் ஒன்றுகூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் நிவாரண நிதி வழங்கலில் தாமதம் ஏற்படும். நிவாரண நிதியை பெற்றுக் கொள்ள பொதுமக்கள் அநாவசியமான முறையில் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நிவாரண நிதி வழங்கலில் ஏதேனும், மோசடிகள் அல்லது முறைகேடான செயற்பாடுகள் இடம்பெற்றால் பொது மக்கள் 1965 என்ற விசேட இலக்கத்துக்கு அழைத்து முறைப்பாடளிக்க முடியும்- என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## ஊர் சேர்ந்து கொரோனாவை ஒழிப்போம்

இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தைத் தாண்டிவிட்டது. எவருமே கற்பனை செய்திருக்காத நிலைமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது இலங்கையின் கொரோனாத் தொற்று நிலைமை.

கொரோனாத் தொற்று, உலகில் கால் பதிக்கத் தொடங்கியபோது, இலங்கையில் கட்டுப்பாட்டில் இருந்தது. அடையாளம் காணப்படும் தொற்றாளர்கள் குறைவாக இருந்த அதேநேரம், நாள்தோறும் குணமாகுவோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. அதனால் உலகை ஆட்டிப் படைத்த இந்த வைரஸ் தொற்றை வெற்றிகரமாக தடுக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது. நாளாந்தம் நூற்றுக்குள் இனங்காணப்பட்டு வந்த தொற்றாளர்கள் எண்ணிக்கை ஆயிரக்கணக்காகி, வழமையுமாகிவிட்டது. நாளாந்தம் தொற்றில் இருந்து மீள்பவர்களைக் காட்டிலும், நாளாந்தம் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை மடங்குகளாகிவிட்டது.

கொரோனா வைரஸ் தொற்றின் தோற்றுவாய் என்று கருதப்படும் சீனாவில் இலாவகமாக தொற்றுக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அங்கு சில நாள்களுக்கு முன்னர் 24 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்பது பெரிய விடயமாகப் பேசப்படுகின்ற அதே நேரம், எமது நாட்டில் ஆயிரக்கணக்கில் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்படுவது சாதாரணமாகியிருக்கின்றது. கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் நாம் எவ்வளவு பின்தங்கியிருக்கிறோம் என்பதை இதிலிருந்து உணர்ந்துகொள்ளலாம்.

இலங்கையின் நிலைமை இவ்வாறு தலைகீழாக மாறுவதற்கு வேறு நாடுகளோ, வேற்று நாட்டு மனிதர்களோ காரணமல்ல. முழுக்க முழுக்க இங்குள்ள மக்களும், இங்கு அதிகாரத்தில் இருப்பவர்களுமே காரணம் என்பதை எவராலும் மறுக்க இயலாது.


கொரோனாத் தடுப்பு சுகாதாரக் கட்டுப்பாடுகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்காதமை, உரிய நேரத்தில் சரியான நகர்வுகளை அதிகாரத்தில் உள்ளவர்கள் நடைமுறைப்படுத்தாமை என்று காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் இந்த நிலைமைக்கு நாமே காரணம் என்பதை ஒருபோதும் தட்டிக்கழித்து விட முடியாது.

நாட்டில் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் பயணக் கட்டுப்பாடு காலம் கடந்த ஞானம் என்று சொல்லப்பட்டாலும், கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்க தற்போதுள்ள ஒரே வழி அதுவே. ஆனால் நாட்டு மக்கள் பயணக் கட்டுப்பாட்டைக் கூட சரியாகக் கடைப்பிடிக்காத நிலைமையே இருக்கின்றது. அத்தியாவசிய தேவைகளுக்காக அரசு வழங்கிய சலுகைகளைத் தவறாகப் பயன்படுத்துவதையே அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் தொற்று நிலைமை இவ்வாறே தொடர்ந்தால் இலங்கையின் எதிர்காலம் இருண்டுவிடும் என்பதே உண்மை. இப்போது நாட்டின் விமான நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தாலும், எவரும் நாட்டுக்குள் வரத் தயாரில்லை. உலக நாடுகள் இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என்று தங்கள் பிரஜைகளுக்கு எச்சரிக்கும் நிலையே இருக்கின்றது. ஆக கொரோனாத் தொற்று நிலைமை நீடித்தால் இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குச் செல்லும் என்பது வெள்ளிடைமலை.

இந்த இடரில் இருந்து மீண்டெழுவது மக்களதும், அதிகாரத் தரப்பினரதும் கைகளிலேயே உள்ளது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, சமூகப் பொறுப்புணர்ந்து நடக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனதும் பொறுப்பு - கடமை. அரசியல் நோக்கங்களைத் துறந்து சரியான முடிவுகளை எடுத்து நாட்டை முன்னகர்த்த வேண்டிய பொறுப்பு அதிகாரத்தில் உள்ளவர்களிடம் இருக்கின்றது.

ஊர் சேர்ந்து தேர் இழுக்க வேண்டிய தருணமிது. இந்தத் தருணத்தில் நிலைமையின் தீவிரத்தன்மையை உணர்ந்து செயற்பட்டு, கொரோனா என்னும் கொடிய தொற்றில் இருந்து மீண்டெழ முயற்சிப்போம்.



# யாழில் 59,000 குடும்பங்களுக்கு இதுவரை ரூ.5000 கொடுப்பனவு

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஜூன் 6**

**யாழ். மாவட்டத்தில் இதுவரை 59 ஆயிரம் குடும்பங்களுக்கு அரசின் இடர் கால நிதிக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவிக்கையில்;

பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு இடர் காலத்தில் அரசால் வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சமுர்த்தி பெறுபவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு பெறுவோர், வயது முதிர்ந்தோருக்கான கொடுப்பனவு பெறுவோர், சிறுநீரக நோய்க்கான கொடுப்பனவு பெறுவோர் ஆகியோருக்கு யாழ்ப்பாணத்தில் முதற்கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது. அந்த அடிப்படையில் சுமார் 59 ஆயிரம் குடும்பங்கள் இன்று வரை 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெற்றுள்ளனர். ஏனைய பகுதியினருக்கு அரசின் நிதி கிடைத்தவுடன் அதனை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்குரிய நிதி இன்னும் கிடைக்கப்பெறவில்லை. எனவே பொதுமக்கள் பொறுமையாக இருந்து உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும். யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றிரவு (நேற்றுமுன்தினம்) கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகளின்படி 59 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 508 ஆக அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 48 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். 2 ஆயிரத்து 908 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 778 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். தடுப்பூசி வழங்கலைப் பொறுத்தவரை முதற் கட்டமாக வழங்கப்பட்ட ஐம்பதாயிரம் தடுப்பூசிகளில் 49 ஆயிரத்து 439 தடுப்பூசிகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வாமை உள்ளவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தடுப்பூசி இன்றைய தினம் (நேற்று) காலையில் இருந்து 4 மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது பயணத்தடை அமுலில் உள்ள நிலையில் எமக்கு சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதாவது சில வீதிகளிலே பொதுமக்கள் அதிக அளவில் நடமாடுகின்றனர். இதனை நாங்கள் 24 மணி நேரமும் பொலிஸாரை வைத்து கண்காணிக்க முடியாது.

எனவே பொதுமக்கள் தாங்களாகவே அந்த விடயத்தை உணர்ந்து அநாவசிய நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி அநாவசியமாக வீட்டைவிட்டு வெளியில் வருவதைத் தவிர்க்க வேண்டும் - என்றார். (ப-26)

# 3 கிராம அலுவலர் பிரிவுகள் தனிமையிலிருந்து விடுவிப்பு

### யாழ். மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க. மகேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழில் தற்பொழுது உடுவில் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளான ஜே/189 மற்றும் ஜே/190 ஆகியவற்றில் ஒரு சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அதே நேரத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அரசடிப்பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே அதிக அளவில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் இரண்டு கிராம அலுவலர் பிரிவும் மற்றும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் ஒரு கிராம அலுவலர் பிரிவும் தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்கு, அரசால் வழங்கப்படும் 10ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது - என்றார். (ப-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து விவசாயிகளுக்கும் காபனேற்றம் செய்யப்பட்ட உரம்

கொழும்பு, ஜூன் 6



**பெரும்போக உற்பத்திக்குத் தேவையான காபனேற்றம் செய்யப்பட்ட இயற்கையான உரம் அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்படும். காபனேற்றம் செய்யப்பட்ட உர உற்பத்திக்கான நடவடிக்கை தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அரசின் குறித்த செயற்றிட்டத்துக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெல், மரக்கறி மற்றும் பழங்கள் உற்பத்தியில் இரசாயன உரங்கள் பயன்படுத்துவது மனித உடலாரோக்கியத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என காலம் காலமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆட்சியில் இருந்த அரசுகள் எவையும் இரசாயன உரப் பாவனையை முழுமையாக இல்லாதொழிக்க எவ்வித நடவடிக்கையும் முன்னெடுத்திருக்கவில்லை. சுற்றுச் சூழலுக்கும், மனித உடலாரோக்கியத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலான உணவு உற்பத்தி செய்யப்படும் என சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழலுக்கும், மனித உடலாரோக்கியத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் இரசாயன உரப் பாவனையை தடைசெய்யும் தீர்மானத்தை ஜனாதிபதி கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி எடுத்தார். இந்தத் தீர்மானம் குறித்து அரசியல் மட்டத்தில் பல மாறுபட்ட கருத்துக்களும், விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதியின் குறித்த தீர்மானத்தை உலக உணவுத் திட்டம் வரவேற்றுள்ளது.

காபனேற்றம் செய்யப்பட்ட இயற்கையான உரப்பாவனையை மரக்கறி மற்றும் நெல் உள்ளிட்ட உற்பத்திகளில் ஊக்குவிக்க தேசிய மட்டத்தில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கென, வயம்ப பல்கலைக்கழகத்தில் விவ சாயத்துறை பீடத்தின் பீடாதிபதி மற்றும் விவசாயத்துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

காபனேற்றம் செய்யப்பட்ட இயற்கை உரம் இறக்குமதி செய்யும் தேவை ஏதும் தற்போது கிடையாது. அவை தேசிய மட்டத்தில் உற்பத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறுபோக உற்பத்திக்கான உர விநியோகத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பெரும்போக உற்பத்தியில் 8 லட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்பயிர்ச்செய்கையையும் 15 லட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் மரக்கறி மற்றும் பழ உற்பத்திகளையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெரும்போக உற்பத்திகளுக்கான காபனேற்றம் செய்யப்பட்ட இரசாயன உரம் அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையாக வழங்கப்படும். பெரும்போக விவசாய நடவடிக்கையின் போது உரத் தட்டுப்பாடு ஏதும் இனி ஏற்படாது என உறுதியளிக்கின்றேன் - என்றார். (த-இ)

# எம்.பியானாலும் ரணில் நாடாளுமன்று செல்லார்

கொழும்பு, ஜுன் 6

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பெயர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபோதும், அவர் இந்த மாதம் நாடாளுமன்றத்துக்கு செல்லமாட்டார் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

தேசியப் பட்டியல் நியமனத்துக்கு ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படுவார் என்று இறுதியாக இடம்பெற்ற கட்சியின் செயற்குழுவிலும் ஏகமனதாக தீர்மானிக்கபட்டிருந்த நிலையில், ரணில் விக்ரமசிங்கவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவித்தன.

அதேநேரம் ரணில் விக்ரமசிங்க இந்த மாதம் நாடாளுமன்றம் செல்வார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தபோதும், அவர் இந்த மாதம் நாடாளுமன்றத்துக்குச் செல்லமாட்டார் என்று தெரியவருகின்றது. நாட்டில் கொவிட் தொற்றுத் தீவிரம் பெற்றுள்ளதாலேயே அவர் இந்த மாதம் நாடாளுமன்றம் செல்லமாட்டார் என்று கூறப்படுகின்றது.

கொவிட் காரணமாக இந்த காலப்பகுதியில் தேர்தல்கள் ஆணைக்குழு தற்காலிகமாக மூடப்பட்டிருக்கின்றது. அதனால் தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் திறக்கப்பட்ட பின்னர், ரணில் விக்ரமசிங்கவின் பெயரை பரிந்துரை செய்து கட்சியின் செயலாளரால் கடிதம் அனுப்பப்படும் எனவும் உறுதிப்படுத்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து தகவல் வெளியாகியுள்ளது. (எ-இ)

# தனிமைப்படுத்தலை தடுக்க தலையிட்டாரா சரத் வீரசேகர?

## *கொழும்பு அரசியலில் புதிய சர்ச்சை*

சங்கரிலா நட்சத்திர விடுதியில் பிறந்த நாள் கொண்டாட்டத்தை நடத்தியதால் சர்ச்சையில் சிக்கியுள்ள சந்திமல் ஜெயசிங்க, மொடல் அழகி பியூமி ஹந்சமாலி விடயத்தில் மேலும் ஒரு விவகாரம் பூதாகரமாகக் கிளம்பியுள்ளது. இவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதைத் தடுப்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர முயன்றார் என குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டு வரும் நிலையில் அவர் அதனை மறுத்து விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பில் அவரது ஊடகச் செயலர் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 2ஆம் திகதி மாலை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட சட்டத்தரணி மஞ்சு சிறி, தனது வாடிக்கையாளர்கள் (சந்திமல் ஜெயசிங்க, பியூமி ஹந்தசமாலி) தனிமைப்படுத்தல் மையத்துக்கு அழைத்து செல்லப்படுகின்றனர் எனவும் அவர்களுக்கு மாற்று உடை கூட இல்லையென்றும், அவர்கள் மாற்று உடையை எடுக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அதன் பின் ஒரு பெண் அழைப்பை ஏற்படுத்தி, தன்னை பியூமி ஹன்சமாலி என்று அறிமுகப்படுத்தி, தாம் தனிமைப்படுத்தலுக்காக அழைத்து செல்லப்படுகின்றோம் எனவும், தமக்கு மாற்று உடை கூட இல்லையென்றும், மேலதிக உடைகள் போன்றவற்றை எடுத்துச்செல்ல வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் கோரினார்.

இதன் பின்னரும் சந்திமல் ஜெயசிங்கவும் ஒரு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு மேற்கண்ட கோரிக்கையை உறுதிப்படுத்தினார்.

அமைச்சர் சரத் வீரசேகர, இது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் மற்றும் மேற்கு மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரை தொடர்புகொண்டு பேசினார். பொலிஸ்மா அதிபருக்கு தகவல் வழங்கப்பட்ட பின்னர், அவர்கள் தலங்கம பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்கள் பேருந்தில் இருக்கும்போது, வீடுகளில் இருந்து தேவையான உடைகள் உள்ளிட்ட நலன்புரி பொருள்கள் கொண்டு வரப்பட்ட பின்னர், பதுளை பசறை தனிமைப்படுத்தப்பட்ட மையத்துக்கு பேருந்து அனுப்பப்பட்டது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் பேருந்தை திரும்பி வருமாறோ, அவர்களை தனிமைப்படுத்தப்படக்கூடாது என்றோ அமைச்சரால் அறிவுறுத்தல் வழங்கப்படவில்லையென, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,இ)

## *அவன்கார்ட் கப்பல் கப்டன்*

# நியாயமற்ற காரணங்களுக்காகவே தடுத்து வைக்கப்பட்டாராம்!

### *குற்றம் சுமத்துகிறார் உக்ரேனிய வெளிவிவகார அமைச்சர்*

கொழும்பு, ஜுன் 6

அவன்கார்ட் கப்பலின் உக்ரேனிய கப்டன் ஹென்னடி ஹவ்ரிலோவ் நியாயமற்ற குற்றச்சாட்டின் கீழேயே இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் டிமிட்ரோ குலேபா குற்றம்சுமத்தியுள்ளார்.

நியாயமற்ற குற்றச்சாட்டுகளின் கீழ் 2016ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன். அவரது விடுதலைக்காக இராஜதந்திர ரீதியில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மே மாத இறுதியில் நீதிமன்றம் அவரை விடுவித்தது. அவர் இப்போது ஒடிசாவில் இருக்கிறார், என்று குறிப்பிட்டார். (ஒ,5,இ)

# மக்கள் பிரச்சினையை அரசிடம் கூறுவதானது செவிடன் காதில் ஊதிய சங்கைப் போன்றதே

## வேலுகுமார் எம்.பி விசனம்



கொழும்பு, ஜுன் 6

மக்கள் பிரச்சினைகளை அரசிடம் முன்வைப்பதென்பது செவிடன் காதில் ஊதிய சங்கு போன்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

முழு நாடும் முடக்கப்பட்ட நிலையில் உள்ளது. மக்கள் வாழ்வாதாரப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

நாடு முழுவதும் விவசாயிகள் தமது விளைபொருள்களை விற்பனை செய்து கொள்ள, சந்தை வசதியின்றித் தவிக்கின்றனர். மறுபுறம் தமது பயிர்களுக்குத் தேவையான உரம் மற்றும் கிருமி நாசினிகள் ஆகியவை இன்றித் தவிக்கின்றனர்.

கடற்றொழிலாளர்களின் நிலையும் இன்று கேள்விக்குறியாகியுள்ளது. கொழும்பு மற்றும் நீர்கொழும்பை அண்டிய பிரதேசங்களில் கடற்றொழிலில் ஈடுபடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மறுபுறமாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நிலை இவையனைத்தையும் விட மோசமான நிலையில் உள்ளது. இவ்வாறு நாடு முழுவதும் மக்கள் பிரச்சினை துளிர்விட்டு எரிகின்றது. மக்கள் தமது பிரச்சினைகளை அதிகாரிகளுக்கோ, மக்கள் பிரதிநிதிகளுக்குக்கோ, ஊடகங்களுக்கோ சொல்லிப் பயனில்லை. எனவே யாரிடம் தான் மக்கள் தமது பிரச்சினைகளை முன்வைப்பது என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசிக் கொள்வனவுக்கு நிதியில்லை என்பது பொய்

## விரும்பியோர் நிதி வழங்கலாம் என்கிறார் அஜித் நிவாட் கப்ரால்

கொழும்பு, ஜூன் 6

**கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதற்கு, தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதியுதவி வழங்க விரும்புபவர்கள் தாராளமாக உதவி செய்யலாம். அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு ஒருவருக்கொருவர் விமர்சித்துக்கொள்ளும் தருணம் இதுவல்ல.**



இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தல் மற்றும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கல் ஆகிய விடயங்களில் அரசு பொறுப்புடன் செயற்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் நிதி முகாமைத்துவத்தை நிலையான தன்மையில் பேணுவதற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தாக்கத்தின் முதலாம் அலையின்போது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட 50 லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க 25 பில்லியன் ரூபா நிதியும், இரண்டாம் அலையில் பாதிக்கப்பட்ட 50 லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க 25 பில்லியன் ரூபா நிதியும் செலவிடப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் தெரிவுசெய்யப்பட்ட 30 லட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க 15 பில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டது. புதுவருட கொரோனா கொத்தணியால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட 60 லட்சம் குடும்பங்ளுக்கு நிவாரணம் வழங்க முதற்கட்டமாக 30 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது.

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள அரசிடம் நிதி கிடையாது என ஒரு தரப்பினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்கள். தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள தேவையான நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. நிதியுதவி வழங்க விரும்புபவர்கள் அரசியல் நோக்கங்களின்றி தாராளமான உதவிகளைச் செய்யலாம். பொருளாதார நெருக்கடி நிலையை மக்கள் மீது ஒருபோதும் சுமத்தமாட்டோம் - என்றார்.

(எ-இ)

# தொழில்முறை யாசக நாடாக மாற்றம் பெறுகிறது இலங்கை

## மிகப்பெரும் இடரை நோக்கி நாடு பயணிக்கிறது என மங்கள சுட்டிகாட்டு

சுதந்திரமடைந்ததிலிருந்து இது வரை காலமும் எதிர்கொண்டிருக்காத வகையிலான பெரும் இடர் ஒன்றை நோக்கி எமது நாடு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அரசின் கொள்கைகளால்பொருளாதார ரீதியில் சரிவை எதிர்கொண்டிருப்பது மாத்திரமன்றி, சர்வதேச நாடுகளிடமிருந்தும் நாம் தனிமைப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இணையவழிக் கலந்துரையாடல் ஒன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்த நெருக்கடியான நேரத்தில் நாட்டை சரியான பாதையில் நகர்த்துவதற்கான அத்திபாரத்தை அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து இட வேண்டியது அவசியமாகும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதற்காக புதிய வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியில் நாடளாவிய ரீதியிலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இலவசமாக தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்க முடியும்

எமது நாடு இப்போது பங்களாதேஷிடம் கடனடிப்படையிலான நிதிப் பரிமாற்றத்தைச் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எமது நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் உருவான, மிகவும் வறிய நாடாகக் கருதப்பட்ட பங்களாதேஷிடமிருந்து 200 முதல் 250 மில்லியன் அமெரிக்க டொலர் வரையான மேற்படி நிதியை இலங்கை பெறவுள்ளது. தற்போதும் பங்களாதேஷுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாகும். எமது நாடு தொழில் முறையிலான யாசக நாடாக மாறியுள்ளது. அண்மையில் எமது கடற்பரப்பில் கப்பலொன்றில் ஏற்பட்ட தீப்பரவலால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில், இத்தகைய விபத்துக்கள் ஏற்படுவதால் நாம் குறிப்பிட்டளவு நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசின் பிரதிநிதி கள் சிலர் கூறுகின்றார்கள். இவற்றை நோக்கும்போது நாம் மிகப் பெரும் சமூகப் பேரழிவை நோக்கிப் பயணிப்பது புலனா கின்றது.

கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசிடம் நாம் நாட்டை ஒப்படைத்தபோது 13 ட்ரில்லியன் டொலர் கடன் காணப்பட்டது. எனினும் புதிய அரசு ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்துக்குள் 2 ட்ரில்லியன் டொலர் கடன்களைப் பெற்றுள்ளது. இலங்கை வரலாற்றில் ஒரு வருடத்தில் இத்தகைய பெருந்தொகையான கடன் பெறப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இவ்வாறு கடன் பெறப்பட்டது என்று கூறமுடியாது. ஏனெனில் அதற்கென பிறிதொரு நிதியம் இருக்கின்றது. அரசின் இந்தக் கொள்கைகள் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சிகண்டதுடன் மாத்திரமன்றி, நாம் சர்வதேச சமூகத்திடமிருந்தும் விலகியிருக்கிறோம். அரசு சர்வதேச நாணய நிதியத்திடமோ அல்லது உலகவங்கியிடமோ உதவி பெறுவதில்லை.

தனியொரு நபரின் தேவைகளுக்கு ஏற்றவாறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதாலும், இராணுவமயமாக்கல் நடவடிக்கைகள் இடம்பெறுவதாலும் எமது நாடு மூன்றாம் உலகநாடுகளையும் விட கீழான நிலையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலை தொடருமாக இருந்தால், எமது நாடு சிரியாவின் நிலையையே அடைய நேரிடும். எமது நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் நாம் அத்திவாரம் இடாமல், வீடொன்றைக் கட்டுவதற்கு முற்பட்டோம். ஆகையினாலேயே புதிதாக மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியடைகின்றன. அதனால் அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்வதற்கு அவசியமான அத்திவாரத்தை இடவேண்டும் - என்றார். (எ-இ)

# கால்நடை உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவோருக்கான அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

கொரோனா காரணமாக பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள சூழலிலும் கால்நடை உற்பத்திப் பொருள்களான பால், முட்டை மற்றும் இறைச்சியை சந்தைப்படுத்துவற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் ஹேரத் தெரிவித்துள்ளார்.

விற்பனையாளர்கள் தமது பிரதேசத்திலுள்ள பிரதேச செயலர், மாவட்டச் செயலர் மற்றும் கால்நடை உற்பத்தித் திணைக்களத்தை அணுகி இதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

இவற்றுக்கு மேலதிகமாக கால்நடைகளுக்கான மருந்துகளைக் கொண்டுசெல்வதற்கும் மேற்குறிப்பிட்ட இடங்களில் தமது அனுமதிகளைப் பெறமுடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் தற்போது வீடு வீடாக விற்பனைகளில் ஈடுபடும் மரக்கறி மற்றும் பழக்கடை உரிமையாளர்கள் தங்கள் வாகனங்களில் முட்டை மற்றும் இறைச்சியை விற்பனை செய்ய முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் கோரியுள்ளார்.

இது தொடர்பில் ஏதாவது பிரச்சினைகள் எழுந்தால், கால்நடைகள் வளங்கள் அமைச்சின் மேலதிக செயலர் நிரோசன் கமகே 077 267 2015, மருத்துவர் சாகரிகா சுமனசேகர 071 8101904, மருத்துவர் ஹேமாலி கொத்தலாவ 071 858 9004 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,இ)

# அத்தியாவசிய சேவைகள் ஜூன் இறுதியில் ஆரம்பம்

## இராஜாங்க அமைச்சர் சுசில் தகவல்

கொழும்பு, ஜூன் 6

ஜூன் மாதத்தின் இறுதி வாரத்தில் இருந்து கடுமையான சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் மீள ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை முழுமையாக இல்லாதொழிக்க முடியாது. ஒரு தரப்பினரது பொறுப்பற்ற செயற்பாடுகளாலேயே தற்போதைய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு தொலைநோக்கு, கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத் தடை தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொதுமக்களின் வாழ்வாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி உரிய தரப்பினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைய இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் இருந்து அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் கடுமையான சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய மீள ஆரம்பிக்க தீர்மானிககப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவையை மீள ஆரம்பிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் புதிதாக வகுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் பொதுப் போக்குவரத்துச் சேவை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தற்போது நாடு தழுவிய ரீதியில் பயணத்தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சிலர் தற்போதும் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. ஒரு தரப்பினரது பொறுப்பற்ற செயற்பாடுகள் அனைத்து தரப்பினருக்கும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் திட்டங்களை செயற்படுத்துவது அவசியமாகும். தற்போதைய நெருக்கடியான நிலையில் பொருளாதாரம் பாதிக்கப்பட்டால் கொரோனா வைரஸ் ஒழிப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படும்.

சுகாதாரம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை சமமான முறையில் முகாமைத்துவம்செய்ய அரசு அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளது. அரசின் செயற்பாடுகளுக்கு நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4,000 ஏக்கர் சிறுபோக செய்கைக்கு இதுவரை உரம் கிடைக்கவில்லை

## கிளி. இரணைமடு நீர்ப்பாசன விவசாய சம்மேளனம் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜூன் 6**

**கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுமார் 17 ஆயிரத்து 800 ஏக்கர் நிலப்பரப்பில், 4 ஆயிரம் ஏக்கர் பயிர் நிலங்களுக்கு இதுவரை உரம் வழங்கப்படவில்லையென இரணைமடு நீர்ப்பாசன விவசாய சம்மேளனத்தின் செயலாளர் மு. சிவமோகன் தெரித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கு கமநல சேவைகள் திணைக்களத்தின் பெரு முயற்சியால், இதுவரை சுமார் 14 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களுக்கு உரம் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் அண்ணளவாக 4 ஆயிரம் ஏக்கர் பயிர் நிலங்களுக்கு உரம் வழங்கப்படவில்லை. அந்த நிலங்களுக்குச் சொந்தமான விவசாயிகள், கமநலசேவைகள் திணைக்களத்தின் முயற்சியால் தமது சிறுபோக பயிர்ச் செய்கைகளுக்கான உரமானியம் வழங்கப்படுமென்ற நம்பிக்கையில் உள்ளனர் - என்றார். (ப-12)

# அடியோடு பெயர்த்தெடுத்து பிள்ளையார் சிலை கடத்தல்

## மூங்கிலாற்றில் சம்பவம்





முல்லைத்தீவு, ஜூன் 6

புதுக்குடியிருப்பு, மூங்கிலாறு சிவன் கோவிலில் அமைந்திருந்த பிள்ளையார் சிலை ஒன்று இனம் தெரியாத நபர்களால், பெயர்த்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட உடையார்கட்டு மூங்கிலாறு பகுதியில் பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன்கோவில் வளாகத்தில் பரிவார மூர்த்தியாக இருந்த பிள்ளையார் சிலையே இவ்வாறு பயணக்கட்டுப்பாடு நிலவும் வேளையில் இனம் தெரியாத நபர்களால் பெயர்த்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. கருங்கல்லினாலான இந்தப் பிள்ளையார் சிலை அண்மையிலேயே குறித்த கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

சிலை பெயர்த்து எடுத்துச்செல்லப்பட்டமை தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை முறைப்பாட்டை பதிவு செய்ய முயற்சிசெய்த போதும், புதுக்குடியிருப்பு பொலிஸாரால் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படாது இழுத்தடிப்பு செய்யப்பட்டு, மாலையே முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சிலை பெயர்க்கப்பட்டமை தொடர்பான முறைப்பாட்டை பெற்றுக் கொள்ள பொலிஸாரால் இழுத்தடிப்புச் செய்யப்பட்டமை மற்றும் இராணுவ, பொலிஸ் பிரசன்னம் மிகுந்து காணப்படும் முடக்க நிலையில் சிலை பெயர்த்தெடுத்துச் செல்லப்பட்டமை என்பவை மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன. (ப-115)

# பழையமுறிகண்டி - அக்கராயன் பிரதான வீதியைச் சீரமையுங்கள்

## துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 6


முல்லைத்தீவு பழையமுறிகண்டியில் இருந்து அக்கராயன் செல்லும் வீதியைச் சீரமைத்து போக்குவரத்துக்கு வழியை ஏற்படுத்துமாறு துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரதான போக்குவரத்து வீதியாக இந்த வீதி காணப்பட்டது. ஆனால் மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களுக்குச் சென்று, அங்கிருந்து திரும்பும்போது குறித்த வீதியை பற்றைகள் மூடிவிட்டன.

இதன் காரணமாக பழையமுறிகண்டி கிராமத்தில் இருந்து அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு மக்கள் செல்ல முடியாத நிலைமை உள்ளது. பிரதேச சபை அமர்வுகளிலும் குறித்த வீதி சீரமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். முதற்கட்டமாக வீதியின் இரு புறத்திலும் உள்ள பற்றைகளைத் துப்புரவுசெய்வதன் மூலம் போக்குவரத்து வசதி ஏற்படும். மூன்று கிலோமீற்றர் வீதியைச் சீரமைப்பதன் மூலம் அக்கராயனில் இருந்து பழையமுறிகண்டி ஊடாகப் புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் ஆகிய கிராமங்களுக்கான பஸ் சேவைகளை நடத்த முடியும்.

பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்கள் கடந்த பத்து வருடங்களாக போக்குவரத்து வசதிகளற்ற கிராமங்களாகக் காணப்படுகின்றன. வீதிகளைச் சீரமைப்பதன் மூலம் மக்கள் போக்குவரத்தில் இலகுவாக ஈடுபடுவார்கள் - என்றார். (ப-13)





*சீரற்ற காலநிலை*

# நீரேரிக்குள் பாய்ந்தது கப் ரக வாகனம்

அச்சுவேலி, ஜூன் 6

சீரற்ற வானிலையுடன் கூடிய மழை காரணமாக அச்சுவேலி வல்லை பாலத்தில் வாகனம் ஒன்று நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது. இதன்போது சாரதி காயமடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்றுகொண்டிருந்த கப் ரக வாகனம் பாலத்தில் ஏற்பட்ட சறுக்கல் தன்மை காரணமாக கடல் நீரேரிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

ஒலுமடு நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய சாரதியே விபத்தில் காயமடைந்தார்.

நெடுங்கேணி பகுதியில் இருந்து பருத்தித்துறைக்கு வெங்காயம் ஏற்றுவதற்கு வந்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-27)

# அனுமதியின்றி கடலட்டை பிடித்த 29 பேர் குடாப்பரப்பு கடலில் கைது

வடமராட்சி, ஜூன் 6

அனுமதியின்றி கடலட்டை பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் 29 பேர் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து 11 படகுகள் மற்றும் வெளியிணைப்பு இயந்திரங்கள், கடலட்டை என்பவையும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு குடாரப்பு கடலில் நேற்றுமுன்தினம் கடற்படையால் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அண்மைய நாள்களாக வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில், குடாரப்பு மற்றும் மாமுனை ஆகிய இடங்களில் கடற்கரையில் வாடி அமைத்து கடலட்டை பிடித்தல் தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களே இவ்வாறு கைது



செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் யாழ்பாணம் மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் இருந்து வந்து தொழிலில் ஈடுபட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்ட நபர்கள் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைப்பற்றப்பட்ட படகுகள் மற்றும் உபகரணங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ப-113)

# 14 வட்டாரங்களில் ஆதனவரியை பெற கரைச்சி சபை நடவடிக்கை

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின், ஆளுகைக்குட்பட்டு, இதுவரை ஆதனவரி பெறப்படாதுள்ள 14 வட்டாரங்களில் அதைப் பெறுவதற்கு, வட்டார ரீதியான பதிவுகளை சீர்செய்யும் நடவடிக்கையை கரைச்சி பிரதேச சபை முன்னெடுத்துள்ளது.

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபையின், ஆளுகைக்குட்பட்ட 21 வட்டாரங்களில் இதுவரை 7 வட்டாரங்களிலேயே பிரதேச சபையால் ஆதனவரி பெறப்பட்டு வந்தது. தற்போது வர்த்தமானி மூலம் மிகுதி 14 வட்டாரங்களிலும் ஆதனவரி பெறுவதற்கான அனுமதி வெளியிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி ஆதனவரியைப் பெறுவதற்கான நடவடிக்கையை கரைச்சி பிரதேச சபை முன்னெடுத்துள்ளது. (ப-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடக்கப்பட்ட கிராமங்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணம்

*புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, ஜூன் 6

புதுக்குடியிருப்பில் முடக்கப்பட்ட கிராமங்களுக்கு இரண்டாம் கட்ட நிவாரணப் பணிகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் 9 கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன. இதில் 6 ஆயிரத்து 460 குடும்பங்கள் அடுத்த கட்ட நிவாரணத்துக்கு தகுதிபெற்றுள்ளன. அந்தக் குடும்பங்களுக்கான முதற்கட்ட நிவாரணப் பணிகள் இன்றுடன் நிறைவுபெறவுள்ளன. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலேயே மக்களுக்கான நிவாரணப் பணிகளை வழங்கியுள்ளோம். இந்த மக்களுக்கான 5 ஆயிரம் ரூபா நிவாரணங்களை பிரதேசத்தில் உள்ள இரண்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் ஒரு நாளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட பொதிகளையே தந்தனர். புதுக்குடியிருப்பு கூட்டுறவுச் சங்கத்துக்கு உதவியாக பிரதேச செயலகம் ஊடாக 2 ஆயிரம் பொதிகளை பொதியிட்டுக் கொடுத்துள்ளோம். பட்டதாரி பயிலுநர்கள் 50 பேரை வைத்து இந்தப் பொதிளை பொதிசெய்தோம் இதற்கு 6 நாள்கள் தேவைப்பட்டன. வடக்கில் அதிகளவான நிவராணம் கொடுக்கும் பிரதேசமாக புதுக்குடியிருப்பு காணப்படுகின்றது. இந்த நிவாரணப் பணிகள் நிறைவடைவதைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட நிவாரணங்களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார். (ப-19)

# முல்லை. மாவட்டத்துக்கும் தடுப்பூசியை வழங்குங்கள்

## கரைதுறைப்பற்று சபை உறுப்பினர் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 6**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்துக்கொண்டு செல்கின்ற நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கும் தடுப்பூசிகளை வழங்குமாறு கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் எம்.விக்னா கோரிக்கை விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாள்தோறும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையின் விளைவே இன்று எமது உறவுகளை கொரோனா துரத்திக் கொண்டு இருக்கின்றமைக்கு காரணம். ஆடைத் தொழிற்சாலையை மூடுமாறு தெரிவித்தும், அதை நடைமுறைப்படுத்தாத அதிகாரிகளின் அசமந்தத்தால் மீண்டும் மீண்டும் மக்கள் துன்பத்தில் சிக்கியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் வினோ, வடக்கு மாகணத்துக்கு 50 ஆயிரம் தடுப்பு ஊசிகள் வழங்கப் பட்டும் அதனை வன்னி மாவட்டத்துக்கு பகிர்ந்தளிக்கவில்லை என்று ஊடகங்கள் ஊடாக பகிரங்கப்படுத்தினார். ஆனால் இன்றுவரை எந்தவித முடிவுகளும் கிடைக்க வில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தை புறம் தள்ளிவைக்காதீர்கள். பல அழிவுகளைச் சந்தித்த மாவட்டம் முல்லைத்தீவு. இங்கு இருக்கின்றவர்களைக் காப்பற்றிக்கொள்வதற்காக அனைவரும் முன் வாருங்கள். பசியாலும், பட்டினியாலும் பலர் துன்பப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்தாவது முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் தடுப்பூசிகளை வழங்கவேண்டும் - என்றார். (ப-19)

# கிளினிக் நோயாளர்களின் வீடு தேடி மருந்துப் பொதி

*யாழ். போதனா தீர்மானம்*

யாழ் போதனா மருத்துவமனையின் கிளினிக் பிரிவில் மருத்துவ சேவையைப் பெறும் நோயாளர்களுக்கான மருந்துப் பொருள்களை நேற்றுமுதல் தபால் மூலம் அனுப்பி வைக்கத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் பதில் பணிப்பாளர் எஜ்.ஶ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா மருத்துவமனை சிகிச்சைக் களத்தில் மருத்துவ சேவையைப் பெறும் நோயாளர்களை தற்போது நாட்டில் நிலவும் அதிகரித்த கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே. யாழ். போதனா மருத்துவமனையின் கிளினிக் பிரிவில் மருத்துவ சேவையைப் பெறும் நோயாளர்கள் தமக்குரிய மருந்துப் பொருள்களை, 021 221 4249, 021 222 2261, 021 222 3348 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்வதன் மூலம் தபால் மூலம் வீடுகளில் இருந்தவாறே பெற்றுக்கொள்ள முடியும். எனவே பொதுமக்கள் குறித்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (ப-20)



# 25 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

முல்லைத்தீவு,ஜூன் 6

முல்லைத்தீவு குமுளமுனை கிராமத்தைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

கரைதுறைப் பற்று பிரதேச சபை உறுப்பினர் இ. கவாஸ்கரின் வேண்டுகோளையடுத்து உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் நிதி அனுசரணையுடன் இவ் உதவிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.தவராசா, உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் எஸ்.மாதவன் மற்றும் சமூக ஆர்வலர் எஸ்.யூட்சன் ஆகியோர் கலந்துகொண்டு பொருள்களை பயனாளிகளிடம் கையளித்தனர். (ஜ-13)

# தனிமைப்படுத்தப்பட்ட வீட்டுக்கு அடையாளப்படுத்தல் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 6

புங்குடுதீவு பிரதேசத்தில் தனிமைப்படுத்தப்பட்டோர் உள்ள வீட்டுக்கு 'தனிமைப்படுத்தல் ஸ்டிக்கர்' ஒட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆளும் கட்சி அரசியல்வாதியின் உறவினரின் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் பணியாளரது வீட்டுக்கே இவ்வாறு ஸ்டிக்கர் ஒட்டப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

மேற்படி தொலைக்காட்சி நிறுவன பணியாளர்கள் சிலருக்கு அண்மையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து அங்கு பணிபுரிந்த மேற்படி நபர் புங்குடுதீவில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார். அவரது வீடு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என கிராம அலுவலரின் பதிவுகளில் உள்ளபோதும், பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தனிமைப்படுத்தல் ஸ்டிக்கர் ஒட்டப்படவில்லை.

இந்த நிலையில் அவரது குடும்பத்தினர் சுற்றாடலில் நடமாடித் திரிந்துள்ளனர் என அந்தப் பகுதி மக்கள் குற்றச்சாட்டு முன்வைக்கின்றனர். இதேவேளை இரண்டு நாள்களுக்கு முன்னர் வெளியான பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளில் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணிபுரிந்தவரின் பெற்றோருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அந்தப் பகுதியில் நடமாடித் திரிந்தமையால் ஏனையோருக்கும் தொற்றுப் பரவியிருக்கலாம் என்ற அச்சம் வெளியிடப்படுகின்றது.

'வேண்டுமென்றோ அல்லது அழுத்தங்களாலோ தனிமைப்படுத்தல் ஸ்டிக்கர் ஒட்டப்படாமல் விடப்படவில்லை. அந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் புங்குடுதீவு மாத்திரமல்ல நயினாதீவு உள்ளிட்ட வேறு இடங்களுக்கும் கடமையாற்றுகின்றார். அதிகரித்த வேலை காரணமாகவே தனிமைப்படுத்தல் ஸ்டிக்கர் ஒட்டப்படவில்லை. மேற்படி வீடு மாத்திரமல்ல வேறு சில வீடுகளுக்கும் அவ்வாறு ஸ்டிக்கர் ஒட்டப்படவில்லை. ஆனால் தனிமைப்படுத்தலில் அவர்களை இருக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவுறுத்தியிருந்தார்' என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ.5,26)

# சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் யாழில் சோதனை

யாழ்ப்பாணம், ஜூன் 6

பயணத்தடை அமுலில் உள்ள வேளையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மைய நாள்களில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், வீதியில் பயணிக்கும் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் நேற்று பொலிஸாரால் சோதனைசெய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையிலான பொலிஸ் மோட்டார் சைக்கிள் அணியினரால் யாழ்.நகரப் பகுதிகளில் இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற்றது. விசேட ரோந்து நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டனர். (ப-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசியை மன்னார் மக்களுக்கும் வழங்குவதற்கு அரசு முன்வரவேண்டும்

## மன்னார் ஆயர் கோரிக்கை



**மன்னார், ஜூன் 6**

**கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள இந்தக் கால கட்டத்தில், மன்னார் மக்களும் அதிகமாகத் தடுப்பூசிகளைப் பெறுவதற்கு இலங்கை அரசு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் இந்த கொவிட் பெரும் தொற்றுக் காலத்திலே வாழ்ந்து வருகின்றோம். இக் காலகட்டம் எமக்குப் பல சவால்களைத் தந்துள்ளது. அந்தச் சவால்களால் நாங்கள் முடக்கப்பட்ட மக்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஏனெனில் இந்தத் தொற்று விரைவாகப் பரவும் ஒரு நிலையை நாங்கள் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் தான் பயணங்களை மேற்கொள்ளக்கூடியதாக இன்று இருக்கின்றது. இந்தக் காலகட்டத்திலே நாங்கள் இலங்கை அரசிடம் எதிர் பார்த்திருப்பது எங்களுக்கு இன்னும் அதிகமாகத் தடுப்பூசிகளைப் பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும். அதற்கமைய அரசு பல முயற்சிகள் எடுத்து, பல இடங்களில், விசேடமாக தொற்றுக் கூடுதலாகக் காணப்படும் இடங்களில், பொதுமக்களுக்குத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுத்து வருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் அதிகளவு கொரோனா நோயாளர்கள் இனம் காணப்படாவிட்டாலும், நாங்களும் இந்த தடுப்பூசிகளை நிறைவாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். பொது மக்களிடையே இன்னும் தடுப்பூசியைப் பெறாமல் எத்தனையோ பேர் உள்ளனர். அவர்கள் தடுப்பூசிக்காக ஆவலோடு காத்திருக்கின்றனர். அரசு இந்தத் தடுப்பூசியை மக்களுக்கு வழங்கும்போது அதைப் பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்போது, அது அவசியமில்லை என்று மக்கள் விட்டு விடக்கூடாது. கட்டாயமாக இந்த நோயிலிருந்து விடுதலை பெறுவதற்கு நாங்கள் அனைவரும் இந்தத் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள வேண்டும். அதனூடாகப் பாதுகாப்பைப்பெற வேண்டும். அது நூற்றுக்கு நூறு பாதுகாப்பாக இல்லாமல் இருக்கலாம். ஆயினும் அது எம்மை தற்போது பாதுகாக்கும் சிறந்த காரணியாக இருப்பதால் நாங்களும் இந்த தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (பு- 56)



# சுகாதார விதிமுறைகளை மீறி வவுனியாவில் திருமண நிகழ்வு

## திருமண மண்டபத்துக்கு 'சீல்'

வவுனியா, ஜூன் 6

வவுனியாவில் சுகாதார அறிவுறுத்தல்களை மீறி திருமண நிகழ்வு ஒன்று இடம்பெற்றதால், திருமண நிகழ்வு இடம்பெற்ற மண்டபம் சுகாதாரப் பிரிவினரால் 'சீல்' வைத்து மூடப்பட்டது.

வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள ஞானவைரவர் ஆலய வீதியில் அமைந்துள்ள திருமண மண்டபமே நேற்றுமுன்தினம் இவ்வாறு மூடப்பட்டது. மன்னாரைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கும், வவுனியாவைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் குறித்த மண்டபத்தில் திருமணம் நடைபெற்றுள்ளது. இதன்போது சுகாதார அறிவுறுத்தல்களை மீறி அதிகளவான உறவினர்கள், நண்பர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். அத்துடன், நிகழ்வில் கலந்துகொண்டவர்களும், சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த இடத்துக்குச் சென்ற சுகாதாரப் பிரிவினர் அங்கு கூடியிருந்தவர்களை கடும் எச்சரிக்கை செய்து, அங்கிருந்து வெளியேற்றினர். திருமண வீட்டாரையும் எச்சரித்தனர். சுகாதார அறிவுறுத்தல்களை மீறி மண்டபத்தை வழங்கி மக்களை ஒன்று கூட்டிய குற்றச்சாட்டுக்காக திருமண நிகழ்வு இடம்பெற்ற மண்டபத்தை 'சீல்' வைத்து, மறுஅறிவித்தல் வரை மூடினர். (பு-18)

# ஆடைத் தொழிற்சாலைகளால் இந்துபுரம் கிராம மக்கள் அச்சம்

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 6

கிளிநொச்சியின் ஆடைத் தொழிற்சாலைகளால், முல்லைத்தீவின் திருமுறிகண்டி, இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவு மக்கள் கொவிட் - 19 தொற்றின் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் செ.பிறேமகாந் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆடைத் தொழிற்சாலைகளுக்கு நாள்தோறும் பெருமளவான, தொழிலாளர்கள் பஸ்களில் பணிக்கு வருகின்றார்கள். இதனால் திருமுறிகண்டி, இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவில் வாழ்கின்ற ஆயிரத்து 200 வரையான குடும்பங்கள் தங்களுடைய கிராமங்களில் கொவிட் - 19 தொற்றுப் பரவல் ஏற்பட்டுவிடும் என அச்சம் தெரிவிக்கின்றனர். உயரதிகாரிகளிடமும் இவ்விடயத்தை தெரியப்படுத்தும்படி என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மக்களின் அச்சத்தில் நியாயம் இருக்கின்றது. காரணம் பயணத் தடைகள் ஏற்படுத்தப்பட்டு மக்கள் வீடுகளில் முடக்கப்பட்டுள்ள நிலையில் ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் ஆயிரக்கணக்கில் தொழிற்சாலைகளுக்கு வருகைதருவதால், இந்துபுரம் கிராமத்தில் தொற்றுப் பரவாது என்பதை சுகாதாரத் தரப்பினர் உறுதிசெய்ய வேண்டும். கிராமம் ஒன்றில் ஒரு நோயாளி இனங்காணப்பட்டாலே கிராமமே முடக்கப்படும். இவ்வாறான நிலையில் ஆடைத் தொழிற்சாலையில் 270க்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். எனவே திருமுறிகண்டி, இந்துபுரம் கிராம மக்கள் கொவிட் - 19 தொடர்பாக அச்சம் வெளியிடுவதில் நியாயம் உள்ளது - என்றார். (பு-13)



# முழுமையாக முடங்கியது வவுனியா சகாயமாதாபுரம்

வவுனியா, ஜூன் 6

வவுனியா, சகாயமாதாபுரம் பகுதியில் பயணக் கட்டுப்பாடுகள் கடுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

வவுனியா சகாயமாதாபுரம் பகுதியில் கொரோனாத் தொற்று நோயாளர்கள் சிலர் அண்மையில் அடையாளம் காணப்பட்டதை அடுத்து, அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய பலர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றுக் குறித்த பகுதிக்குச் சென்ற வவுனியா சுகாதாரப் பிரிவினர் நிலைமை தொடர்பாக ஆராய்ந்ததுடன், கிரா மத்துக்குள் உட்பிரவேசிக்கும் பிரதான வாயில்களில் பொலிஸாரையும், இராணுவத்தினரையும் கடமையில் ஈடுபடுத்தியுள்ளனர். அத்தியாவசிய தேவையைத் தவிர்ந்த ஏனையவர்கள் கிராமத்துக்குள் செல்வதற்கும், கிராமத்தில் இருந்து வெளிச் செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (பு-110)

## நானாட்டானில்

# எழுமாறான பி.சி.ஆர்.; இருவருக்குத் தொற்று

மன்னார்,ஜூன் 6

மன்னார் நானாட்டானில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாம் திகதி380 பேருக்கு எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் இரண்டு பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் மன்னார் பெரிய கடை மற்றும் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏனையவர்களின் பி.சி.ஆர். முடிவுகள் கிடைக்கப்பெறவில்லை. எனவே பிரதேச மக்கள் தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை தவிர்த்து சுயகட்டுப்பாடுகளுடன் செயற்படவேண்டும் என்று நானாட்டான் பிரதேச மருத்துவ அதிகாரி ரூபன் தெரிவித்துள்ளார். (ஐ-213)

# ஊசி மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கும் தடுப்பூசி

## யாழ். போதனாவில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 6

சிலவகை மருந்துகள் மற்றும் ஊசி மருந்துகள் ஆகியவற்றுக்கு ஒவ்வாமை உடையவர்கள் மற்றும் வேறு ஆபத்துக்குரிய நோய் நிலைமை உடையவர்களை அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள மருத்துவமனைகளுக்கு அழைத்து கொவிட்19 தடுப்பூசி வழங்கும் திட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, யாழ்ப்பாண மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை ஆகியவற்றில் யாழ். போதனா மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் ஆகியோர் இணைந்து குறித்த தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை முன்னெடுத்தனர். இதேவேளை சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறை ஆகிய ஆதார மருத்துவமனைகளிலும் இவ்வாறு தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. கொவிட்-19 தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ள வந்தவர்களுக்கு மருத்துவர்களால் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் மருந்து ஏற்றப்படுகிறது. பெருமளவானோர் கொவிட்19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள மருத்துவமனைகளுக்கு வந்ததை அவதானிக்க முடிந்தது. (பு-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும் மழை காரணமாக

# தடுப்பூசி செலுத்தும் பணிகளில் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 6

**நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக தடுப்பூசி செலுத்தும் திட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**

எனினும், எந்தவொரு மாவட்டத்திலும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இடைநிறுத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேல் மாகாணம், குருநாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள தடுப்பூசி மையங்கள் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக சில சிக்கல்களை எதிர்கொண்டுள்ளன என்றும், சில பகுதிகளில் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளமையால் அந்தந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தடுப்பூசி மையங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். எனவே, நாடு இயற்கை அனர்த்தங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், மக்களைத் தடுப்பூசி செலுத்திக்கொள்ள அழைக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் காலநிலை அடுத்த இரண்டு நாள்களில் இயல்புக்குத் திரும்பும் என எதிர்பார்க்கிறோம் எனவும், அதன் பின்னர் தடுப்பூசித் திட்டத்தை சுமுகமாக முன்னெடுக்க முடியும் என்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் தடுப்பூசி வழங்கும் பணிகள் தற்போது மேல் மாகாணம், யாழ்ப்பாணம், மாத்தறை, குருநாகல், காலி மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. இதனிடையே ஜூன் 8 முதல் மேலும் 12 மாவட்டங்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என அரசு அறிவித்துள்ளது. (ம-22)

## மனித சமூக ஆரோக்கியத்துக்கு துணிச்சல் கொள்கை வேண்டும்

### கூறுகின்றார் ஜனாதிபதி கோத்தாபய



கொழும்பு, ஜூன் 6


மனித சமூகத்தின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க, உலகெங்கிலும் உள்ள அரசுகள், துணிச்சலான கொள்கைகளைப் பின்பற்றத் தயங்கக்கூடாது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

இத்தகைய கொள்கைகள், சூழலியல் பாதுகாப்பை ஆதரிப்பதுடன், உயிர்ப் பல்வகைமை அழிவை எதிர்த்துப் போராட உதவ வேண்டும்.

அத்தோடு, மக்கள் தங்கள் பொருளாதார அபிலாஷைகளை பல்வேறு பேண்தகு வழிகளில் அடையக்கூடியனவாகிலும் அவை இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இத்தாலியின் ரோம் நகரில் இடம்பெற்ற உலக உணவுப் பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் 48ஆவது கூட்டத்தொடரின் விவசாய சூழலியல் நிகழ்வில் நேற்றுமுன்தினம் வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

முடிவுகளை எடுக்க நாம் தயங்கினால், அத்தியாவசிய முன்னெடுப்புகள் எப்போதும் கலந்துரையாடல் மட்டத்தில் மட்டுமே சுருங்கியிருக்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (த-இ)



## எரிந்த கப்பல் தொடர்பில் சி.ஐ.டி. துரித விசாரணை

கொழும்பு, ஜூன் 6

எக்ஸ்பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பல் தொடர்பிலான குற்றவியல் விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டி.யின் சிறப்புக் குழு, கப்பலின் கப்டனான ரஷ்ய நாட்டு பிரஜைக்கும், கப்பல் நிறுவனமான எக்ஸ்பிரஸ் பீடர்ஸ் மற்றும் அந்தக்கப்பலின் இலங்கை பிரதிநிதியான சீ கன்சோர்டியம் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றுடன் பகிர்ந்த மின்னஞ்சல்களை விஷேடமாக ஆராய்ந்து வருகின்றது. கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி சிங்கப்பூரிலிருந்து எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பயணத்தை ஆரம்பித்தது முதல், கப்பல் நிறுவனம் கப்டனுக்கு வழங்கிய ஆலோசனைகள், கப்பலின் கெப்டன் கப்பல் நிறுவனத்திடமும், அதன் இலங்கை முகவரிடமும் முன்வைத்த கோரிக்கைகள் குறித்த மின்னஞ்சல்களில் அடங்கியுள்ளமையால் அவை மிகக் கவனமாக ஆராயப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கப்பலில் குறித்த நைற்றிக் அமிலக் கொள்கலன் வைக்கப்பட்டிருந்த இடம், அதன் கசிவு அவதானிக்கப்பட்ட விதம், குறித்த கொள்கலனுடன் இருந்த ஏனைய கொள்கலன்கள், நைற்றிக் அமிலம் பொதி செய்யப்பட்டிருந்த விதம் ஆகியவை தொடர்பில் பூரண விசாரணைகள் குறித்த கப்பலின் பிரதம அதிகாரியிடம் விசாரிக்கப்பட்டுள் என.

கடற்படையினரின் உதவியுடன் கடலோர பாதுகாப்பு படைக்கு சொந்தமான ' சாம ஆரக் ஷா' எனும் கப்பலில் விசாரணைகளுக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சரின் கீழ் 10 சி.ஐ.டி. அதிகாரிகளும் அரச இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்கள அதிகாரிகளும் சென்று குறித்த கப்பலை பார்வையிட்டுள்ளனர். - என்று தெரிவிக்கப்படுகிறது. (த-இ)

## கப்பல் விபத்தால் ஏற்பட்ட இழப்பை நட்டஈட்டால் நிவர்த்திக்க முடியாது!

### அகில இலங்கை துறைமுக ஊழியர் பொது ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஜூன் 6

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகே விபத்துக்குள்ளான எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் நாட்டின் கடல் வளத்துக்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்பை நட்டஈட்டால் மதிப்பிட முடியாது. இந்த விடயத்தில் ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழு அமைத்து விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம். இவ்வாறு அகில இலங்கை துறைமுக ஊழியர் பொது ஒன்றியம் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இந்த விபத்தின் காரணமாக மீன்பிடி கைத்தொழிலுக்கும், கடற்கரை பிரதேசத்தை சூழ்ந்த சுற்றுலாத் துறை சேவை கைத்தொழிலுக்கும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த விபத்துத் தொடர்பில் இரு தரப்பும் தெரிவிக்கும் கருத்துக்கள் முன்பின் முரணாக உள்ளன. இந்த விபத்தின் காரணமாக நாட்டின் கடல் வளத்துக்கும், கடல் வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்டுள்ள பேரழிவை நட்டஈட்டால் மாத்திரம் மதிப்பிட முடியாது - என்றுள்ளது. (எ-இ)

## இணையவழி திசைமுகப்படுத்தல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் 2019/2020ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான இணையவழி திசைமுகப்படுத்தல் செயலமர்வு எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

2019/2020ஆம் கல்வி ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டு, பல்கலைக்கழகத்தில் அனுமதிக்காகப் பதிவு செய்துள்ள சகல மாணவர்களுக்கும் அவர்களின் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு திசைமுகப்படுத்தல் செயலமர்வுக்கான இணைப்பு விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அனுமதிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது. (ம-20)

## பேர்ள் கப்பல் விபத்தின் பாதிப்பை மதிப்பிட பிரிட்டன் தொழில்நுட்பம்

### தூதரிடம் கோரிக்கைவிடுத்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 6

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பரவலால் தற்போது சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை மதிப்பீடு செய்வதற்கான நவீன தொழில்நுட்ப உதவிகளை பிரிட்டன் வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சகோரிக்கை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டனுக்கும் இடையே நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்பிலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அரசால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்றிட்டங்களுக்கு வரவேற்புத் தெரிவித்த பிரிட்டன் தூதுவர், தடுப்பூசி வழங்கல் செயற்றிட்டத்துக்கு வழங்கக்கூடிய உதவிகள் தொடர்பிலும் கருத்து வெளியிட்டுள்ளார். எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பரவலால் தற்போது சூழலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை மதிப்பீடு செய்வதில் பிரிட்டன் தொழில்நுட்பத்தின் உதவியைப் பெற்றுத் தர வேண்டும் என்று ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

அதேநேரம், ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, காணி விவகாரம் உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வைப்பெற்றுக் கொடுப்பதற்கு அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 25 . 06 . 1952



விண்ணில் 07 . 05 . 2021

### அமரர் கந்தையா இந்திராணி (தேவி)

பொன் மலர்ந்த முகமும்
பொன்சிரிப்பும் கொண்டவளே !
மீளாத்துயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ !
கலையாத நினைவுகளுடன் உதிரும் கண்ணீர் கொண்டு
அதிர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய
எம் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம் .
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!


அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.

கடந்த 07.05.2021 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி, ஊடகங்கள் மூலமும், மலர் வளையங்கள், அஞ்சலிப் பிரசுரங்கள், அஞ்சலிப் பதாகைகள் வாயிலாகவும் இறுதி அஞ்சலி நிகழ்வின் மூலமாகவும் அனுதாபங்களைக் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமாரந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்றைய முப்பத்தோராம் நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வா வீதி,
கைதடி வடக்கு, கைதடி.

குடும்பத்தினர்.
077 273 4277

## மரண அறிவித்தல்



### சிதம்பரன் திருஞானசிவம்

(முன்னாள் நீர்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)

கைதடி மத்தி, குமரநகர் கைதடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரன் திருஞானசிவம் (முன்னாள் நீர்பாசன திணைக்கள உத்தியோகத்தர்) அவர்கள் கடந்த (04.06.2021) வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற சிதம்பரன் யோகம் தம்பதியரின் புதல்வனும், சரவணமுத்து தையல்முத்து தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி ராஜேஸ்வரியின் (முன்னாள் சேதுகாவலர் வித்தியாலய அதிபர்) அன்புக் கணவரும், அர்ச்சுதன், கோபிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான செல்வராசா, சூரியகுமார், பூபாலசிங்கம், கிருபாமூர்த்தி மற்றும் மங்களேஸ்வரன், இன்பதேவி, இன்பசோதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சரஸ்வதி, கமலேஸ்வரி, ஜெயமதி, வீரசிங்கம், தாமோதரம் பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊதல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 05 . 1944



இறப்பு 31 . 05 . 2021

### திரு. வைத்திலிங்கம் துரைராஜலிங்கம்

டச்சு வீதி, வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கு சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் துரைராஜலிங்கம் கடந்த (31.05.2021) அன்று காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் (சின்னத்துரை) இரத்தினம் தம்பதியரின் பாசத்திற்குரிய மூத்த புதல்வனும், வல்லிபுரம் ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திராதேவியின் பாசமிகு கணவரும், கிருபாகினி (ஜேர்மனி), கிரிதரன் (லண்டன்), கிரிஷாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத் தந்தையும், பாஸ்கரன், சபிதா, கம்ஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தாட்ஷாயினி, திலக்ஷன், சாகித்தியா, கேஷிகன், ஹரின், விஷ்னிகா ஆகியோரின் அன்புப் பேரனும், இந்துமதி, தர்மலிங்கம், செல்வநாயகம், தவமலர், கமலாதேவி, அற்புதம், சற்குணநாதன், கந்தசாமி, புஸ்பவதி, சிவலோகநாதன், சக்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரரும், விக்கினேஸ்வரன், வில்வரத்தினம், விக்கினேஸ்வரி, உதயகுமார், ஜெயரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுன்னாகத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (06.06.2021) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் காலை 8.30 மணியளவில் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
021 224 0445

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 01 . 1937



இறப்பு 29 . 05 . 2021

### அமரர் இளையதம்பி கைலாயநாதன்

யாழ். மூளாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கைலாயநாதன் அவர்கள் 29-05-2021 சனிக்கிழமை அன்று அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற இளையதம்பி (சட்டத்தரணி), சிவநேசதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஏகாம்பரநாதன் (சட்டத்தரணி), சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், புஷ்பராணி (மலர்) அவர்களின் அன்புக்கணவரும்,

கிருஷ்ணராஜா(கிளிநொச்சி), காலஞ்சென்ற சோமாஸ்கந்தா, தியாகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இதயராணி, சாரதாதேவி, விஜயசுந்தரி, காலஞ்சென்றவிவேகவதி, இராஜநாதன், யோகராணி, பாஸ்கரதேவி கனகசபாநாதன், ருக்மணிதேவி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற யோகரட்ணம், சரஸ்வதி, காலஞ்சென்ற நடராஜா, காலஞ்சென்ற நரேந்திரன், வரதலஷ்மி, ஆறுமுகம், கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகலனும், மேகலா, ராஜ்குமார், ரவிகுமார், பிரசாந்தி, மதனகுமாரா, சர்மிஷ்டா, காயத்திரி, காருண்யா, கணநாதன், வினோதினி, கலைவாணி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், விவேகரத்தினம், யோகவதி, காலஞ்சென்ற யோகதேவி விவேகானந்தன், யோகரஞ்சிதம், சிவகுமார் கணேஷ்குமார் சாரதா, நந்தகுமார் ரவீந்திர குமார், உமா, ஈஸ்வரி, பாலகௌரி, நரேந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அரவிந்தன், ஷ்யாமா, மீரா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 30-05-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். அன்னாரை நினைவுகூர்ந்து 06-06-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 06.30 மணிக்கு (இலங்கை நேரம்) சந்திப்பு நடைபெறும்.

**தகவல்: குடும்பத்தினர்**

ZOOM சந்திப்புக்கான இணைப்பு:
https://tinyurl.com/
Memorial-Kailayanathan
ZOOM Meeting ID : 874 1647 4956

தொடர்புகளுக்கு
மதனகுமாரா சோமாஸ்கந்தா - பெறாமகன்
ராஜ்குமார் - பெறாமகன்
ரவிகுமார் - பெறாமகன்
கிருஷ்ணராஜா - சகோதரன் +94 71 316 7630

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விஷப்பாம்பின் அச்சுறுத்தலுக்குள் தூய்மைப்படுத்தப்படும் வாய்க்கால்


யாழ்ப்பாணம், ஜூன் 6

யாழ்ப்பாணம் மாநகர சபையால் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள சில வாய்க்கால்களை தூய்மைப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நேற்றையதினம் பணிகளின்போது கொடூர விஷப்பாம்புகளும் வாய்க்காலூடாக வெளிவந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பயணத்தடை காலத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் சில வாய்க்கால்களைத் தூய்மைப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நீண்டகாலமாகத் துப்புரவுசெய்யாமல் இருக்கும் வாய்க்காலொன்று நேற்று துப்புரவுசெய்வதற்காகத் திறக்கப்பட்டது. இதன்போதே விஷப்பாம்புகள் வெளிவந்துள்ளன.

இதேவேளை குறித்த பணிகளை யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் மற்றும் உறுப்பினர் வ.பார்த்தீபன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (ம-26)





# நயினை ஆலயத்தில் ராஜநாகங்கள் காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 6

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பிகை ஆலயத்தில் நேற்று இராஜநாகங்கள் இரண்டு தடவைகள் காட்சி கொடுத்துள்ளன.

நேற்றுக் காலை, மாலை என்று இரண்டு தடவைகள் இந்த ராஜ நாகங்கள் ஆலயத்தில் காட்சி கொடுத்துள்ளன.

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பிகை ஆலயத்தின் திருவிழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனினும் கொரோனாப் பெருந்தொற்று மற்றும் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள பயணத் தடை உத்தரவு காரணமாக வழக்கம் போல் திருவிழாவை கோலாகலமாக நடத்த முடியாத நிலையுள்ளது. இத்தகையதொரு பின்னணியில் நேற்று ராஜநாகங்கள் காட்சி கொடுத்துள்ளமையானது பக்தர்ளுக்கு உணர்ச்சிபூர்வமான விடயமாக அமைந்துள்ளது. (ம)

## 3 சிறுவர்கள்...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 7 வயது இரட்டைச் சகோதரர்கள், 4 வயது, 7 வயது, 10 வயதுச் சிறுவர்கள், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2வயது, 4 வயது, 5 வயது சிறுவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியாவில் 7 வயதுச் சிறுவன் ஒருவனுக்கும், புதுக்குடியிருப்பில் 2 மற்றும் 7 வயது சிறுவர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஒ,5)

## விபத்தில்...

ழுந்தார். சிதம்பரம் திருஞானசிங்கம் (வயது-74) என்ற முதியவரே உயிரிழந்தவர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

கைதடியைச் சேர்ந்த குறித்த முதியவர் கடந்த மூன்றாம் திகதி மருந்து வாங்குவதற்காக தனது மனைவியுடன் முச்சக்கரவண்டியில் சென்றுள்ளார். கைதடிப் பகுதியில் சென்றபோது நாய் குறுக்காகச் சென்றதை அடுத்து முச்சக்கரவண்டியை சடுதியாகத் திருப்பியுள்ளார். இதனால் முச்சக்கரவண்டி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26,25)

## வாளால்...

ஈடுபட்ட கொள்ளைக் கும்பலில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை மூன்று மணிக்கு கந்தரோடை சங்காவத்தை வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் குழுவொன்று கொடூரமான ஆயுதங்களுடன் வீட்டிலுள்ளவர்களைத் தாக்கி இந்தக் கொள்ளையில் ஈடுபட்டது.

பெண் ஒருவரின் கழுத்தை நெரித்து அவர் அணிந்திருந்த மூன்று பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலி, ஒன்றரை பவுண் கைச்சங்கிலி, இரண்டு மோதிரம் மற்றும் காப்புக்கள் என்பவற்றை அந்தக் குழு அபகரித்தது. இதில் மூன்று பெண்கள் உள்ளிட்ட நால்வர் காயமடைந்தனர். இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர். கொள்ளையிடப்பட்டன எனக் கருதப்படும் நகைகளில் ஒரு தொகுதி நகைகளும் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 10 . 09 . 1951

விண்ணில் 07 . 05 . 2021



அமரர் பேரம்பலம் இராஜராஜன்

எத்தனை பேர் தான் இருக்கிறேன்
என்று சொன்னாலும்
உங்களைப் போல் யார் இருக்க முடியும்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.

## மரண அறிவித்தல்



தம்பு இரத்தினம்

வரணியை பிறப்பிடமாகவும் இலந்தைக்குளம் றோட் மாம்பழம் சந்தியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய தம்பு இரத்தினம் கடந்த (24.05.2021) அன்று காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: சி.சிவலிங்கம்
கொழும்புத்துறை.

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 08 . 1935

மறைவு 05 . 06 . 2021



பொன்னையா குமாரசாமி

(முன்னாள் வர்த்தகர் - விக்னேஸ்வரா ஸ்ரோர்-மன்னார்)

புங்குடுதீவு 7ம் வட்டாரம். ஊரதீவை பிறப்பிடமாகவும், மன்னார் மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா குமாரசாமி அவர்கள் நேற்று (05.06.2021) சனிக்கிழமை சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான முருகேசு - சவுந்தரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும். வள்ளியம்மை (இரத்தினம்) அவர்களின் அன்புக் கணவரும். சந்திரவதனி. ஜெயகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும். நந்தகுலசிங்கம் அவர்களின் அன்பு மாமனாரும். கஜிதா-தர்ஷீலன். ரமியா ஆகியோரின் அன்புப் பேரனும். காலஞ்சென்றவர்களான அமிர்தம்மா. தங்கம்மா மற்றும் தம்பிராசா. காலஞ்சென்றவர்களான திருமேனிப்பிள்ளை. மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும். காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு. சின்னப்பிள்ளை. பாக்கியம். கந்தையா. பரிமளம் மற்றும் ஆறுமுகம். கோமளம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.06.2021) ஞாயிற்றுக்கிழமை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கொக்குவில். [illegible]
மகன் - 004915734938286

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 14 - 09 - 1949

இறப்பு 06 - 05 - 2021



அமரர் திருமதி.
கெஜஞானவதி இராஜசிங்கம் - பேபி
(இளைப்பாறிய பிரதம மருந்தாளர்
Castle Street மகப்பேற்று வைத்தியசாலை, பொரளை)

நீங்கள் இறைவனடி அடைந்து ஒரு திங்கள்
ஆகிவிட்டதை நம்பமுடியவில்லை அம்மா.
உங்கள் உருவம் மறைந்தாலும் உங்கள்
நினைவுகள் என்றும் மறையாது அம்மா.

யாழ்ப்பாணம், தெல்லிப்ழை, வர்த்தலைவிளானை பிறப்பிடமாகவும், Toronto, Canada வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கெஜஞானவதி இராஜசிங்கம் அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு தொலைபேசி மூலம் நலம் விசாரித்த அனைவருக்கும், துயர் பகிர்ந்தோர், இறுதிக்கிரியைகளில் நேரடியாகப் பங்குபற்றியோர், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர் மற்றும் அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு,

அன்னாரின் 31வது நாள் கிரியைகள், அவரது Toronto, Canada இல்லத்தில் கடந்த 5ம் திகதி (5.6.2021) சனிக்கிழமை நடைபெற்றது என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

றவீன் (Canada) +16479827250
கஜன் (USA) +19739010054
றஜீத் (Canada) +16479689263


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# சர்வராக நடித்தார் ஏ.ஆர்.முருகதாஸ்

தமிழ் சினிமாவில் பல வெற்றிப் படங்களை கொடுத்தவர் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ். இவர் தான் இயக்கும் திரைப்படங்களில் ஒரு சில காட்சிகளில் தோன்றுவார்.

ஆனால் அவர் இயக்குநராகும் முன்னதாகவே ஒரு திரைப்படத்தில் ஒரு காட்சியில் நடித்து உள்ளார் எனக் கூறி அந்த மலரும் நினைவுகளின் வீடியோவை தனது சமூக வலைத்தள பக்கத்தில் ஏ.ஆர். முருகதாஸ் பகிர்ந்துள்ளார்.

கடந்த 1997 ஆம் ஆண்டு வெளிவந்த திரைப்படம் 'பூச்சூடவா' இத் திரைப்படத்தில் ஏ.ஆர்.முருகதாஸ் சிறிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அப்பாஸ் மற்றும் சிம்ரன் முக்கிய வேடத்தில் நடித்திருந்த இந்த திரைப்படத்தை உதயசங்கர் என்பவர் இயக்கியிருந்தார்.

நாகேஷ் மற்றும் சிம்ரன் நடித்துள்ள அந்த காட்சியில் சர்வராக தோன்றும் ஏ.ஆர்.முருகதாஸ், நாகேஷ் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் காட்சியின் காணொலியை பதிவுசெய்துள்ளார். இந்தக் காணொலி தற்போது வைரல் ஆகி வருகிறது.



# இன்றைய நாள்

**மேடம்:** நீண்ட காலமாக எதிர்பார்த்த நற்செய்தி வரும். நண்பர்கள் நன்மை செய்வர். ஆதாயம் உண்டு. செலவுகள் கட்டுப்படும். சிலருக்கு வெளிநாட்டு வேலை ஏற்கமுடியாதபடி இருக்கும்.

**இடபம்:** பணியில் கடும் முயற்சி செய்தவர்கள் வெற்றி அடைவர். பெரியோரின் உடல் நிலையைக் கவனிக்க வேண்டும். பிள்ளைகளின் வாழ்வில் மகிழ்ச்சியான திருப்பங்கள் உண்டு.

**மிதுனம்:** இரக்க சுபாவம் மேம்படும். ஆசீர்வாதங்கள் கிடைக்கும். உங்களிடம் உதவி பெற்றவர்கள் நன்றியுடன் இருப்பார்கள். நீங்கள் செய்த நன்மைகளுக்கு பதிலுதவிகள் கிடைக்கும்.

**கடகம்:** தடைப்பட்ட காரியங்கள் நல்ல விதத்தில் முடிவடையும். சிறிதளவு பண வரவு இருக்கும். கடன் தீர வழி கிடைக்கும். பிரச்சினை ஒன்று முயற்சியால் முடிவுக்கு வந்துவிடும்..

**சிம்மம்:** உறவினர்களுடன் இருந்து வந்த உறவு சிறப்படையும். இது வரை தடைபட்டிருந்த தொழில் சற்றே மேம்படும். குடும்பத்தினருடன் வாக்குவாதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கன்னி:** பணியிடத்தில் கருத்து மோதல் வராதபடி அனுசரிக்க வேண்டும். பரம்பரை தொழில் நல்லபடியாக செழித்து வளரும். பணிக்காக வெளிநாடுசெல்லும்பயணம்தள்ளிப்போகும்.

**துலாம்:** இழந்த செல்வாக்கை இன்று மீண்டும் பெறுவீர்கள். அரசியல்வாதிகள் அதிகாரம் மிக்க பதவியில் அமர்வீர்கள். கலங்கிப்போயிருந்த மனதில் மெல்லத் தெளிவு பிறக்கும்..

**விருச்சிகம்:** வாழ்வு செழிப்பதற்கான யோசனைகள் இன்று கிடைக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு சற்றுத் தள்ளிப்போகும். நல்லவர்களின் தொடர்பால் நலம் விளையும்.

**தனுசு:** பிள்ளைகள் பற்றிய கவலைகள் தீர ஆரம்பிக்கும். பணியாளர்களுக்கு முன்பிருந்த கவலைகள் தீரும். நண்பர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** நண்பர்களின் சந்திப்பு ஆறுதலை தரும். மகிழ்ச்சி கூடும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த உதவிகள் இன்று கிடைக்கும். கருத்து வேறுபாடு நீங்கும்.

**கும்பம்:** பகைவர் மனம் மாறுவார். மனதில் மகிழ்ச்சி கூடும். அதிகமாக உழைப்பீர்கள். பெற்றோரின் ஆதரவு பெருகும். வெற்றி காண்பீர்கள்.

**மீனம்:** சிலருக்குத் தலைமைப் பதவியில் அமரும் வாய்ப்பு வரும். பணியார்கள் மற்றவர்களுக்குப் பயிற்சி கொடுப்பீர்கள். நல்ல நோக்கமும் பலகாலத் திட்டமும் நிறைவேறும்..

twitter.com/@pandi_prakash_

ஒப்பனைகள் நிறைந்த வாழ்க்கையில் சிந்தனைகளை சீர்படுத்தி சீராக்குகிறது கற்பனை காலைகள்..

twitter.com/@ltz_hafsha_

தொடக்கத்தில் இருக்கும் பற்று இறுதி வரை அதே உயிர்ப்புடன் இருப்பதில்லை..!!

twitter.com/@mounam_twitz

வாய் தவறி விழும் பேச்சுக்கள் கை தவறி விழும் கண்ணாடியைப் போன்றது கவனம் தேவை.

twitter.com/@abhi_heartz

அவதானிக்க தவறினால்
ஒரு நாள் அனுபவம் ஆசானாகும்.










# உருமாறிய காலம்!

வருசத்தில் முக்கால்வாசி நாள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடந்ததால் பலரும் 'இன்றைக்கு என்ன கிழமை?' என்று காலண்டர் பார்த்துத்தான் தெரிந்துகொள்கின்றனர். 'இந்த ஆண்டு அமோகமாக இருக்கும்' என்று ஆரூடம் சொன்னதையெல்லாம் கலாய்க்கிறது ஒரு கோஷ்டி. இந்தக் கஷ்டகாலத்திலும் கடகத்துக்கு என்ன சொல்றான், மிதுனத்துக்கு பிரச்சினையில்லையே என்று பேப்பர்களில் ராசிபலன் பார்க்கிற ஜோசியர் சொல்லும் ராசிபலன்களைக் கேட்கும் கூட்டமும் இருக்கத்தான் செய்கிறது! நீதான் வீட்டைத் தாண்டி வெளியவே போகலையே, வடக்கே சூலம் இருந்தா என்ன, தெற்கே மூலம் இருந்தா என்ன?

காலையில் 6 மணிக்கு எழுந்து அரக்க பரக்கக் கிளம்பும் அவசரம் இப்போதெல்லாம் இல்லை. காரணம், ஆபீஸே உருமாறி இருக்கிறது. 'யாராச்சும் இருக்கீங்களா ப்யமாக் கீது!' என தனுஷ் போல் கேட்கும் சூழல். இரவு முழுக்க இணையத்தில் உலாத்திக் கொண்டிருந்துவிட்டு காலையில் 10 மணிக்குத்தான் பள்ளியெழுச்சி கொள்கிறார்கள் டெக்னாலஜியில் ஊறிய மனிதர்கள்.

மத்தியானம் தூங்கி எழும்போது எட்டு மணி. 'இது இரவா... காலையா?' என அந்த நாளே உருமாறிக் குழப்புகிறது. கடாயில் கரண்டி கிண்டும் ஃப்ரைடு ரைஸ் கணக்காக எல்லோரையும் புரட்டிப் போட்டுப் பந்தாடுகிறது காலம்.

தியேட்டரில் போய் கூட்டத்தோடு கூட்டமாய் குதூகலமாய்க் குத்தவைத்துப் படம் பார்க்கும் காலமெல்லாம் மலையேறிவிட்டது. தமிழ் சினிமாவும் ஓடிடி தளத்துக்குத் தாவப் பழகிவிட்டது. 'கடைசியாய் நான் பார்த்த இங்கிலீஷ் படம் ஜுராசிக் பார்க்' என்ற நிலை மாறி, 'மணி ஹெய்ஸ்ட்' வெப் சீரீஸ் பார்க்கப் பழகிக்கொண்டார்கள். ஞாயிற்றுக்கிழமைகள் என்றால் பீச், அப்படியே ஹொட்டல் டின்னர் என்று திரிந்தவர்கள் எல்லாம் இப்போது ஞாயிற்றுக்கிழமை என்ற எண்ணமே இல்லாமல் வீட்டில் உட்கார்ந்து வெறித்தனமாய் டிவி பார்க்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலங்கையில்...

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக பயணத்தடை நாட்டில் நடைமுறையில் உள்ள போதிலும் கடந்த நான்கு நாள்களாக தினசரி 3 ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர். அதற்கமைய கடந்த 4 நாள்களில் மாத்திரம் 13 ஆயிரத்து 66 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேவேளை, நாட்டில் பதிவான மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 லட்சத்தைக் கடந்துள்ளது. நாட்டில் நேற்று 3 ஆயிரத்து 94 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து 2 ஆயிரத்து 348ஆக எகிறியுள்ளது. கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 34 ஆயிரத்து 560ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 6[illegible] ஆயிரத்து 132ஆக அதிகரித்துள்ளது எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## முல்லைத்தீவில்....

குடியிருப்பு மாணிக்கபுரம் ரெட்பானாவைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே கொரோனாவால் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் சிறுநீரக நோயால் நீண்ட நாள்கள் பாதிக்கப்பட்டிருந்தார். மூச்சுத்திணறல் காரணமாக கடந்த இரு தினங்களுக்கு முன்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது.

கடந்த 2 தினங்களாக சிகிச்சை வழங்கப்பட்டபோதிலும் சிகிச்சை பயனளிக்காமல் அவர் உயிரிழந்துள்ளார். (ம)

## கிளிநொச்சியில்...

சுகவீனம் காரணமாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர். இதையடுத்து அவர்களிடமிருந்து பெறப்பட்ட மாதிரிகளில் இருவருக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-214)

## சீனத்துக்கொடி....

கத்துக்குத் தெரிவித்துள்ளது. சாவகச்சேரியிலுள்ள சீன அரசின் உத்தியோகபூர்வ கட்டுமான நிறுவனத்தின் அலுவலகத்தில் சீனக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. இது சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக அங்கு ஏற்றப்பட்டுள்ளது. அத்துடன் அந்த நிறுவனத்தின் பெயர் பலகையில் சீன, ஆங்கில மொழிகளே காணப்படுகின்றன.

இந்த சம்பவம் இதுவரை தமது அமைச்சுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கொழும்பு ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளார்.

சாதாரண சூழ்நிலைகளில், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் தேசியக் கொடிகளை தங்கள் வளாகத்தில் ஏற்றுவதில்லை என்று அவர் கூறினார். ஆயினும், தாய் நாட்டுக்கான இணைப்புகளைக் காண்பிப்பதற்கான ஒரு செயல்பாடு அல்லது நிகழ்வு போன்ற சிறப்பு சூழ்நிலைகளில் தேசியக் கொடிகள் வளாகத்தில் ஏற்றப்பட்டிருக்கலாம் என்றார். அமைச்சர் குணவர்தன மேலும் கூறுகையில், குறிப்பிட்ட சம்பவம் அந்த பகுதிக்கு பொறுப்பான உள்ளூராட்சி மன்றத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டது. இந்த வளாகத்தில் ஒரு விழா நடத்தப்பட்டதா என்பதையும், அந்த நிறுவனம் அனுமதிபெற்று உள்ளூராட்சி மன்றத்துக்கு பணம் செலுத்தியதா என்பதையும் பார்க்க வேண்டியது அவசியம் என்று அவர் சுட்டிக்காட்டினார். இந்த விடயத்தை உள்ளூராட்சி அமைப்பு கவனிக்க வேண்டும், வெளியுறவு அமைச்சகம் அல்ல- என்றார்.

இதேவேளை, சமூக வலைத்தளங்களில் விடுதலைப் புலிகள் பற்றிய பதிவுகள் இடம்பெற்றால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தேடித்தேடிக் கைது செய்யும் அரசு, தன் சொந்த நாட்டில் ஒன்றரை வருடங்களாக சீனக்கொடி பறப்பது தெரியாதிருப்பது வேடிக்கைதான் என்று சமூக வலைத்தளத்தில் நகைச்சுவை மிகுந்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன. (ஓ.5.இ)

## வடக்கில்...

மற்றும் கோப்பாயில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையில் 8 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 268 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 73 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு 224 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 3 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. போதனா மருத்துவமனையில் நேற்றுப் பகல் 565 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் 56 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 56 பேருக்கும், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 21 பேருக்கும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் என 92 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும் (அதில் இருவர் உயிரிழப்பு) என 5 பேருக்குத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 20 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும் என 23 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா**

வவுனியா தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 17 பேருக்கும் என 19 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ.5)

## மண்சரிவில்...

மீட்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மண்சரிவில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் தாய், தந்தை மற்றும் அவர்களின் 23 வயது மகள், 29 வயது மகன் என 4 பேர் புதையுண்டு காணாமல்போயிருந்தனர். இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளில் 23 வயதான மகளின் சடலம் முதலில் மீட்கப்பட்டது. பின்னர், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளையடுத்து தந்தை மற்றும் தாய் ஆகியோரின் சடலங்களும் இறுதியாக 29 வயது மகனின் சடலமும் மீட்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது. (ம-த)

## சீரற்ற...

பங்களைச் சேர்ந்த 2 லட்சத்து 19 ஆயிரத்து 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 724 வீடுகள் பகுதியளவும், 11 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன என்றும் மேற்படி மத்திய நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 3 ஆயிரத்து 528 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 499 பேர் 69 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். கம்பஹா, இரத்தினபுரி, கொழும்பு, புத்தளம், களுத்துறை, நுவரெலியா, கேகாலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் வாழ்பவர்களே சீரற்ற காலநிலையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். கேகாலை மாவட்டத்தில் 5 மரணங்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 3 மரணங்களும், புத்தளம் மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு மரணமும் பதிவாகியுள்ளன. (ம-44)

## உழவியந்திரத்திலிருந்து..

என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: குறித்த நபர் கடந்த முதலாம் திகதி உழுந்து அறுவடைக்குச் சென்றுள்ளார்.

அறுவடைசெய்த உழுந்தை தனது உழவியந்திரத்தில் ஏற்றிவந்து இறக்கும்போது உழவியந்திரத்தில் இருந்து கீழே வீழ்ந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். (ம-26,25)

## தெரிவுசெய்யப்பட்ட....

இதற்கு அமைவாக வடக்கிலும் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் அடுத்த சுற்று தடுப்பூசி ஏற்றலின்போது ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண சமுதாய மருத்துவ நிபுணர் இ.கேசவன் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி ஏற்றும் கொள்கை ரீதியான முடிவு கொழும்பு சுகாதார அமைச்சு மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே முதலாம் கட்ட தடுப்பூசிகள் மக்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன. இதன்போது கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவில்லை. இந்த நிலையில் அமைச்சின் கொள்கை ரீதியான முடிவுக்கு அமைவாக, முதல் கட்டத்தில் தடுப்பூசி ஏற்றாத தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகளும் யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி ஏற்ற முடியுமா என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

பல கட்ட கலந்துரையாடல்களின் பின்னர் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கும் கொரோனாத் தடுப்பூசி ஏற்ற முடியும் என்ற முடிவுக்கு சுகாதார அமைச்சு வந்துள்ளது. இது தொடர்பான வழிகாட்டல் சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. இன்று அல்லது நாளை அது வெளியிடப்படும்.

கொரோனாத் தொற்றால் இலகுவாக பாதிக்கப்படும் அபாயமுள்ள மற்றும் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்களுக்கு முதல் கட்டமாக கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படும். கர்ப்பம் தரித்து மூன்று மாதங்களின் பின்னரே அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும்.

35 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணிகள், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள கர்ப்பிணிகள், முன்களப் பணியாளர்களாக பணியாற்றும் மற்றும் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து வயதுக் கர்ப்பிணிகள் ஆகியோருக்கே தடுப்பூசி ஏற்றப்படும். அதேபோன்று ஒவ்வாமை உள்ளவர்கள் மற்றும் சிக்கலான நோய் நிலைமை உள்ளவர்கள் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைவாக தடுப்பூசியை ஏற்ற முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வாரம் முதல் கட்டமாக தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதன்போது கர்ப்பிணிகளுக்கு ஏற்றப்படவில்லை. தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணிகள், இரண்டாம் கட்டமாக யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி ஏற்றப்படும்போது தமக்குரிய தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்- என்றார். (ஓ.5)

## ஆடைத்....

திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆடைத் தொழிற்சாலை கொத்தணியுடன் தொடர்புபட்டவர்களுக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 60 பேரின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. 20 பேருக்கு தொற்று இருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை கொத்தணி 504ஆக அதிகரித்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலையில் நிர்வாகிகள் மற்றும் மேற்பார்வையாளர்களில் அதிகமானோர் தென்னிலங்கையில் கொரோனாத் தொற்று அதிகம் உள்ள கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஆடைத் தொழிற்சாலையை நாளைய தினம் ஆரம்பிக்கவுள்ளதால் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்பட முன்னர் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும் என்று புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரியால் சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த வழிகாட்டல்கள் எவையும் பின்பற்றப்படாமலேயே ஆடைத் தொழிற்சாலையை நாளை திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அறியமுடிகின்றது.

குறிப்பாக கொரோனாத் தொற்று அதிகமுள்ள தென்னிலங்கையிலிருந்து வருபவர்கள் 10 நாள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பணிசெய்ய அனுமதிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது. இந்த ஆடைத் தொழிற்சாலை கொத்தணி ஏற்படுவதற்கும் இந்த நடைமுறையை முன்னர் பின்பற்றாமையே காரணம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© 2000 Agfa-Gevaert N.V.

# 19 லட்சம் பேருக்கு முதலாவது தடுப்பூசி

கொழும்பு, ஜூன் 6

நாட்டில் இதுவரை 19 லட்சத்து 20 ஆயிரத்து 801 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை குறிப்பிட்டுள்ளது. இதற்கமைய, நேற்றுமுன்தினம் மாத்திரம் 38 ஆயிரத்து 943 பேருக்கு சீனாவின் சைனோஃபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை 9 லட்சத்து 30 ஆயிரத்து 573 பேருக்கு சைனோஃபார்ம் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இதேவேளை, நேற்று முன்தினம் 501 பேருக்கு கொவிஷீல்ட் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது. இதற்கமைய, இதுவரை 3 லட்சத்து 51 ஆயிரத்து 459 பேருக்கு கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 64 ஆயிரத்து 986 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள சீனப் பிரஜைகள் 2 ஆயிரத்து 865 பேருக்கு சைனோஃபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 435 பேருக்கு இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

# பொன்.சிவகுமாரனை அஞ்சலிக்க பொலிஸாரால் தடை விதிப்பு

## பிரத்தியேக இடத்தில் அஞ்சலி



**யாழ்ப்பாணம்,ஜூன் 6**

**தியாகி பொன் சிவகுமாரனின் நினைவு தினமான நேற்று அஞ்சலி செலுத்த பொலிஸார் தடை விதித்ததையடுத்து, பொது இடத்தைத் தவிர்த்து பிரத்தியேக இடத்தில் விளக்கேற்றி நினைவு கூரப்பட்டது.**

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தன்னுயிரை ஆகுதியாக்கிய பொன் சிவகுமாரனின் 47 ஆவது நினைவு தினம் நேற்று ஆகும்.

இத் தினத்தை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை வருடாவருடம் கடைப்பிடித்து வருகின்றது.

நேற்றுமுன்தினம் பொன் சிவகுமாரனின் சிலை மற்றும் நினைவுத் தூபி உள்ள பகுதிகள் பிரதேச சபையால் துப்புரவுசெய்யப்பட்டன.

பகிரங்க நினைவேந்தலை, கொரோனா அபாய பயணத்தடை நீக்கத்தின் பின்னர் பிரிதொரு தினத்தில் உரிய ஏற்பாடுகளுடன் மேற்கொள்வது என்று சபையின் கட்சித்தலைவர்கள் சந்திப்பில் முடிவுசெய்யப்பட்டிருந்தது. எனினும் சிலைக்கு நேற்றையதினம் தவிசாளர் விளக்கேற்றி வைப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டிருந்தது. அதேபோன்று குறித்த பகுதியில் விளக்கேற்றச் சென்ற தவிசாளரை பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தடுத்தனர்.

அரசின் பகிரங்க பயணத்தடை உள்ள நிலையில் நாம் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கியுள்ளோம். விளக்குக் ஏற்றுவது அத்தியாவசிய சேவை கிடையாது. தொற்று தொடர்பான பயணத்தடை நீக்கப்பட்டதன் பின்னர் தாங்கள் பொது இடத்தில் செயற்படுவது குறித்து ஆராயுங்கள் என பொலிஸாரும் இராணுவத்தினரும் கேட்டுக்கொண்டனர். இதற்குத் தவிசாளர் தி.நிரோஷ் "நினைவேந்தல் பிரச்சினை கிடையாது. ஆனால் பொதுமக்கள் நன்[illegible] கருதிய சுகாதார நோக்குடைய பயணத்தடை மட்டுமே காரணம் ஆயின் நாம் முரண்படவில்லை. பயணத்தடை நீக்கத்தின் பின்னர் நாம் பொது இடத்தில் அஞ்சலி செலுத்துவோம் " எனத் தெரிவித்து அந்த இடத்தை விட்டு வெளியேறிச் சென்றார். இதன் பின்னர் பொது இடத்தைத் தவிர்த்து உரும்பிராயில் பிரத்தியேக இடத்தில் ஈகைச்சுடரேற்றி அஞ்சலிக்கப்பட்டது. (ஐ-26)

# தொழில் திணைக்களம் திறக்கப்படமாட்டாது

கொழும்பு, ஜூன் 6

கொவிட் 19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள பயணத்தடை மற்றும் சுகாதாரப் பிரிவினரால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கமைய தற்போது தொழில் திணைக்களத்திற்குரிய தொழில் அலுவலகம் திறக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகின்றது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு தொழில் திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

தொழில் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (http://www.labourdeopt.gov.lk) அப அமதன்ன இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைத்தொடர்பு ஊடகங்கள் மூலம் (email/whatsapp/viber) தொழில் சட்டங்களுக்களுக்கு அமைவான எந்தவொரு விடயம் தொடர்பான எழுத்துமூலமான முறைப்பாடுகள் அல்லது எழுத்து மூலமான விசாரணையை தாங்கள் பணிபுரியும் அல்லது பணிபுரிந்த நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தில் தொழில் திணைக்களத்துக்கு சமர்ப்பிப்பதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. (த-இ)

# போலி காசோலையில் 43 மில்லியன் மோசடி

## 7 பேர் இதுவரை கைது


கொழும்பு, ஜூன் 6

இரும்புத் தொழிற்சாலை ஒன்றின் பெயரில் போலியான காசோலைகளை அச்சிட்டு ரூபா 43 மில்லியன் பணத்தை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் 7 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் நேற்று மற்றுமொரு நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எம்பிலிபிட்டிய பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேகநபர்கள் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)



# கொரோனாவால் மேலும் 40பேர் சாவு

## மொத்தக் காவு 1,696

கொழும்பு, ஜூன் 6

நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,696ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

# கொரோனா சடலத்தை அடக்கம்செய்யச் சென்ற ஜீப் கவிழ்ந்ததில் பொலிஸ் அதிகாரி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 6

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஹற்றன் பொலிஸ் நிலைய சிறு குற்றப் பிரிவுக்கு பொறுப்பான உப பொலிஸ் பொறுப்பதிகாரி உயிரிழந்துள்ளார். ஹற்றனில் இருந்து கண்டி இராணுவ முகாமில் ஒப்படைப்பதற்காக கொரோனா சடலத்தை கொண்டுசென்ற வாகனத்துக்குப் பாதுகாப்பு வழங்கி சென்ற 57 வயதான எஸ்.பெனடிக் என்ற பொலிஸ் அதிகாரியே விபத்தில் உயிரிழந்துள்ளார். குறித்த கொரோனா சடலம் ஓட்டமாவடியில் அடக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட இருந்துள்ளது. உப பொலிஸ் பொறுப்பதிகாரி பயணம்



செய்த வாகனம் வட்டவளை கரோலினா தோட்டப் பகுதியில் வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் உப பொலிஸ் பொறுப்பதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் 3 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வாகன சாரதி மற்றும் சடலத்தை பொறுப்பேற்க வந்த உறவினர்கள் இருவர் ஆகியோர் காயமடைந்த நிலையில் வட்டவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

பக்கங்கள்: 16

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 வைகாசி 23 ஞாயிற்றுக்கிழமை (06.06.2021) சிகரம் : 50

தடுப்பூசி போட்டாலினி எட்டாது கொரோனாவென
எடுப்பாக பொறுப்பின்றி நடப்பது சரியா?– தொடுப்பாக
இரண்டாம் டோஸ் போட்டாலும் கவனமின்றேல்
முரண்டுபிடித்து மீண்டும் பெருகுமே கொரோனா!

- கொரோனாச் சித்தர்



# வன் டே மாஸ்க்கும் மக்கள் விழிப்பும்

○ நிலாந்தன்

இந்தியாவில் வசிக்கும் ஓர் ஈழத்தமிழர் கூறினார் "கொரோனா வைரஸ் எனப்படுவது எங்களுடைய முதுகில் படிந்திருக்கும் அழுக்கைப் போன்றது. அது எங்களோடேயே இருக்கிறது" என்று. நடப்பு நிலைவரங்களை வைத்து பார்த்தால், அது சரி என்றே தோன்றுகிறது. சோதிக்கப்படாதவரை எல்லோருமே சுகதேகிகள்தான். சோதித்தால்தான் தெரியும் யாரெல்லாம் குணங்குறியற்ற நோய்க்காவிகள் என்று. கிளிநொச்சியில் அண்மையில் ஒரு பதினைந்து வயதுப் பெண் தற்கொலை செய்து கொண்டார். அவர் இறந்த பின்தான் அவருக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. அப்படித்தான் இப்போது இயல்பாக இறக்கும் பலருக்கும் இறந்த பின்னர்தான் அவர்களுக்கு தொற்று இருப்பது தெரியவருகிறது. அப்படி என்றால் துரிதமான அன்டிஜென் சோதனைகளை செய்தால் என்ன?

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் "அது செலவு கூடிய ஒரு பயிற்சி. இலங்கைத் தீவு போன்ற ஒரு வளங்குறைந்த நாடு அதைத் தாங்காது. எல்லாப் பிரஜைகளையும் சோதனை செய்வதை விடவும் நோய்த்தொற்றுச் சங்கிலியை உடைப்பதே புத்திசாலித்தனமானது செலவு குறைந்தது. அவ்வாறு நோய்த் தொற்று சங்கிலியை உடைப்பது என்றால் தடுப்பூசி; சமூக விழிப்பு மற்றும் சமூக முடக்கம் போன்றனவே பயன்தரும் மேலும் பொருத்தமானவை" என்று கூறுகிறார்கள். ஆனால் தடுப்பூசி விடயத்திலும் இலங்கைத் தீவு பின்தங்கியிருப்ப தாகவே புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

மேல் மாகாணத்தில் மட்டும் கிட்டத்தட்ட 9 லட்சத்து இருபத்து ஐயாயிரம் பேருக்கு பல கிழமைகளுக்கு முன்பு முதற்கட்ட தடுப்பூசி ஏற்றப்பட்டது. இரண்டாம் கட்ட தடுப்பூசியை ஏற்றுவதற்கான மூன்றுமாத கால எல்லை இன்னும் சில நாள்களில் முடிந்துவிடும். ஆனால் அவர்களில் ஐந்து லட்சத்து எழுபத்து ஐயாயிரம் பேருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி இன்னமும் ஏற்றப்படவில்லை.

இதற்கிடையே சீனா ஐந்து லட்சம் தடுப்பூசிகளை வழங்கியிருக்கிறது. அது வேறுவகைத் தடுப்பூசி . இதை மாவட்டங்கள் தோறும் அரசாங்கம் பிரித்துக் கொடுக்கிறது. இவ்வாறு கிள்ளிக் கொடுத்து முழு நாட்டுக்கும் தடுப்பூசியை ஏற்றி முடிப்பது எந்தக் காலம்?

எனவே தடுப்பூசி விடயத்திலும் அரசாங்கம் திருப்தியாகச் செயல்பட முடியவில்லை. ஆயின், சமூக முடக்கந்தான் ஒரே வழியா? இல்லை, அதுவும் செலவு கூடிய ஒரு செய்முறை என்பதை பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அது நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கக் கூடியது.

அண்மை வாரங்களாக அரசாங்கம் தொடர்ச்சியாக சமூகத்தை முடக்கி வருகிறது. இது விடயத்தில் வெளிப்படைத் தன்மையும் சிவில் தன்மையும் குறைவாக இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. எவ்வளவு காலத்துக்கு சமூகம் முடக்கப்படும் என்பதை முன்கூட்டியே தெளிவாக அறிவித்திருக்கவில்லை. பதிலாக ஊடகங்கள் ஒரு பக்கம் குழப்புகின்றன. தவிர அரசாங்கமும் இத்தனை நாள் சமூகமுடக்கம் என்று முதலில் கூறிவிட்டு பின்னர் நாள்களை மேலதிகமாக நீடிக்கின்றது.

இது ஒரு விதத்தில் மக்கள் முன்கூட்டியே உசாராவதைத் தடுக்கின்றது. இதனால் அதிகம் பாதிக்கப்படுவது அன்றாடங் காய்ச்சிகள் மட்டுமல்ல நடுத்தர வர்க்கமும்தான். ஏனென்றால் இலங்கைத் தீவில் பெருநகரங்களில் உள்ளது போல ஒன்லைன் விநியோக வலைப்பின்னல் சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் பரவலாகவும் பலமாகவும் இல்லை. இதனால்தான் உள்வீதிகளில் சமூகத்தை முழுமையாக முடக்க முடியவில்லை. எனவே சமூக முடக்கம் எத்தனை நாள்களுக்கு என்பதை அரசாங்கம் முன்கூட்டியே தெளிவாக அறிவிப்பதன் மூலம் மக்கள் உரிய ஏற்பாடுகளை செய்து கொள்ளலாம். ஆனால் வைரஸ்க்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் ஒரு போரைப் போலவே முன்னெடுக்கின்றது. அதில் சிவில்தனத்தை விடவும் இராணுவத்தனமே அதிகமாக காணப்படுகிறது என்ற குற்றச்சாட்டு பரவலாக உண்டு.

"ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தின் முதலாவது தவறு கொவிட்-19ஐ இன்னொரு போர் என்றும் அதை இராணுவத்தைப் பயன்படுத்தி வெல்லலாம் என்றும் சிந்தித்ததும் தான்" என்று தனது ருவிற்றர் பக்கத்தில் இமேஷ் ரணசிங்க என்ற சிங்கள ஊடகவியலாளர் கூறுகிறார். உலகளாவிய தொற்றுநோய் காலத்தில் மையத்தில் அதிகாரங்களை குவித்த ஒரு நாடாக ஸ்ரீலங்கா சுட்டிக்காட்டப்படுகிறது. கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின் ஒரு பெருந்தொற்றுநோய் சூழலைக் காரணம் காட்டி நாட்டின் சிவில் கட்டமைப்புக்கள் அதிக பட்சம் இராணுவ மயப்படுத்தப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது. கொவிட்-19ஐ கட்டுப்படுத்தும் செயலணியின் தலைவரான படைத்தளபதி ஊடக சந்திப்புக்களில் மருத்துவர்களை விடக் கூடுதலாகக் கதைக்கிறார். சமூக முடக்க நாள்களில் மட்டுமல்ல சாதாரண நாள்களிலும் தெருக்களையும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளையும் படைத்தரப்பே பெருமளவுக்கு தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. நாட்டின் எல்லா கொவிட் 19 தடுப்பு மையங்களும் படைத்தரப்பினரால் தான் நிர்வகிக்கப்படு கின்றன.

அதிலும் குறிப்பாக கடந்த செவ்வாய்க்கிழமையும் வியாழக்கிழமையும் அரசாங்கம் மூன்று நியமனங்களை செய்திருக்கிறது. காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்துக்கு ஒரு ஓய்வுபெற்ற பொலிஸ் பிரதானியும் ஒரு ஓய்வுபெற்ற படைப் பிரதானியும், இழப்பீட்டு நீதிக்கான அலுவலகத்துக்கு ஒரு ஓய்வு பெற்ற படைப்பிரதானியும் நியமிக்கப்பட்டி ருக்கிறார்கள். இந்த இரண்டு அலுவலகங்களும் ரணில் விக்ரமசிங்கவின் காலத்தில் நிலைமாறுகாலநீதிச்செயற்பாடுகளின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டவை. அதாவது நிலைமாறுகால நீதிக்குரிய கட்டமைப்புகளுக்கு ஓய்வுபெற்ற படைப்பிரதானிகள் ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.


இவ்வாறு ஒரு நோய்த் தொற்றுச்சூழலை முன்னிறுத்தி நாட்டின் வெவ்வேறு நிர்வாகக் கட்டமைப்புகளை அரசாங்கம் படை மயப்படுத்தி வருகிறது. இராணுவத்தனமாக முடிவுகளை எடுத்து படைத்தரப்பை முன்னிறுத்தி

05





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ந.பரமேஸ்வரன்



# பிச்சைக்காரர்களிடம் பிச்சை எடுக்கும் ஸ்ரீலங்கா

அண்மையில் இந்தியாவுக்கான இலங்கையின் விசேட தூதுவர் மிலிந்த மொரகொட ஒரு விடயத்தை திருவாய் மலர்ந்திருந்தார். இலங்கைக்கும் இந்தியாவுக்குமான வரலாற்று ரீதியான உறவு பற்றி கூறிய அவர், இராமாயணம் கஜபாகு மன்னனின் காலத்தில் நடைபெற்றது எனவும் சொல்லியிருந்தார். மிலிந்த மொர கொடவின் இந்த கண்டுபிடிப்புக்காக அவருக்கு நோபல் பரிசைவிட உயர்ந்த விருது அல்லது பரிசு ஏதாவது இருந்தால் கொடுக்கலாம்.

தமிழர்களின் கணித மரபின் பிரகாரம் அல்லது பஞ்சாங்கக் கணிப்பின் படி இராமாயணம் கிரேத யுகத்தில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. கிரேத யுகத்தின் பின் திரேத யுகம் (12 86.000 வருடங்கள்) துவாபர யுகம் ( 8.84.000 வருடங்கள்) என்று இரண்டு யுகங்கள் முடிந்து இப்போது கலியுகமும் தொடங்கிவிட்டது. கலியுகத்தில் கூட 5122 வருடங்கள் கழிந்துவிட்டன. ஆனால் கஜபாகு மன்னனோ இலங்கைக்கு சிங்களவர் வந்த பின்னர் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பின் ஆட்சி செய்த ஒருவன்; அப்படியானால் எப்படி இராமாயணம் அவரது காலத்தில் நடந்திருக்க முடியும்? சரி அதை விட்டுவிடுவோம்.

அடுத்தாக அவர் கூறிய விடயம் தான் , இங்கு பார்க்க வேண்டிய விடயம். 1942 ஆம் ஆண்டு இலங்கையில் பெரும் பஞ்சம் ஏற்பட்டதாம் அப்போது சிங்கள அரசியல்வாதி ஒருவர் டெல்லிக்குச் சென்று உதவி கோரினாராம். இந்திய அரசியல் வாதிகளும் அவரது கோரிக்கைக்கு செவி சாய்த்து பெருமளவு உதவிப் பொருள்களை அனுப்பி வைத்தார்களாம். உலகிலேயே பிச்சைக்காரர்கள் அதிகமாக உள்ள நாடு இந்தியா. இப்போது ஓரளவு பொருளாதார ரீதியாக இந்தியா வளர்ச்சியடைந்திருந்தாலும், பிரித்தானியர் ஆட்சியில் இந்தியாவில் மோசமான வறுமை தாண்டவமாடியது. இந்தியர்கள் குறிப்பாக தமிழர்கள் பிழைப்புக் காக இலங்கை, மலேசியா, பிஜி, ஆபிரிக்கா, மொரீசியஸ் போன்ற நாடுகளுக்கு படையெடுத்துக் கொண்டிருக்கையில் சிங்களவர்கள் இந்தியாவிடம் போய் உதவி கோரியிருக்கின்றனர். பக்கத்து வீட்டுக்காரன் வந்து பசிக்கிறது என்று கேட்கையில் எவ்வாறு இல்லை என்று சொல்வது? தனக்கு இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்று இருப்பதை கொடுப்பது தானே நாகரிகம். தங்களது வயிற்றுப்பசியைப் போக்க உயிரையும் துச்சமென மதித்து கடல்கடந்து வந்தவர்களை கள்ளத்தோணி என சிறையிலடைத்து விட்டு, அவர்களது நாட்டுக்கே சென்று சிங்கள் அரசியல் வாதிகள் பிச்சை எடுத்திருக்கின்றனர்.

இந்தப் பிச்சை எடுக்கும் படலம் இன்றுவரை தொடர்வதுதான் அவலம். அதிலும் பிச்சைக்கார நாடுகளிடம் பிச்சை எடுக்கும் படலம் இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்றும் இந்தியர்கள் சுற்றுலா விசாவில் வந்து, அம்பாறையில் வயல் வேலை செய்கின்றனர். கட்டடத் தொழிலாளர்களாகவும் பணியாற்றுகின்றனர். இவ்வாறு இந்தியர்கள் பிழைப் புக்காக இலங்கைக்கு வந்து கொண்டிருக்கும் நிலையில், பிரதமர் மகிந்த ராஜபக்சவோ இந்தியாவிடம், " நீங்கள் தமிழர்களுக்கு மட்டும் வீடுகட்டிக் கொடுக்கிறீர்கள். சிங்களவர்களுக்கும் கட்டித்தாருங்கள் "எனக் கோரிக்கை விடுத்துள்ளார். "யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்கு (நாங்கள் நிர்மூல மாக்கிய வீடுகளை) நீங்கள் வீடுகட்டிக் கொடுக்கிறீர்கள். மலையக மக்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கிறீர்கள். அதே போல் தென்பகுதி மக்களுக்கும் கட்டித் தாருங்கள்" என்பதே அவரது கோரிக்கை.





அமெரிக்காவுக்கு நிகரான வல்லரசாக சீனா வளர்ந்து வந்தாலும், சீனாவில் இப்போதும் வறுமை தாண்டவமாடுகிறது. சீன யுவதிகள் இலங்கைக்கு வந்து விபசாரத்தில் ஈடுபடுகின்றனர். அவ்வப்போது யாழ்ப்பாணத்துக்கும் வந்து போகின்றனர். தல்செவன விடுதி உள்ளிட்ட யாழ். நகரிலுள்ள சில விடுதிகளி லும் இவர்களை அவ்வப்போது காணக்கூடியதாக உள்ளது. ஒரு தசாப்தத்துக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்து மணிக்கூடு வியாபா ரத்திலும் சீனர்கள் ஈடுபட்டனர்.

பங்களாதேஷ் உலகின் வறுமையான நாடுகளின் பட்டியலில் முன்னணி இடம்பிடித்துள்ளது. ஓரிரு தசாப்தங்களுக்கு முன்னர் பங்களாதேஷ் அரசு , சிறுமி ஒருத்தியின் படத்துடன் பங்களாதேஷில் வறுமையைப் போக்க உதவுமாறு சர்வதேசத்திடம் கோரிக்கை விடுத்தது (விளம்பரம் செய்தது). விபசார நோக்குடன் பெருமளவு பங்களாதேஷ் சிறுமிகள் ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்கு கடத்தப்படுகின்றனர். ஒட்டகப்பந்தயத்தில் ஈடுபடுத்தும் நோக்குடன் பெருமளவு பங்களாதேஷ் சிறுவர்கள் ஆண்டுதோறும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு கடத்தப்படுகின்றனர். மனைவிமாரை விற்பனை செய்யும் சம்பவங்கள் கூட, பங்களாதேஷ் கிராமங்களில் இப்போதும் நடைபெற்று வருகின்றன என ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன.

இந்தியா, சீனா முடிந்து இப்போது பங்களாதேஷிடமும் 200 மில்லியன் ரூபா வாங்கியுள்ளது இலங்கை. இவ்வாறு பிச்சைக்காரர்களிடம் பிச்சை எடுக்கும் நாடாக உலகில் இலங்கையின் பெயர் 'பொன்னெழுத்துக்களால்' பொறிக்கப் பட்டு வருகின்றது.

---

பத்மா இளங்கோவன்
(பத்மபாரதி)

# உனக்காய் என்ன செய்தோம்..?

வண்ண வண்ண நிறங்களிலே
வகை வகையாகச் சட்டை தைத்து
எங்களைத் தான் அலங்கரித்து
சித்திரமாகப் பார்த்திருந்த
எம் தாயே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

நீராட்டிச் சோறூட்டி
நெற்றியிலே பொட்டிட்டு
சின்ன அடியெடுத்து
சித்திரத் தேர் அசைகையிலே..
உள்ளம் குளிர
உச்சி முகர்ந்தவளே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

சுட்டு விரல்தான் பிடித்து
வட்டம் நிறையப் போட்டு
அழித்து அழித்து
'அ 'னா எழுதுவித்து
மெய் சிலிர்த்த
எம் தாயே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

பெருநாள் திருநாள் என
விதம் விதமாய்
பட்சணங்கள் தந்தே
உண்டு மகிழ்வதை
கண்டு குளிர்ந்திருந்த
எம் தாயே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

கோவில் குளம்
திருவிழா என்றே
எமை அழைத்துச் சென்று
உலகைக் காட்டி
உவகை ஊட்டி
எங்களை வளர்த்தெடுத்த
அன்புத் தாயே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

சிறிதாக வந்திடும்
இருமல் காய்ச்சலென
சிறுபிணி கண்டாலே
மனம் பதைத்து
விழித்திருந்து
பக்குவமாகப் பரிகரித்து
நோய் தீர்த்த
எம் தாயே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

வயதாகி வளர்ந்த நாம்
விழிப்புடனே கற்று
தேர்வுகளில் தேறிட
சுடச்சுட தேநீர்
அடிக்கடி தந்து
அக்கணம் நாம்
சோர்வின்றிப் படிக்க
பக்கமாக விழித்திருந்த
குல விளக்கே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

வாழ்க்கை என்னும் மேடையிலே
அழகழகாக ஆட்டம்
உத்தியோகப் படிக்கல்லை
எட்டி நாம் பிடித்தவேளை
ஆனந்தக் கண்ணீரில்
எம்மை தாலாட்டிய
அன்புத் தாயே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

காதலித்துக் கைப்பிடித்து
புது உறவில் நனைந்து
புதுவாழ்வில் நாம்
அடியெடுத்து வைக்கையிலே
பிரிவுத் துயரில்
உள்ளம் நோகையிலும்
எமை வாழ்த்தி
கண்களைத் தாழ்த்திய
பண்பின் சிகரமே..
உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

மடியிலே தவழ்ந்திருந்த
பேரச் செல்வங்களின்
மழலை அமுதினை
அள்ளி உண்கையிலே
பறித்தெடுத்தது போல் விலகி
தூர தேசம் செல்கையிலும்
போய்வர விடைதந்து
மௌனமாக அழுது நின்ற
தீபச் சுடரே.. உனக்காக நாம்
என்ன செய்தோம்..?

இப்புவியில் பட்ட கடன்
எத்தனையோ..
அத்தனையும் தீர்த்திடலாம்
தாயே உன்னிடம் பெற்ற கடன்
தீருவதும் உண்டோ..
தீர்த்திடவும் முடியுமோ..
அம்மா சொல்..!



கடன் வேண்டாம் என்றே
நீ கடன் தீர்த்து சென்று விட்டாய்..
எம் கடன் தீர்க்க என்ன வழி... ..
இன்று எம் கண்களிலே கண்ணீர்..
எம் கண்கள் துடைக்க
உன் மென் விரல்கள்
மீண்டும் வந்திடுமா...
அம்மா சொல்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அம்மா..! கொம்பனிக்கு தேவையான வாகன பார்ட்ஸ் (உதிரிப்பாகங்களை) வாங்க வேண்டியிருக்கு. நான் ஒருக்கா கொழும்புக்கு போய் வாறனம்மா. நீங்கள் கவனமாய் இருங்கோ" எண்டு சொல்லிப்போட்டு ஓமந்தை தடைமுகாமை தாண்டின என்ரை மகன் இப்ப ஆயுள் தண்டனை கைதியாக சிறையில இருக்கிறான்...! மருமகளும் மோசம் போய்ட்டாள்.. இப்ப மகன்ரை ரெண்டு சின்னப் பிள்ளைகளும் அனாதையா நிக்குதுகள். கடவுளே நான் யாரிட்ட சொல்லுவன்."

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் தாயார் பிலோமினா மனோசாந்தி , தன் மகனையும், தாய் தந்தையரின் அன்புக்காக ஏங்கி நிற்கும் பேரப்பிள்ளைகளையும் நினைத்து கலங்குகிறார். அவர் தன் உள்ளக்கிடக்கையை 'உதயன்-சஞ்சீவி' வாசகர்களோடு பகிர்ந்துகொள்கிறார்.





# கண்ணீருக்கு முடிவில்லையா?

நேர்காணல் பொ.சோபிகா



கிளிநொச்சி நகரத்தை அண்டிய மருதநகர், 4 ஆம் வாய்க்கால் பகுதியிலேயே நாம் வாழ்ந்து வருகிறோம். எனது மகன் சச்சிதானந்தன் ஆனந்தசுதாகர், தனியார் கட்டுமான ஒப்பந்த நிறுவனம் ஒன்றில் கனரக வாகன ஓட்டுநராக பணிசெய்து வந்தார். மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்துவந்தார். 2008.04.21அன்று, வேலை நிமித்தம் கொழும்புக்கு செல்கிறேன் என வீட்டில் இருந்து புறப்பட்டு போனான் என் பிள்ளை. சில நாள்களுக்கு பிறகு செஞ்சிலுவை குழு வந்து சொன்னபோது தான்,மகன் கைது செய்யப்பட்ட விடயம் எமக்கு தெரியவந்தது.

மகன் பிலியத்தலையில் தங்கியிருந்த போது, அந்தப்பகுதியில் ஒரு குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதனையடுத்து அந்தப் பிரதேசம் முழுவதும் பாதுகாப்பு தரப்பினால் சுற்றிவழைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. துடிப்பான இளமைத் தோற்றமும் கிளிநொச்சி முகவரியும் பொலிஸாரின் கண்களை குறுகுறுக்க வைத்தது. அவர்கள் சந்தேகத்தின் பெயரில் மகனை கைதுசெய்து விட்டனர். பிலியந்தலை பொலிஸாரால் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட என் மகன், அங்கு இரண்டு மாதகாலம் கடுமையான விசாரணைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. அதன் பிறகு கல்கிசை குற்றப்புல னாய்வு பிரிவின் பொறுப்பில் எடுக்கப்பட்டு அங்கும் சுமார் ஒரு மாதகாலம் விசாரணை இடம்பெற்றுள்ளது. இறுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டவிதியின் கீழ் 'பி.அறிக்கை' தயார் செய்த விசாரணையாளர்கள், 2008 ஜுலை 21 இல் எனது மகனை கஸ்பாவ நீதவான் நீதிமன்றில் முற்ப டுத்தினர். மன்றின் கட்டளைப்படி மகன் அன்றைய தினமே களுத்துறை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து அனைத்து அரசியல் கைதிகளையும் கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலைக்கு மாற்றினர்.

## 299 குற்றச்சாட்டுக்கள்

நோயாளியான எனது மருமகள் தையல் வேலைகளைச்செய்து இரு பிள்ளைகளையும் பராமரித்து வந்தார்.எனக்கு வசதி கிடைக்கும்போது மாத்திரம் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு சிறைச்சாலைக்கு சென்று மகனை பார்த்து வருவதுண்டு. வெறுமனே நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு வந்த மகனுக்கு எதிராக 2013 ஜுலை 7 ஆம் திகதியன்று கொழும்பு மேல் நீதிமன்றில் வலுவானதொரு குற்றப்பத்தி ரிகை தாக்கல் செய்யப்பட்டது. பிலியந்தலையைச் சேர்ந்த வழக்கின் பிரதான சந்தேகநபர் நோய் வாய்ப்பட்டு சிறைக்குள் ளேயே உயிரிழந்துவிட்டார் அதனால் குற்றப் பொறுப்புகள் அனைத்தும் என் பிள்ளையின் தலையில் சுமத்தப்பட்டு விட்டது. அதாவது பிலியந்தலை குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் சம்பந்தப்படுத்தி தாக்குதலுக்கான வேவுத் தகவல்களை திரட்டி புலிகளுக்கு வழங்கியதன் மூலம் மனித உயிர்களுக்கும் அரச உடைமைகளுக்கும் பெரும் சேதத்தை விளைவித்தார் எனக் குறிப்பிட்டு, சுமார் 299 குற்றச்சாட்டுக்கள் என் மகள் மீது சுமத்தப்பட்டன. இதனை கேள்வியுற்று அதிர்ச்சியடைந்த நாம் சிங்கள சட்டத்தரணி ஒருவரை நாடினோம். அவர் வழக்கின் பாரதூரத்தன்மையை குறைத்து இலகுமுறையில் வழக்கை முடிவுக்கு கொண்டு வருவதாயின் சுமார் 10 லட்சம் தேவைப்படும் எனக் கூறினார்.பல வழிகளிலும் பணம் திரட்டமுடியாமல் போனது ஆகையால் இயல்பான முறையில் வழக்கு விசாரணை நடந்துகொண்டிருந்தது.

## 93 ஆயுள் தண்டனை அதிர வைக்கும் கடும் தண்டனை

எமது தரப்பாக மன்றில் சட்டத்தரணி நவாவி முன்னிலையாகி வந்தார். மனித உரிமைக்கான சட்ட உதவி நிலையமும் சில புலம்பெயர் உறவுகளும் தம்மாலான உதவிகளைச் செய்தனர். வழக்கில் நல்லதொரு தீர்ப்பு கிடைக்கும் என அனைவரும் நம்பியிருந்தோம். ஆனாலும் கடவுள் நம்மை ஏமாற்றிவிட்டார். 2018 நவம்பர் 8 அன்று கொழும்பு மேல் நீதிமன்றம், மனுக்கெதிரான 299 குற்றச்சட்டுக்களில் 206 குற்றச்சாட்டுக்களை போதிய சாட்சி ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனக் கூறி தள்ளுபடிசெய்தது. தவிர மிகுதி 93 குற்றச்சாட்டுக்களிலும் மகனைக் குற்றவாளியாக தெரிவித்த நீதிமன்றம் 93 குற்றங்களுக்கும் '93 ஆயுள் தண்டனைகளை'வழங்கியதுடன் மேலும் ஒரு குற்றச்சாட்டுக்கு 10 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையும் அறிவித்து தீர்ப்பளித்துவிட்டது. நாடே வியந்து பார்க்கும் அளவிலான இந்தக் கடும் தண்டனை, ஏனையோரை ஆச்சரியப்படுத்திய வேளை எமது குடும்பத்தாரை கதிகலங்க செய்துவிட்டது. நோய்வாய்ப்பட்டிருந்த எனது கணவரும் ( சுதாகரனின் தந்தை) சொற்ப நாளில் துயரம் தாளாது இறந்து போனார். தனது கணவனது மொத்த ஆயுளையும் பறித்து விட்டார்களே என்கின்ற செய்தி அறிந்த மனைவி யோக ராணி மூச்சையாகி படுக்கை நோயாளியாக 4 மாதங்கள் தீவிர சிகிச்சை பிரிவில் கிடந்து அவதியுற்றார்.

கடைசியில் 2019 மார்ச் 15 விடிகின்ற போது நன்மை தீமை அறியாத இரு சின்னஞ் சிறுசுகளையும் அநாதையாக பரிதவிக்க விட்டுவிட்டு ஆண்டவர் மருமகளின் உயிரையும் பறித்துக்கொண்டார். இலங்கை அரசு மட்டுமல்ல இறைவனும் இப்படி தொடர்ந்து துய ரத்தை தந்தால் நாம் யாரிடம் செல்வது?

## தந்தையுடன் சிறை செல்ல ஆயத்தமான மகள்

காவலர்கள் புடை சூழ மனைவியின் இறுதிச்சடங்கில் கைவிலங்கோடு கலந்து கொண்டான் ஆயுள் கைதியான என் மகன் ஆனந்தசுதாகர், துணையவளின் சிதைக்கு தீ மூட்டிவிட்டு சுடுகாட்டில் இருந்து மீண்டும் சிறை செல்ல ஆயத்தமானார்.

அவனை காவலர்கள் சிறைச்சாலை பேருந்தில் ஏற்றியபோது, "அப்பா அம்மாவும் எங்களை விட்டிட்டு போய்ட்டா எங்களுக்கு இனியாரப்பா இருக்கு...நானும் உங்களோடே வரப்போரன் " என்று கண்ணீர் சொரியும் விழிகளுடன் தகப்பனின் கையைப்பற்றிப் பிடித்துக் கொண்டு சிறைப் பேருந்தில் ஏறினாள் எனது 11வயதான பேர்த்தி சங்கீதா. அன்று இந்தப் பாலகியின் பரிதாப நிலையை கண்டு கண்ணீர் விடாதவர்களே இல்லை. ஊடகங்க[illegible]ர்ச்சி மேலிட அதனை வெளிப்படுத்தின.

### கருணை மனு கையளிப்பு

பின்னாளில் தாயை இழந்து, தந்தையையும் பிரிந்து வாழும் இரு சிறு பிள்ளைகள் மீதும் கருணைகாட்டி ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டுள்ள அரசியல் கைதியான எனது மகனை பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யுமாறு இன, மத, மொழி, பிரதேச பேதம் கடந்து நிலத்திலும் புலத்திலுமிருந்து மக்கள் பிரதிநிதிகள், மனித உரிமை அமைப்புக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள்,பொதுமக்கள் எனபலதரப்பட்டவர்களால் சுமார் 5 லட்சத்துக்கு மேற்பட்ட கையெழுத்துக்கள் திரட்டப்பட்ட கருணை மனு அப்போதைய ஜனாதிபதியான மைத்திரிபாலவிடம் கையளிக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் முன்னாள் ஜனாதிபதியோ, இந்நாள் ஜனாதிபதியோ ஏறெடுத்தும் பார்க்கவில்லை. மாறாக, தமக்குத் தேவையானவர்களை விடு விப்பதிலேயே ஆர்வம் காட்டினார்கள். தென்னிந்தியாவிலிருந்து 'மைத்திரிக்கு ஒரு கடிதம் ஐயா மனமிரங்கி அதை படியும்' என பாடல் பாடி வேண்டுகோள் விடுத்தி ருந்தார் தேனிசை செல்லப்பா.அது கூட அதிகாரம் படைத்தவர்களின் செவிகளைச் சேரவில்லை.

### விடுவிப்பதாக வாக்குறுதி

கிளிநொச்சிக்கு வந்திருந்த ஆளும் தரப்பு அரசியல் பிரமுகர்களான அங்கஜன் ராமநாதன், நாமல் ராஜபக்ச, தயாசிறி ஜெயசேகர போன்றவர்கள் எமது வீடு தேடி வந்து பிள்ளைகளிடம் 'அப்பா விரைவில் வீட்டுக்கு வருவார்' என வாக்குறுதி அளித்துவிட்டு சென்றனர்.ஆனால் எதுவும் நடைபெறவில்லை. அண்மையில் ஆளும் தரப்பு நாடாளுமன்றஉறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் எமது மகனது விடுதலை தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசியிருக்கிறேன். விரைவில் நல்லதொரு முடிவு கிடைக்கும் என்றும் தெரிவித்தார். அதுவும் நடைபெறவில்லை. தற்போது, மகனுக்கு மேல் நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ள தண்டனைத் தீர்ப்பை ஆட்சேபித்து மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றில் மேல்முறையீடு செய்துள்ளது. பேரப்பிள்ளைகளான கனிதரன், சங்கீதா ஆகிய இருவருக்குமான செலவீனங்களை கருணையுள்ளம் கொண்ட புலம்பெயர் உறவுகள் கொடுத்துதவியுள்ளார்கள். நோயாளியான எமக்கு பிறகு இந்த பிள்ளைகளுக்கு யார் பொறுப்பு? எவர் வழிகாட்டுவார்,?

### சந்தர்ப்பம் அளியுங்கள்

எமது தாய்நாட்டின் ஆட்சியாளர்களிடம் நான் கேட்பதெல்லாம் ஏதோ ஒரு காரண காரியத்தின் பெயரில் நாட்டில் யுத்தமொன்று இடம்பெற்றது. அது முடிவுறுத்தப்பட்டு 12 ஆண்டுகள் கடந்துவிட்டன. விரும்பியோ விரும்பாமலோ குறித்த யுத்தத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் சிறை வைக்கப்பட்டுள்ள என் மகன் போன்ற அனைவருக்கும் மன்னிப்பளித்து, அவர்கள் தமது உறவுகளுடனும் சமூகத்துடனும் சேர்ந்து வாழ ஒரே ஒரு சந்தர்ப்பம் அளியுங்கள். இதனால் பல குடும்பங்களதும், பிள்ளைகளதும், பெற்றோரதும் கவலைகளுக்கும் கண்ணீருக்கும் முடிவுகிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இஸ்ரேலில் துல்லியத் தாக்குதல்களில் கூட தப்பித்ததால் , டெய்ஃப் தப்பித்து செல்வதில் வல்லவர் என புகழப்பட்டார். அவரின் எதிரிகள் அவருக்கு `ஒன்பது உயிர் கொண்ட பூனை` என்ற பட்டப்பெயரை வழங்கினர்.**



# டெய்ஃப்: ஒன்பது உயிர் கொண்ட பூனை



உலகன்

டெய்ஃப். உலகத்தையே மிரட்டும் இஸ்ரேலின் உளவுப்படையான மொஸாட்டுக்கே , கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக இந்தப் பெயரைக் கேட்டாலே உதறலெடுக்கும். எத்தனையோ முக்கிய புள்ளிகளை அநாவசியமாக போட்டுத்தள்ளிய மொஸாட்டுக்கு டெய்ஃப்பின் உயிரை எடுப்பதுதான் பிரதான இலக்கு. ஆனால் அதற்கு டெய்ஃப் இடமளிக்க வேண்டுமே.

## மாண்டவன் மீண்டான்

"ஹமாஸ் குழுவினரின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை என்றால், 'அதிக விலையை' இஸ்ரேல் கொடுக்க நேரிடும்" இப்படி ஒரு மிரட்டும் குரல் பதிவு கடந்த மாத முற்பகுதியில் இஸ்ரேல் அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டிருந்தது. ஹமாஸ் என்பது, பலஸ்தீனத்தை இஸ்ரேலின் பிடியில் இருந்து மீட்கப் போராடிவரும் ஒரு ஆயுதக் குழு. ஹமாஸால் அனுப்பப்பட்டிருந்த அந்த குரல்பதிவில் ஒலித்த குரலுக்குச் சொந்தக்காரர் யாரென அறிந்தபோது இஸ்ரேலுக்கு குலைப்பன் அடிக்கத் தொடங்கிவிட்டது. அது சந்தேகமேயில்லாமல் டெய்ஃப்பின் குரல் தான். கிட்டத்தட்ட 7 ஆண்டுகளுக்கு முன்னர் எந்த டெய்ஃபை தாங்கள் போட்டுத்தள்ளிவிட்டதாக இஸ்ரேல் நினைத்துக்கொண்டிருந்ததோ அதே டெய்ஃப், இஸ்ரேலை மிரட்டி குரல்பதிவு அனுப்பியிருக்கும்போது உதறலெடுக்கத்தானே செய்யும். ஆனாலும் அந்தப் பயத்தைக் காட்டிக்கொள்ளாதிருப்பதற்காக , டெய்ஃப் விடுத்த எச்சரிக்கையை இஸ்ரேல் அலட்சியம் செய்தது. விளைவு?

## சீறிப்பாய்ந்த ஏவுகணைகள்

ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் இஸ்ரேலை நோக்கி பாயத்தொடங்கின. அவற்றில் பெரும்பாலானவற்றை இஸ்ரேலின் தன்னியக்க ஏவுகணை எதிர்ப்பு பொறிமுறையான 'அயன் டோம்' அழித்திருந்தாலும்,குறிப்பிடத்தக்க ஏவுகணைகள் இஸ்ரேலின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகளைத் தாக்கி உயிரிழப்புகளை உண்டுபண்ணவே செய்தன.

கிட்டத்தட்ட 11 நாள் போரின் பின்னர் மோதல் தவிர்ப்பு நிலை நடைமுறைக்கு வரும்வரை ஹமாஸின் ஏவுகணைப்பாய்ச்சல் நிற்கவேயில்லை. என்னதான் இஸ்ரேல் அவற்றை அழித்தபோதும், விமானக் குண்டுவீச்சால் காஸாவை சிதைத்த போதும், ஹமாஸின் ஏவுகணைக் கட்டமைப்புக்கு சிறுகீறல் கூட விழவில்லை. அதற்குக் காரணம் டெய்ஃப். இப்போது ஹமாஸின் இராணுவப் பிரிவுக்கு டெய்ஃப் தான் தலைவர். எனவே மிகக் கவனமாக ஹமாஸின் பிரம்மாஸ்திரமான ஏவுகணைக் கட்டமைப்பை டெய்ஃப் பேணி வருகின்றார். அதனாலேயே என்னதான் விமானக்குண்டு வீச்சுக்களால் காஸாவை சல்லடையாக்கியபோதும் , ஹமாஸின் ஏவுகணை ஏவும் பலத்தை முடக்க இஸ்ரேலால் முடியாமல் போயிற்று.

## மீண்டும் தப்பிய டெய்ஃப்

"11 நாs;fள் சண்டையின்போது நாங்கள் தொடர்ந்து முகமது டெய்ஃபை கொல்ல முயற்சித்தோம். குறைந்த பட்சம் இருதடவைகள் இம்முறை அவரை இலக்குவைத்தோம். ஆனால் இந்த முறையும் நாங்கள் தோற்றுவிட்டோம் " என இஸ்ரேல் பாதுகாப்பு படையின் செய்தித் தொடர்பாளர் ஹிடாய் சில்பெர்மென் நியூயார்க் டைம்ஸுக்கு வழங்கிய நேர்காணலில் தங்கள் இயலாமையை ஒப்புக்கொண்டார். இதன்மூலம் கடந்த இருபது வருடங்களில், ஏழாவது முறையாக ஒரு இஸ்ரேலின் கொலைப்பொறியில் இருந்து டெய்ஃப் தப்பித்துள்ளார்.

## யாரிந்த டெய்ஃப்?


டெய்ஃப்பின் இயற்பெயர் முகமது டியாப் இப்ராஹிம் அல் மஸ்ரி, ஆனால் இஸ்ரேலிய வான் தாக்குதல்களை தவிர்க்க நாடோடி வாழ்க்கையை தேர்ந்தெடுத்ததால் அவர் 'டெய்ஃப் 'என்று அழைக்கப்படுகிறார். டெய்ஃப் என்றால் அரேபிய மொழியில் நாடோடி,பயணி என்று அர்த்தம். டெய்ஃப், காஸாவின் கான் யூனிஸ் முகாமில் 1965 ஆம் ஆண்டு பிறந்தார். அப்போது அந்த பிராந்தியம் எகிப்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அவரின் வளர்ப்பு குறித்து வெகுசில தகவல்களே நமக்கு தெரியும்.

ஹமாஸ் உருவானபோது டெய்ஃப் இளைஞராக இருந்திருப்பார். அவர் 80களின் பிற்பாதியில்தான் ஹமாஸில் சேர்ந்தார். இஸ்ரேலுக்கு எதிரான ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபாடு காட்டியதால் டெய்ஃப் ஹமாஸின் இராணுவப் பிரிவான இஸிடின் அல் கசாம் படையணியின் முக்கிய தலைவரானார்.

"அவர் கடும்போக்கு ஹமாஸ் போராளியாக அறியப்பட்டார்.







என்கிறார் அமெரிக்காவின் முன்னாள் பயங்கரவாத தடுப்பு ஆலோசகராக இருந்த லெவிட். ஹமாஸ் குழுவில் குண்டுகளை தயாரிப்பதற்கு புகழ்பெற்ற யெஹ்யா அயாஷ் போன்ற தளபதிகளுடன், டெய்ஃப் நெருக்கமாக இருந்தார். அயாஷை என்ற இந்த ஹமாஸ் தளபதியை எல்லோரும் `பொறியாளர்` என்று அழைப்பார்கள். அவர் 1990களின் முன்பகுதியில் இஸ்ரேலில் பஸ்கள் மூலம் அடுத்தடுத்து நடத்தப்பட்ட குண்டு வெடிப்புகளுக்கு காரணமானவர் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அயாஷின் துணையோடு இஸ்ரேலுக்கு எதிராக பல பழிவாங்கும் தாக்குதல்களை முக்கிய மூளையாக செயற்பட்டு வெற்றிகரமாக நடத்திக்காட்டினார் டெய்ஃப்.

## உயர்ந்த செல்வாக்கு

இந்த நடவடிக்கைகள் டெய்ஃபின் செல்வாக்கை ஹமாஸுக்குள் உயர்த்தியது. ஹமாஸின் மிகமுக்கியமான தளபதிகளில் ஒருவராக டெய்ஃப் மாறினார். 2002ஆம் ஆண்டு ஹமாஸ் இராணுவ பிரிவின் நிறுவுநரான சலாஹ் ஷேஹடே இஸ்ரேலியத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அதற்குப் பின்னர் அந்தப் பொறுப்பு யாருக்கு வழங்கப்படும் என்ற கேள்விகளுக்கு இடமிருக்கவில்லை. ஏனெனில் ஹமாஸ் போராளிகளின் ஒட்டுமொத்த தெரிவாக டெய்ஃப் இருந்தார். இராணுவப்பிரிவுத் தலைவராக பொறுப்பெடுத்தார்.

ஒரு தலைவராக டெய்ஃப் , ஹமாஸின் அடையாள ஆயுதமான காசம் ஏவுகணைகளை வடிவமைத்தார். காஸாவில் பதுங்கியிருக்கக்கூடிய, அதிநவீன சுரங்க அமைப்புகளை உருவாக்கினார். இந்தச் சுரங்கங்களில் தான் டெய்ஃப் தனது பெரும்பாலான நாs;fளை கழித்துள்ளார். இங்கிருந்து தான் ஹமாஸின் நடவடிக்கைகளையும் வழிநடத்தினார்.

**அயாஷின் துணையோடு இஸ்ரேலுக்கு எதிராக பல பழிவாங்கும் தாக்குதல்களை முக்கிய மூளையாக செயற்பட்டு வெற்றிகரமாக நடத்திக்காட்டினார் டெய்ஃப்.**

## ஒன்பது உயிர் கொண்ட பூனை'

டெய்ஃபை பொறுத்தவரை அவரது போராட்டப் பயணம் முழுதும், வாழ்வா சாவா என்ற நிலையில் தான் இருந்துள்ளது.

2000 ஆண்டின்போது இஸ்ரேல் நடத்திய நான்கு தாக்குதல் முயற்சிகளில் அவர் காயங்களுடன் தப்பித்தார் என சொல்லப்படுகிறது. அவற்றில் இரு தடவைகள் மிகப்பாரதூரமான காயங்களும் அவருக்கு ஏற்பட்டிருந்தன. இந்தத் தாக்குதல்களில் அவர் தன் ஒரு கண்ணையும் , தோள்மூட்டையும் இழந்துள்ளார் என இஸ்ரேலியத் தரப்பு சொல்கிறது. 2006 ஆம் ஆண்டு ஹமாஸ் குழுவின் உறுப்பினர் ஒருவரின் இல்லத்தில் வான் தாக்குதல் நடத்திய பின்னர் இஸ்ரேலிய பாதுகாப்பு படையின் உளவுத் துறையின் முன்னாள் அதிகாரி டெய்ஃபின் காயங்கள் குறித்து உறுதிப்படுத்தினார்.

"அந்த தாக்குதலுக்கு பிறகு, அதனால் உண்டான பாரதூரமான காயங்களால் தொடர்ந்தும் அவர் ஹமாஸின் இராணுவத் தலைவராக செயற்படமாட்டார் என எண்ணினோம். இருப்பினும் அவரால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு குணமடைந்தார். ஆனால் அவரது ஒரு கண் போனது போனதுதான்" என இஸ்ரேலின் ஓய்வுபெற்ற ஜெனரல் ஒருவர் கூறுகின்றார்.

இஸ்ரேலில் துல்லியத் தாக்குதல்களில் கூட தப்பித்ததால் , டெய்ஃப் தப்பித்து செல்வதில் வல்லவர் என புகழப்பட்டார். அவரின் எதிரிகள் அவருக்கு `ஒன்பது உயிர் கொண்ட பூனை` என்ற பட்டப்பெயரை வழங்கினர்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன் டே மாஸ்க்கும்...




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸை எதிர்கொண்ட போதிலும் அரசாங்கம் எதிர்பார்த்த வெற்றிகளை பெறத்தவறிவிட்டது என்பதைத் தான் இமேஷ் ரணசிங்க போன்ற ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆனால் இது விடயத்தில் வெற்றிபெற்ற நாடுகளை தொகுத்துக் கவனித்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவரும். மையத்தில் அதிகாரத்தை குவித்து நோயெதிர்ப்பு நடவடிக்கைகளை இராணுவத்தனமாக முன்னெடுத்த நாடுகள் என்று பார்த்தால் சீனாவை மட்டும்தான் பெருமளவுக்கு முன்னுதாரணமாகக் காட்டமுடியும். ரஷ்யாவும் பெருமளவுக்கு இராணுவத் தனமாகவே நிலைமைகளை அணுகியது. எனினும் சீனா அளவுக்கு அவர்கள் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதிலும்கூட சீனா எந்தளவுக்கு கட்டுப்படுத்தியிருக்கிறது என்பது தொடர்பில் வெளிப்படையான பக்கச்சார்பற்ற செய்திகளைப் பெற முடியவில்லை என்பதை ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அதேசமயம் வைரஸ்தொற்றை இப்போதைக்கு ஒப்பீட்டளவில் வெற்றிகரமாகக் கையாண்ட நாடுகள் என்று வரிசைப்படுத்தப்படும் நாடுகளை தொகுத்துப் பார்த்தால் அவை பெரும்பாலும் சிவில் விழுமியங்களையும் வெளிப்படைத்தன்மையையும் அதிகளவு மதித்த நாடுகள்தான். மையத்தில் அதிகாரத்தை குவித்து இராணுவத்தனமாக முடிவுகளை எடுத்த நாடுகள் அல்ல. எனவே பெரும் தொற்று நோய்க்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளை அதிகமதிகம் இராணுவ மயப்படுத்துவதற்கு பதிலாக மக்கள் மயப்படுத்த வேண்டும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஒன்றுதான் இது விடயத்தில் அதிகபட்சம் வினைத்திறன் மிக்கது என்பது கடந்த ஓராண்டு காலத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மக்களை வைரஸுக்கு எதிராக உளவியல் ரீதியாகவும் சுகாதார ரீதியாகவும் தயார்படுத்த வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகபட்சம் வெளிப்படைத் தன்மையோடு மக்கள் மயப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது. இதில் சிவில் சமூகங்களையும் மத நிறுவனங்களையும் ஒன்றிணைக்க வேண்டும்.

அவ்வாறு மக்கள் மையப்படுத்தப்படாத ஒரு பின்னணியில் தான் 'வன் டே மாஸ்க்கை'( ஒருநாள் மட்டும் அணியும் முகக்வசம்) அணிபவர்களின் தொகை ஒப்பீட்டளவில் அதிகமாக காணப்படுகிறதா? நமது தெருக்களில் ஒரு கணக்கெடுப்பை செய்தால் அதில் அதிகமானவர்கள் வன் டே மாஸ்க் அணிந்திருக்கக் காணலாம். ஒரு நாள் மாஸ்க் எனப்படுவது மீளப் பயன்படுத்த முடியாதது. ஆனால் நாட்டில் வன் டே மாஸ்கை திரும்ப திரும்ப துவைத்து பயன்படுத்தும் ஒரு நிலைமையை காணலாம். வீதிகளிலும் அலுவலகங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும் வன் டே மாஸ்க்கை அணிபவர்களே அதிகம். அவர்களெல்லாம் வன் டே மாஸ்க்கை ஒரு நாள் மட்டும் பயன்படுத்தி விட்டு எறிவதில்லை.. வன் டே மாஸ்க் அவ்வாறு பல நாள்கள் பல தடவைகள் துவைத்துப் பயன்படுத்தக் கூடியது அல்ல. அதற்கென்று மீளப் பயன்படுத்தக்கூடிய வகைகள் உண்டு.



ஆனால் மக்கள் பெருமளவுக்கு வன் டே மாஸ்க்கைத்தான் அணிகிறார்கள். ஏனெனில் அதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.... முதலாவது அது பயன்படுத்த இலகுவானது. இரண்டாவது விலை குறைந்தது. மூன்றாவது துவைத்துப் பாவிக்க இலகுவானது. நாலாவது கண்ணாடி அணிபவர்களுக்கும் ஹெல்மெட் அணிபவர்களுக்கும் இலகுவானது. ஐந்தாவது வாகனம் ஓட்டும்பொழுது அணிந்திருக்க வசதியானது. போன்ற பல காரணங்கள் காட்டப்படுகின்றன. ஆனால் இந்தக்காரணங்கள் யாவும் அந்த மாஸ்க் தொடர்ந்து பல நாள்களுக்குப் பாவிக்க முடியாதது என்ற அடிப்படையான சுகாதார விளக்கத்தை புறக்கணிப்பவை.


இது விடயத்தில் ஏனைய நாடுகளில் நிலைமை எப்படியிருக்கிறது என்று இந்தக்கட்டுரையாளருக்கு தெரியாது. பிரான்ஸில் வசிக்கும் ஒருவர் சொன்னார் "....நோய்த்தொற்றின் தொடக்கத்தில் ஒரு பெட்டி வன் டே மாஸ்க் முப்பது யூரோக்களுக்கு விற்கப்பட்டது. ஆனால் இப்பொழுது ஒரு பெட்டி இரண்டரை யூரோக்கு விற்கப்படுகிறது. முன்பு ஒரு குப்பி சனிடைசர் ஐந்து யூரோ. இப்பொழுது ஒரு லீற்றர் ஐந்து யூரோ"

அதாவது பிரெஞ்ச் அரசாங்கம் விலைகளைக் குறைத்திருக்கிறது. ஆனால் நமது நாட்டில் கொரோனாவுக்கு முன் ஒரு பெட்டி வன் டே மாஸ்க் நானூறு ரூபா. இப்பொழுது நல்ல மாஸ்க் ஒருபெட்டி எழுநூறு ரூபா. மாஸ்க்கின் விலை குறைந்தால் அதைத் தோய்த்துப் பாவிப்பது குறையுமா?

எதுவோ, இலங்கைத் தீவின் தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரை இதுதான் நிலைமை. அதாவது மக்கள் வைரஸிடம் இருந்து தங்களை பாதுகாப்பதற்காக மாஸ்க் அணிகிறார்களா? அல்லது பொலிஸாரிடமிருந்தும் படைத்தரப்பிடமிருந்தும் குறிப்பாக சட்டத்திடமிருந்தும் தங்களை பாதுகாப்பதற்காக மாஸ்க் அணிகிறார்களா? என்ற கேள்விக்கு விடை முக்கியம்.

இப்படித் தானிருக்கிறது வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளின் மக்கள் மயப்பட்டதன்மை. இப்படியே போனால் அடுத்தடுத்து ஏற்படக்கூடிய தொற்று அலைகள் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

எனவே இது விடயத்தில் அரசாங்கம் கண்டிப்பாக செய்ய வேண்டியது என்னவென்றால் வைரஸுக்கு எதிரான நடவடிக்கைகளை ஆகக்கூடிய பட்சம் வெளிப்படைத்தன்மை மிக்கதாக மக்கள் மயப்படுத்துவது தான். மாறாக அவற்றை இராணுவ மயப்படுத்துவது அல்ல. ■



# தடுப்பூசி போட்டவைக்கு...

இப்ப இஞ்சையும் கொரோனாத் தடுப்பு ஊசி போடத் துவங்கீட்டின மெல்லே! அது பற்றி சில விசயங்களை உங்களுக்க எழுத வேணும் எண்டு யோசிச்சன். போட்ட சில இடங்களிலை சனம் கரிசனை காட்டேல்லையாம் எண்டு ஒரு செய்தி. சில இடங்களிலை மருந்து காணாதாம் எண்டு சொல்லிச்சினம். படிச்சவைக்கெண்டு கேட்டு பல்கலைக்கழகத்திலையும் போட்டவையாம்.

வந்த அவ்வளவையும் சில இடங்களுக்குத்தான் போட்டு இருக்கினம். இன்னும் பல இடங்களுக்குப் போடக் கிடக்காம். இப்ப இன்னும் மூண்டு இலட்சம் குப்பியள் வேணும் எண்டு கேட்டிருக்கினம்போலை தெரியிது. வந்தாப் பிறகுதான் தெரியும் எங்கை போடப்போயினமெண்டு.

எங்கடை ஊருக்கையும் கனபேர் போட்டவை. சிலர் நடிகர் விவேக் கொரோனாத் தடுப்பு ஊசி போட்டுத்தான் செத்தவர் எண்டதை வைச்சுக் கொண்டு போடப் பயப்பிட்டு ஒதுங்கிவிட்டினம்.

எங்கடை ஊர் மோட்டு மாஸ்டர் ஊசி போட்டவராம். அந்தக் கதை எனக்குத் தெரியாது. ஆளை நேற்றைக்கு றோட்டிலை பாத்தனான். "என்னை ஒருத்தரும் இனி அசைக்கேலாது." எண்ட மாதிரி நெஞ்சை நிமித்திக் கொண்டு வந்த மாஸ்டரை மறிச்சுக் கேட்டன் " நடையிலை ஒரு புதுக் கம்பீரம் தெரியிது. என்ன சின்னவளுக்குச் சம்மந்தம் சரி வந்திட்டுதோ?" எண்டு...



## அவசரமா ஒரு கடுதாசி

"அதொண்டுமில்லை கொரோனா ஊசி போட்டிட்டன்" எண்டு ஏதோ ஏழு உலகத்தையும் வெண்டிட்டு வந்த மாதிரிப் பதில் சொன்னார்.

"போட்டால் என்ன?" எண்டு கேட்டன். "இனி கொரோனா எனக்குக் கிட்டவும் வராது. இனி நான் பயப்பிடாமல் சந்தைக்குப் போய் சாமான்களை வேண்டலாம். கரையூருக்குக் கறி வேண்டப் போகலாம். கள்ளுச் சாராயத்தைப் பயப்பிடாமல் குடிக்கலாம்." எண்டு சிரிச்சுக் கொண்டு சொன்னார்.

'எட மாஸ்டர் இவ்வளவு படிச்சும் அந்தாளுக்கு அந்த ஊசி பற்றின அறிவு கொஞ்சம் கூட இல்லையே' எண்டு கவலைப்பட்டன்.

இது முதல் ஊசி எண்டு அவருக்குத் தெரியேல்லை. இதுக்குப் பிறகும் ஒரு ஊசி இருக்கு. அதையும் போட வேணும். அதைப் போட்டாலும் கொரோனாதான் தொத்தாது எண்டதுக்கு 80% தான் உத்தரவாதம். இப்ப கொரோனவிலையும் பிற நாட்டிலை இருந்து பால்மா வந்த மாதிரி ஆபிரிக்கா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா எண்டு திரிபுபட்ட பல வகை கொரோனாக்கள் வந்திட்டுது. அதுகளும் இந்த மருந்துக்குக் கட்டுப்படுமோ எண்டு சொல்லேலாதாம். இதை எல்லாம் சரியா விளங்கிக்கொள்ளாமல்தான் மாஸ்டர் விசர்க் கதை கதைச்சவர்.


பொதுவா ஊசி போட்டவைக்கு ஒரு விளக்கத்தைச் சொல்ல வேணும். இந்த ஊசியை இப்பதான் கண்டு பிடிச்சவங்கள். பொதுவா இது மாதிரி எல்லாம் புதிசாக் கண்டுபிடிக்கேக்கை அதாலை வாற பிரச்சினையள் என்ன எண்டும் ஆராய்வாங்கள். பக்க விளைவு என்ன எண்டும் அறிவிக்கிறது வழமை. ஆனபடியாலை இப்ப கொரோனா பரவாமல் தடுக்கிறதும். அதின்ரை பிடிக்குள்ளை ஆப்பிடாமல் தப்பிறதும்தான் எங்கடை தேவை. இனிமேல் இரண்டாவது ஊசியையும் போட வேணும். அதுகும் போட்டாப் பிறகும் 80- 85 வீதம்தான் வேலை செய்யுமாம். கொரோனா வைரஸ் திரிபுபட்டிருந்தால் அதுக்கு இந்த ஊசி சரிவராதாம். எண்டாலும் தடுப்பூசி போட்டால் கொரோனா வராட்டியும், அந்த வைரஸைக் காவிக்கொண்டு திரியிற வாகனங்கள் போல இருக்கிறதை எந்த ஊசியாலும் தடுக்க ஏலாதாம். ஆனபடியாலை அவை சொல்லுறமாதிரி ஊசியைப் போடுவம். ஆனால் அது தான் சரியான வழி எண்டில்லை.

சரியான மருந்தைக் கண்டுபிடிச்சிட்டம். நோய்த் தொற்றுக் கட்டுக்கை வந்திட்டுது. எண்டு உலக சுகாதார நிறுவனம் அறிவிக்கிற வரைக்கும் எல்லாம் அப்பிடியும் இப்பிடியம் தான். தந்தை செல்வா சொன்ன மாதிரி இந்த விசயத்திலையும் கடவுள்தான் காப்பாற்ற வேணும் எண்டு நான் நினைக்கிறன். ஆனபடியாலை ஊசி போட்டிட்டன் எண்டு மாஸ்டர் நெஞ்சை நிமித்திக்கொண்டு திரியிறமாதிரித் தயவுசெய்து கண்டபடி திரியாதையுங்கோ. இன்னும் கவனமெடுக்க வேணும். நான் முன்னம் சொன்னமாதிரி நீங்கள் கொரோனாக் காவடியா இருக்கக் கூடாது. ஊசி போட்டிட்டன் எண்டு மனத் தைரியமா இருங்கோ. தயவுசெய்து அதை வெளிக்காட்டாதையுங்கோ. மேல சொன்ன மாஸ்டர் மாதிரிப் பிழையா விளங்கிக் கொள்ளாதையுங்கோ. கவனமா இருங்கோ.

அன்புமறவாத,
**அப்பாவி அன்னமுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி.ரா: நினைவுகள்



11

பல்கலைக்கழகத்துக்குச் செய்யும் பணித்திட்டம் ஒன்றை உருவாக்கினார். இதுவரை எழுத்துலகம் கவனிக்காத பெண்மனங்களைப் பதிவுசெய்யும் நாட்டார் கதைகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும் திட்டம் அது. அதற்கு உதவியாக ஆய்வுப்பணியாளர் ஒருவரும் அனுப்பப் பட்டார்.

காதல், காமம், முறைப்படுத்தப்படாத ஆண் பெண் உறவு என ரகசியம் பேணப்பட்ட கதைகள் அவரிடம் ஏற்கெனவே நிறைய இருந்தன. ஆனால் அவற்றைப் பதிப்பிப்பதைவிடவும் புதுவை வட்டாரத்துக்குரியதாகப் பதிப்பிக்கலாம் என்பதற்காகப் புதிய கதைகளைத் தொகுக்க ஆரம்பித்தார். அப்படித் தொகுத்த நாட்டாரியல் மரபுகளே பெண் மனமாகவும், வயதுவந்தவர்களுக்கு மட்டும் எனப் பதிப்பிக்கப்பட்டன. அதுவரைக் கல்விப் புலம் பேசாமல் இருந்த பலவற்றை அவை பேசத்தூண்டின. அந்த வகையில் கி.ரா.வின் வருகைதரு பேராசிரியர் பணி ஒரு புரட்சிகரமான பணி.

அவர் அங்கு இருந்த காலச்சூழல் பாண்டிச்சேரியில் பல கலகங்களும் புரட்சிகரச் சிந்தனைகளும் கிளர்ந்து கொண்டிருந்த நேரம். நிறப்பிரிகையின் கூட்டுவிவாதங்கள், தலித் அரசியல் விவாதங்கள், புதிய அரசியல் சிந்தனைக் களங்கள், சங்கரதாஸ் சுவாமிகள் நாடகப்பள்ளியின் நிகழ்த்து முறைச் சோதனைகள் எனப் பலப்பலவாய் புதுவை மிஷன் வீதி கல்வே கல்லூரியில் ஒருநாள் கி.ரா.வின் எழுத்துகளை மையமிட்டு முழுக் கருத்தரங்கம் அவரது பன்முக ஆளுமையைக் காட்டிய கருத்தரங்கமாக நடந்தது.

12



புதுச்சேரி இலாசுபேட்டைக்குப் போன பிறகு வேறெங்கும் வீடு தேடவில்லை. பல்கலைக்கழகப் பணியில் இருந்தது வரை தாகூர் கலைக்கல்லூரிச் சாலையில் தங்கியிருந்தார்.அவர் வந்தபோது புதுவைப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் அலுவலகம் ரங்கப் பிள்ளை வீதியில் இருந்தது. அதன் இரண்டாவது மாடியில் நான் பணியாற்றிய நிகழ்கலைத்துறையின் வகுப்புகள் நடக்கும். எப்போதாவது அங்கு வந்து நாடக வகுப்புகளைப் பார்த்துக்கொண்டிருப்பார்.

அப்படியொருநாள் வருகைதரும்போது அவரும் எம் துறையின் தலைவர் இந்திரா பார்த்த சாரதியும் சமகாலத்தில் எழுதும் எழுத்தாளர்களின் எழுத்துகளைக் குறித்துப் பேசத்தொடங்கினார்கள். பேச்சினூடாக எனது கருத்தையும் கேட்டுக்கொண்டார்கள். பாவண்ணன், எஸ். ராமகிருஷ்ணன், கோணங்கி, ந.ரவீந்திரன், பாரதி பாஸ்கர், கண்டராதித்தன். பவா.செல்லத்துரை, சூர்யகாந்தன், இரா.முருகன் எனப் பேச்சு சுத்தி வந்தது.

அதன் பிறகு பையிலிருந்து ஒரு கட்டு கையெழுத்துப் பிரதிகளை எடுத்து வைத்தார் கி.ரா. பெரும்பாலும் கையால் எழுதப்பெற்ற பிரதிகள். நாவல் போட்டிக்கு வந்த நாவல்கள் என்று சொல்லிவிட்டு ஆளுக்குப் பாதியாகப் பிரித்து கொண்டார்கள். இரண்டுபேர் மட்டும் டைப்செய்து அனுப்பியிருந்தார்கள். இருவரும் அதன் நடுவர்களாக இருக்கப்போவதாகவும் சொன்னார்கள். மூன்றாவது நடுவர் அப்போது தஞ்சையில் இலக்கியத்துறையின் பேராசிரியர் தா.வே.வீராச்சாமி. நீங்களும் வாசித்துப் பார்க்கலாம் என்று சொன்னார்கள்.

ஒரு மாதம் ஓடியிருக்கும். திரும்பவும் கி.ரா., ரங்கப்பிள்ளை வீதிக்கு வந்தார். நாவல்களைப் பற்றிப் பேசினார்கள்.இருவருமே ஜெயமோகனின் எழுத்து பற்றி விவாதித்தார்கள். நீங்கள் என்ன நினைக்கிறீங்க என்று என்னிடம் கேட்டார்கள்.வட்டார எழுத்து என்பதைத் தாண்டிய தன்மை இருக்கிறது. பாத்திரங்களை உருவாக்கி முன்வைப்பதில் கவனம் இருக்கிறது என்று சொன்னேன். அந்த வருட அகிலன் நினைவுப் போட்டியில் ஜெயமோகனின் 'ரப்பர்' பரிசுக்குரியதாகத் தெரிவுசெய்யப் பட்டது. அதிகாரப்பூர்வமற்ற நடுவர்களில் ஒருவராக நானும் இருந்துள்ளேன் என அப்போது நினைத்துக்கொண்டேன்.



பேராசிரியர் அ.ராமசாமி
தமிழ்த்துறை
(பணி நிறைவு)
மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, தமிழ்நாடு.

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.

13

"கரிசல் மண்ணை விட்டு ஒருநாள் கூட இருக்கமுடியாத ஆள் நான்" என்று மணிவிழாவின்போது சொன்னவர். திரும்பவும் ஊருக்குப் போகப்போவதில்லை; புதுச்சேரியிலேயே இருந்துவிடுவது என முடிவு எடுத்தார். பல்கலைக்கழகத்தோடான ஒப்பந்த காலம் முடிந்த பின்னும் பாண்டிச்சேரியிலேயே இருப்பது எனக் கி.ரா. எடுத்த முடிவு ஆச்சரியமூட்டிய ஒன்று.

புதுச்சேரி வேதபுரம்; இங்கு வந்தவர்களுக்குத் திரும்பிச்செல்லும் ஆசையே வராது என்றார். எட்டயபுரத்திலிருந்து வந்த பாரதிக்குப் புதுவையைவிட்டுப் போக மனம் இருக்கவில்லை.

தூத்துக்குடியிலிருந்து வந்து சேர்ந்த சங்கரதாஸ் சுவாமிகள் திரும்பிப் போகவில்லை. அவரது நினைவிடம் கருவடிக்குப்பத்தில்தான் இருக்கிறது.

தமிழ்நாட்டுக்காரர்கள் மட்டுமல்ல; அரவிந்தர் வங்காளத்திலிருந்து வந்தவர் தானே? அவரோடு வந்தவர்கள் பெயர்களெல்லாம் நமக்குத் தெரியாது தானே. நானும் இங்கேயே இருந்துவிடப் போகிறேன். வேதபுரத்தார்க்குக் குறிசொல்லும் வேலையை எடுத்துக்கொள்வேன் என்று சிரித்துக்கொண்டே சொன்னார் ஒரு தடவை.

இப்போது அவரது உயிரில்லா உடல் இடைசெவல் நோக்கி வந்துகொண்டிருக்கிறது. பிறந்த ஊருல உடலை வச்சுப் பாக்கிறதும் ஒரு மரபுதான்.

(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)



# டெய்ஃப்...

### குடும்பத்தை இழந்தார்

2014 ஆம் ஆண்டு காசாவில் இஸ்ரேல் இராணுவத்தின் நடவடிக்கையிலும் டெய்ஃப் ஐந்தாவது முறையாக உயிர் தப்பினார். காஸாவின் அண்டை பகுதியான ஷேக் ரட்வானில் உள்ள ஒரு வீட்டில் இஸ்ரேல் வான் தாக்குதலை நடத்தியது இதில் டெய்ஃபின் மனைவி விதாத் மற்றும் கைக்குழந்தை அலி ஆகியோர் கொல்லப்பட்டனர். இஸ்ரேல் அந்த தாக்குதலில் டெய்ஃப்பும் கொல்லப்பட்டார் என நினைத்தது. ஆனால் தாக்குதல் நடந்த போது டெய்ஃப் அந்தக் கட்டடத்தில் இருக்கவில்லை.

டெய்ஃப் இறந்து விட்டாரென இஸ்ரேல் அறிவித்த அடுத்த கணமே, "டெய்ஃப் உயிருடன் இருக்கின்றார். அவரே ஹமாஸின் இராணுவ நடவடிக்கைகளை வழிநடத்துகிறார்" என ஹமாஸ் தெரிவித்தது.இருப்பினும் அதன் பின்னர் எவருமே டெய்ஃபை நேரடியாக காணவில்லை. எனவே டெய்ஃப்பின் இறப்பை மறைக்கவே ஹமாஸ் அப்படிச் சொல்வதாக இஸ்ரேல் நம்பியது. இஸ்ரேலைப் பொறுத்தவரை டெய்ஃப் கொல்லப்பட்ட நபர். ஆனால் அந்தக் கணிப்பு எவ்வளவு பொய் என்பதை, டெய்ஃபின் மறுபிரவேசம் இஸ்ரேலுக்கு உறைக்குமளவுக்கு உணர்த்தியுள்ளது.

### எப்படித் தப்பிக்கிறார்?

இஸ்ரேல் இராணுவத்திடமிருந்து தப்பிப்பதற்கு, தொழில்நுட்ப சாதனங்களை டெய்ஃப் அதிகம் பயன்படுத்தாமல் இருப்பது ஒரு முக்கிய காரணம் என பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். "நீங்கள் அலைபேசி வைத்திருக்கவில்லை என்றாலோ, கணினியைப் பயன்படுத்துவதில்லை என்றாலோ நவீன உளவுசாதனங்களால் உங்களை கண்டறிவது கடினமே" என்கிறார் லெவிட்.

"ஹமாஸ் குழுவினர் வசமுள்ள சுரங்கங்களின் ஆழம், காலாவதியான இஸ்ரேலின் உளவுத் தகவல்கள், சேதாரம், ஆயுதங்கள் செயலிழப்பு ஆகிய காரணங்களால் டெய்ஃப் மீதான தாக்குதல் முயற்சிகள் தோல்வி அடைந்திருக்கலாம்" என இஸ்ரேல் உளவுத் துறையின் முன்னாள் தலைவர் தெரிவிக்கிறார்.

### மக்களை வசியம் செய்த ஒற்றைபெயர்

" அவ்வளவு இலகுவில் டெய்ஃபை நாங்கள் விடமாட்டோம். இம்முறை அவர் எங்களுக்கு அளவுக்கு மீறிய சேதத்தை உண்டாக்கி விட்டார். இதற்கு அவர் பதில் கூறியேயாக வேண்டும். டெய்ஃப்பை குறிவைக்கும் இஸ்ரேலிய நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மேலதிக தகவல்களை கூற இயலாது "என இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"டெய்ஃப்பை தொடர்ந்தும் இஸ்ரேல் இலக்கு வைப்பது எனக்கு ஆச்சரியமளிக்கவில்லை . மேற்கொண்டு எந்த ஒரு இஸ்ரேலியத் தாக்குதல்களிலும் டெய்ஃப் தப்பிப்பது அவரது தப்பித்தல் குறித்த ஐதீகங்களைத்தான் அதிகரிக்கச் செய்யும். டெய்ஃப் பழைய நம்பிக்கைகளை கொண்ட ஒரு நபர் என்பதாலும் ஹமாஸின் மூத்த தலைவர்களில் ஒருவர் என்பதாலும் இஸ்ரேல் அவரை கொல்ல நினைக்கின்றது. ஹமாஸின் தொடக்கத்திலிருந்து இருக்கும் தலைவர்கள் வெகுசிலர் தான். அவர்களில் டெய்ஃப் தனித்துவமானவர்." என்கிறார் லெவிட்.

அதை தவிர டெய்ஃப் ஒரு புதிரான மனிதர். பிரபலமற்ற மற்றும் தலைமறைவான ஒரு நபர். இதுவும் அவருக்கு ஒரு பலமே. காஸாவின் தெருக்களில் அவர் நடமாடினால் கூட வெகுசிலரே அவர்தான் டெய்ஃப் என அடையாளம் காண்பர். அந்தளவுக்கு அவர் தன் முகத்தை பிரபலப்படுத்தமால் , இருளில் தன் அடையாளத்தை மறைத்துள்ளதாலேயே இன்னும் இஸ்ரேலால் அவரை நெருங்க முடியவில்லை.

டெய்ப்ஃபின் முகம் தான் பலஸ்தீனத்தில் பிரபலமில்லையே தவிர, அவரது பெயர் ஒரு மந்திரச் சொல்லாக பலஸ்தீன மக்களை வசியம் செய்து வைத்திருக்கிறது. இம்முறை 11 நாள் சமர் முடிந்து , இடிந்து கிடக்கும் காஸாவின் கட்டடங்களில் மேல் நின்று அந்த மக்கள் ஒலித்த பாடல் டெய்ஃபின் மக்கள் செல்வாக்குக்கு நல்லதொரு உதாரணம்.

"ஆத்மாவுடனும் இரத்தத்துடனும் நாங்கள் உங்களை மீட்டுக் கொள்கிறோம் டெய்ஃப்" என்பதே பலஸ்தீன மக்களின் அந்தப் பாடல். அவர்கள் அப்போது மட்டுமல்ல எப்போதும் பாடிக் கொண்டும், உச்சரித்துக் கொண்டேயுமிருக்கின்றனர் ஒன்பது உயிர் கொண்ட தங்கள் தலைவனை!

(இந்தக் கட்டுரைக்கான மூலத்தகவல்கள் பி.பி.ஸி இணையத்தில் பெறப்பட்டவை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிர்மீரா குளமும் கதியறியாக் கதை



தேன் கூடு

○ ம.பா. மகாலிங்கசிவம்

கடந்த வாரம் இராணுவத்திடம் தனது நிலம் பறிபோனதனால் தமிழ்க் கவிஞர் பா.அகிலன் அடைந்த வேதனையைப் பார்த்தோம்.

இந்த வாரம் தனது நிலத்தைப் பறிகொடுத்த இஸ்லாமியக் கவிஞர் ஒருவரின் துயரைப் பார்க்கலாம். இவ் விடயம் தொடர்பான முல்லை முஸ்ரிபாவின் அவாவுறும் நிலம் என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற கதிர்மீரா குளமும் கதியறியாக் கதை என்ற கவிதை இன்றைய தேன்கூட்டில் இடம்பெறுகிறது.

*என் நிலத்துண்டையும் நீயுரிய*
*நெடுங் காலமும்*
*நிர்வாணமாயிற்றென் நிராயுதம்*

*என் கதிர்மீரா குளத்தை*
*உன் அப்பனின் அப்பனின் அப்பன்*
*அபகரித்ததாய்*
*என் வாப்பாவின் வாப்பாவின் வாப்பா*
*சொல்லி மாண்ட கதை*
*இன்னுமென் காதுக்குள்*
*பழுக்கக் காய்ச்சிய கோலாயிறங்க*
*வதை படுகிறது வாழ்வு நீளவும்*

*மீளவும் ஐயாயிரத்துச் சொச்ச நாட்களின் பின்*
*இந்நாள் என் நிலத்தையள்ளி*
*முகத்தில் ஒத்திச் சந்தோசிக்கிறது*
*பெருங் கணம் என் மனம்*

*பழைய குடிலின் முகட்டில் தொங்கிய*
*சிறுகண் வலையை மீட்டு என் நந்தியுள் வீசியபடி*
*நினைவுள் மீள்கின்றன*
*பிறை படர்ந்த ராத்திரிகள்*

*என்னில் சிலர்*
*எஞ்சி நின்ற*
*தேக்கும் மா பாலா வேம்பும்*
*விளைந்த மண்ணின் வேரறுத்து*
*தமக்குள் எல்லைச் சண்டையும் நிகழ்த்தி*
*எல்லாம் விற்றுத் தீர்ப்பர்*
*மண் மீளும் உரிமையென*

*அலைகவ்வும்*
*முல்லையின் முஸ்லிம் நிலம்*
*சில இலட்சங்களுக்குள்*

*தன் முகவரி தொலைக்க*
*காலற்று அந்தரத்தில் தொங்கும்*
*நெடுங்காலம் என் சந்ததி யுகம்*

*உன் பேரனின் பேரனின் பேரனால்*
*நீராவியும் பீலிக்கரையும்*
*தண்ணிமுறிப்பும்*
*தம் வசமிழந்து போகும் கதை*
*என் பேரனின் பேரனின் பேரன்*

முல்லை முஸ்ரிபா .முல்லைத்தீவில் பிறந்தவர் மொழியியல் துறைவிரிவுரையாளரான இவர் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாளர், கவிதைத் திறனாய்வாளர் முதலிய பணிகளைச் செய்தார். இவரது முதல் கவிதை நூல் இருத்தலுக்கான அழைப்பு என்பதாகும். இத் தொகுப்பில் இடம்பெற்ற 'மதம்' என்ற கவிதை க.பொ.த சா.த. தமிழ்ப் பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

'அவாவுறும் நிலம். ' சொல்லில் உறைந்து போதல்' என்பவை இவரது ஏனைய கவிதைத் தொகுதிகள் ஆகும்.

இலங்கையிலே சிங்கள- தமிழ் இனங்களுக்கிடையேயான முரண்பாடு எவ்வாறு ஆழ வேரூன்றியுள்ளதோ அவ்வாறே தமிழ்- முஸ்லிம் முரண்பாடும் நீண்டகாலமாகவே புரையோடிப் போயுள்ளது. தமிழ், சிங்கள பேரினவாதம் என்று குறிப்பிடுவது போல முஸ்லிம் இலக்கிய வாதிகளும் தமிழர் விடுதலைப் போராட்டத்தைத் தமிழ்ப் பேரினவாதமாகவே குறிப்பிட்டனர்.

விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் முஸ்லிம்களுள் சிலர் இராணுவப் புலனாய்வாளருடன் இணைந்து தமிழரைக் காட்டிக் கொடுத்தனர் என தமிழ்த் தரப்பால் குற்றஞ்சாட்டப்பட்டது. போர்க்காலத் தகவல் வழங்கிகளே ஈஸ்டர் தாக்குதலுக்குக் காரணம் என்ற அண்மைய கோஷங்கள் தமிழர் தரப்பின் குற்றச்சாட்டில் நியாயம் இருப்பதை உணர்த்துகின்றன. கிழக்கு மாகாணத்தில் படையினருடன் இணைந்தும் புனிதப் போர் நடத்தும் ஆயுதக் குழுவாக இருந்தும் இவர்களுள் சிலர் செய்த இழி செயல்கள் தமிழரின் மனதிற் பெரும் காயங்களை ஏற்படுத்தின. பலரின் மரணத்துக்கும் காரணமாயின. காலந்தோறும் நிகழ்ந்த தமிழ்-முஸ்லிம் கலவரங்களும் இருதரப்புக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தின. கிழக்கு மாகாண முதல்வராக தமிழர் வருவதைத் தடுத்தமை, கல்முனை பிரதேச செயலகத்துக்கு முட்டுக்கட்டை என்று இப் பட்டியல் நீளும். இதேவேளை 1990 ஒக்ரோபர் 30 ஆம் திகதி திடீரென வடக்கிலிருந்து முஸ்லிம்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். கையில் ஒருபையுடனும் மிகக் குறைந்தளவு பணத்துடனும் அவர்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். முஸ்லிம்கள் அனைவரினதும் ஏனைய சொத்துக்கள் இங்கேயே கையகப்படுத்தப்பட்டன. இச் செயற்பாடு இஸ்லாமியரின் மனங்களில் ஆழ்ந்த வெறுப்புணர்வை வளர்த்தது.

முஸ்லிம்களை வலிந்து வெளியேற்றிய போது முஸ்லிம்கள் அடைந்த பலவகையான இன்னல்களைக் கவிதைக் கருப்பொருள்கள் ஆக்கிய பல கவிதைகளை எழுதுபவர் முல்லை முஸ்ரிபா அவற்றுள் கதிர்மீராக் குளமும் கதியறியாக் கதை என்ற கவிதை முல்லைத்தீவில் அவர் இழந்து போன இஸ்லாமியக் கிராமம் ஒன்று பற்றிய கவிதையாக உள்ளது.

'கதிர்மீராக் குளமும் கதியறியாக் கதை' என்ற தலைப்பில் இடம்பெறும் "உம்" இடைக் கதியறியாமற் போன பல முஸ்லிம் கிராமங்களின் வரிசையில் கதிர்மீராக் குளமும் இடம்பெற்றுள்ளமையைச் சுட்டிக்காட்டுகிறது.

*என் நிலத்துண்டையும் நீயுரிய*
*நெடுங்காலமும்*
*நிர்வாணமாயிற்றென் நிராயுதம்*

என்னும் கவிதைத் தொடக்கம் இஸ்லாமியரிடம் நிலத்துண்டும் கவரப்பட்ட நிலையையும் அவர்களில் பெரும்பாலானவர்கள் நிராயுத பாணிகளாக இருந்த நிலையையும் சுட்டுகிறது.

'என் கதிர் மீராக் குளத்தை உன் அப்பனின் அப்பன் அப்பன் அபகரித்ததாய் என் வாப்பாவின் வாப்பா சொல்லி மாண்ட கதை இஸ்லாமியர்களின் மண் பரம்பரை பரம்பரையாகத் தமிழர்களால் அபரிக்கப்படுவதான அவர்களின் கருத்துருவாக்கத்தை எடுத்துக் காட்டுகிறது. அப்பனின் அப்பனின் அப்பன் வாப்பாவின் வாப்பாவின் வாப்பா என்னும் தொடர்கள் தமிழ், இஸ்லாமிய பண்பாடுகளிலே தந்தையை அழைக்கும் முறைமை பற்றிய பதிவுகளாக உள்ளன.

*பழைய குடிலின் முகட்டில் தொங்கிய*
*சிறுகண் வலையை மீட்டு*
*என் நந்தியுள் வீசிய படி*
*நினைவுள் மீள்கின்றன*
*பிறைபடர்ந்த ராத்திரிகள்*

என ராத்திரி தொடர்பான படிமம் தனது கிராம இழப்புப் பற்றிய துயரினுள் கவிஞர், மனங்குமையும் இரவுப் பொழுதுகளைச் சித்திரிக்கிறது.

பெரும் பகுதி நிலம் பறித்தெடுக்கப்பட எஞ்சிய நிலங்களையும் தன்னினத்தவர் விற்றுத் தீர்க்கும் நிலை கவிஞருக்கு மேலும் கலக்கத்தைக் கொடுக்கிறது. தம்மை அநாதரவான மண்ணிலிருந்து மீட்டுக் கொள்வதற்காகவே இவர்கள் இவ்வாறு செய்கின்றனர் எனக் கருதும் கவிஞர் வளமான முஸ்லிம் நிலப்பகுதிகள் மலிவான விலைக்கு விற்கப்படுகின்றனவே என்று அங்கலாய்ப்பதை

*அலைகவ்வும்*
*முல்லையின் முஸ்லிம் நிலம்*
*சில இலட்சங்களுக்குள்*
*தன் முகவரி தொலைக்க*
*காலற்று அந்தரத்தில் தொங்கும்*
*நெடுங்காலம் என் சந்ததியுகம் "*

என்னும் கவிதைப் பகுதி காட்டுகிறது. காலூன்றியிருந்த நிலம் இழக்கப்பட்ட நிலையில் காலற்று அந்தரத்தில் தொங்கும் சந்ததி பற்றிய படிமம் கவிதைக்கு அழகூட்டுகிறது.

இறந்த காலம், நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம்களின் மண் அபகரிப்பு எதிர்காலத்திலும் தொடரும் என்பதை

*உன் பேரனின் பேரனின் பேரனால்*
*நீராவியும் பீலிக்கரையும்*
*தண்ணி முறிப்பும்*
*தம் வசமிழந்து போகும் கதை*
*என் பேரனின் பேரனின் பேரன்*
*சொல்லிச் சொல்லி மாளுவான் வருங்காலம்*

எனக் காட்டப்படுகிறது. ஏனைய நிலங்கள் இழக்கப்படும் எதிர்காலத்திலும் கதிர் மீராக் குளத்தின்இழப்புப் பற்றிய துயரம் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து துன்புறுத்தும் எனக் கவிதை நிறைவுக்கு வருகிறது. தனது பூர்வீகப் பிரதேசம் பறித்தெடுக்கப்பட்ட துயரத்தை படிமங்களுடன், அழகியல் அம்சங்களும் கூறும் சிறந்த கவிதையாக இக்கவிதை உள்ளது.



நீங்களும் எழுதலாம்
• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?
எதுவானாலும் அனுப்பி வையுங்கள். தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி காத்திருக்கிறது.
அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com
தொடர்புகளுக்கு
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலேஷியா to அம்னீஷியா

## சிரிக்க வைக்கும் அரைத்த மா

○ ஆரபி

அன்பின் மொழிதலான திரை மொழி வாய்க்கப்பெற்றவர் இயக்குநர் ராதாமோகன். கூடவே இவரது படங்களில் ஒரு மென்சிரிப்பும் படம் நெடுகிலும் பயணிக்கும். மொழி, அபியும் நானும் என்றெல்லாம் வித்தியாசமான படங்களால் தனக்கென ஒரு திரைமொழியை நிறுவியவர் ராதாமோகன். ஆனாலும் ராதாமோகனுக்கு அண்மைக்காலமாக சில சறுக்கல்கள். வசூல்ரீதியாக மட்டுமன்றி விமர்சன ரீதியாகவும் அவரது படங்கள் கவனிப்பைப் பெறத்தவறின. ராதாமோகனின் திரைக்கதை யாற்றல் வற்றிப்போனதாலேயே இவ்வாறு மேலோட்டமான படங்களை எடுத்து, தன் விம்பத்தை தானே சிதைத்துக்கொள்கிறார் என்றெல்லாம் கருத்துக்கள் எழுந்தன. இப்படியான ஒரு நெருக்கடிநிலையில் தான் ராதாமோகனின் அடுத்த படமான 'மலேசியா ரூ அம்னீசியா' என்ற திரைப்படம் இணையத்தில் வெளியாகியுள்ளது.

படத்தின் கதையொன்றும் அவ்வளவு புதுமையானதல்ல. ஏற்கனவே பாலுமகேந்திராவின் 'இரட்டைவால் குருவி', கமலின் 'சதிலீலாவதி' போன்ற படங்களில் இடம்பெற்ற அதே இரண்டு மனைவி அல்லது இரண்டு காதலிகள் கொண்ட ஒருவனின் பாடுகளே 'மலேசியா ரூ அம்னீசியா'படத்தின் கதையும். பெங்களூரில் தன் காதலியைப் பார்ப்பதற்காக , "மலேசியாவுக்கு வேலை விடயமாகப் போகின்றேன்" என மனைவி வாணி போஜனுக்கு போக்குக்காட்டிவிட்டு, செல்கிறார் வைபவ். ஆனால் அவரது கெட்டநேரம், அவர் பயணிக்கப்போவதாக ரிக்கெற் எடுத்திருந்த மலேசிய விமானம் காணாமல் போய்விடுகின்றது. அதிலிருந்த எவருமே உயிரோடு இல்லை என்றும் அறிவிக்கிறார்கள். இப்போது வைபவுக்கு வீட்டுக்கு திரும்பிச் செல்லமுடியாது. சென்றால் எப்படி தப்பித்தீர்கள்? என்ற கேள்வி வரும். போதாக்குறைக்கு மனைவி வாணி போஜனின் தந்தை எம்.எஸ். பாஸ்கர் ஒரு துப்பறிவாளர். அதனால் தனக்கு பழைய நினைவுகள் பறிபோய்விட்டதாக நாடகமாடி வீட்டுக்கு வருகிறார். அதன் பின் என்னவெல்லாம் நடக்கின்றது என்பதே 'மலேசியா ரூ அம்னீசியா'படம் சொல்லும் கதை.

மிகச் சுமாரான கதையை அதுவும் ஏற்கனவே இதே மையச் சரட்டோடு பல படங்களில் சொல்லப்பட்ட கதையை ராதாமோகன் தனக்கேயுரிய பாணியில் தந்திருப்பதுதான் படத்தின் முதல் பலம். குறிப்பாக கொஞ்சம் கவனம் தவறினாலும் விரயமாகக்கூடிய கதையை, குடும்பப் பாங்கோடு சொல்லியிருப்பது ராதாமோகனுக்கேயுரிய தனித்திறமைதான். அதைவிட பாத்திரங்களுக்கேற்ற நடிகர் தேர்விலும் ராதாமோகன் தன் வித்தையைக் காட்டியிருக்கிறார்.



மென்னகையோடு ஊடுபாவிச் சென்றுகொண்டிருக்கும் திரைக்கதையில் ஆங்காங்கே எழுகின்ற வெடிச்சிரிப்புகள் படத்தோடு ஒன்றவைக்கின்றன. ஆனாலும் அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்பதை ரசிகர்கள் முன்னரே ஊகிக்கமுடிவது படத்தின் பலவீனம். இந்தத் திரைப்படம் திரையரங்குகளில் வெளியாகியிருந்தால், சுமாரான வரவேற்பையே பெற்றிருக்கும். ஆனாலும் கொரோனாவின் புண்ணியத்தால், இணையத்தில் வெளியானதால், இந்த முடக்ககாலத்தில் மக்களுக்கு நகைச்சுவையால் ஆறுதல் கொடுக்கும் படமாக இருப்பதால் கூடுதலான வரவேற்பை பெற்றிருக்கிறது. இருப்பினும் இது ராதாமோகனின் திரைவாழ்வின் இருப்பை தக்க வைக்குமா என்பது கேள்விக்குறிதான். ஏனெனில் இப்படியான அரைத்த மாவை திருப்பி வேறுவகையில் அரைப்பதற்கு ஏராளமானோர் இருக்கின்றனர். ராதாமோகன் என்றாலே உறவுகள் தொடர்பான மென்னுணர்வை புதிய கோணத்தில் திகட்டாமல் தருபவர் என்ற முத்திரை இருக்கிறது. ஆனால் அது இந்தப் படத்தில் அறவேயில்லை. உணர்வோடு ஒன்றிக்காத, ஒரு பொழுதுபோக்கு படத்தை தருவதற்கு ராதாமோகன் ஏன்?



தன்னுடைய படங்களில் பெண்கள் பற்றி எப்போதும் உயர்வான கருத்துக்களையே முன்வைக்கும் ராதாமோகன், இதில் சில இடங்களில் வழக்கமான தமிழ் சினிமாவுக்கே உரித்தான பெண்களை அடிமுட்டாள்களாகக் காண்பிக்கும் வேலையையும் செய்திருக்கிறார். வெற்றிக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற சூத்திரத்துக்குள் ராதாமோகன் சிக்கிவிடக் கூடாது என்பதே நல்ல திரைப் படங்களை எதிர்பார்ப்போரின் அவா.

# நல்ல மனம் வாழும்!

சஞ்சீவி **சிறுகதை**

○ ஃபாத்திமா, ஷார்ஜா.



மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை சலீம்பாய்க்கு. விடிந்ததும் அலுமாரியைத் திறந்தார். பணக்கட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து தனது தோள்பையில் அடுக்கினார்.

கோப்பியை எடுத்துக்கொண்டுவந்த மனைவி சபீரா,"மகள் கல்யாணத்துக்காக வச்சிருந்த பணம். கொரோனா வைரஸ் பிரச்சினையால் ஆறு மாசம் கழிச்சு கல்யாணத்தை தள்ளி வச்சிருக்கோம். பாங்கும் அடைச்சிருக்கு. இப்போ ஏன் அலுமாரியில இருக்குற பணத்தை பையில வைக்கிறீங்க?" சற்று உரக்கவே கேட்டார்.

கோப்பியை வாங்கிய சலீம்பாய்,"சபீ, நாளையிலிருந்து எல்லாக் கடைகளையும் அடைச்சிரணுமாம். நம்ம கடையை சுற்றிலும் வண்டியில் காய், பழம் விக்கிறவங்க, நடைபாதை வியாபாரிங்க, கூடையில் கீரை விக்கிற பொம்பளப் பிள்ளைகள், செருப்புத் தைக்கிற வயசானவங்க, கூலித் தொழிலாளிங்க அப்படினு நெறைய பேர் இருக்காங்க. இவங்கள்லாம் தினம் வேலை செஞ்சு அந்த வருமானத்த வச்சுதான் சாப்பாடு, வீட்டு வாடகை மத்த செலவெல்லாம் செய்வாங்க. முன்னறிவிப்பு ஏதுமில்லாம கொரோனாத் தொற்று வரக்கூடாதுனு கடையை மூட சொல்லிட்டு வீட்டுக்குள்ளேயே இருக்கணும்னா என்ன செய்வாங்க? கைக் குழந்தைகளோட நெறையத் தாய்மார்கள் கெழங்கு, மீன் எல்லாம் விக்கிறத பாத்துருக்கேன். இதையெல்லாம் நெனச்சு ராத்திரி தூக்கமேயில்லை. அவங்களுக்கு நம்மால முடிஞ்சத செய்யணும். சாப்பாட்டுக்குத் தேவைப்பட்ற சாமான்களை மட்டும் இந்தப் பணத்துல வாங்கிக் கொடுத்துட்டு வந்துட்றேன். மக கல்யாணத்துக்கு நிச்சயம் ஏதாவது ஒரு வழி பிறக்கும்" காஃபி கிளாசை சபீராவிடம் கொடுத்துவிட்டு சாமான்கள் வாங்க பணத்தை எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார்.



பதிலேதும் சொல்லமுடியாமல் வாயடைத்துப் போய் நின்ற சபீராவின் மனதுக்குள் மகளின் கல்யாணத்துக்கு பணம் வேணுமே, என்ன செய்யப் போறோம், எப்படி நடத்தப்போறோம், மாப்பிள்ளை வீட்டுக்காரங்க என்ன சொல்லப் போறாங்களோ இப்படி அடுக்கடுக்கான கேள்விகள், கவலைகள். ஒன்றுமே செய்யப் பிடிக்காமல் சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்து விட்டார். செல்போன் சத்தம் கேட்டு மெதுவா எழுந்துபோய் எடுத்தால், அதில் மாப்பிள்ளையின் அம்மா பெயரைப் பார்த்ததும் மயக்கமே வந்துவிட்டது சபீராவுக்கு. பேசாமலிருந்தால் நல்லாயிருக்காதே, ஆண்டவா இதென்ன சோதனை?

"சபீரா ஒரு முக்கியமான சேதி, கல்யாணத்துக்கு நீங்க ஒரு செலவும் செய்ய வேணாம். எல்லாம் நாங்க பாத்துக்கறோம். பொண்ணுக்கு நகைகள், துணிமணி உள்பட எல்லாமே எங்க பொறுப்பு தான். கொரோனாத் தொற்று சீக்கிரமா போகட்டும். ரொம்ப சிம்பிளா கல்யாணத்த நடத்திருவோம். நம்ம வழிப்படி மாப்பிள்ளை வீட்டில இருந்துதான் எல்லாமே செய்யணும். அதுதான் சிறப்பு. வேறென்ன சேதி?"என்றவரிடம், "நல்ல சேதிய நீங்கதான் சொல்லியிருக்கீங்க, ரொம்ப சந்தோஷம். அவங்க வந்தவுடனே சொல்லிட்றேன்" செல்போனை வைத்துவிட்டு கணவரின் வருகைக்காக காத்திருந்தார் சபீரா. இவ்வளவு சீக்கிரம் மகள் கல்யாணத்துக்கு நல்ல வழி காண்பித்த இறைவனுக்கு நன்றிகள் கூறிக் கொண்டு, கொரோனா வைரஸ் விலகிட பிரார்த்தித்துக் கொண்டு, நல்ல மனம் என்றென்றும் நன்றாகவே வாழும் என்ற உண்மையையும் கணவர் உருவத்தில் உணர்ந்தார். கவலைகள் விலகி மனதில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது சபீராவுக்கு. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கழிவு முகாமைத்துவம்

பயன்பாட்டுக்கு உதவாத, கழித்து ஒதுக்கப்படும் பொருள்களே கழிவுகள். கழிவுகள் பல வகைப்படும். உக்கக்கூடியவை, உக்கமுடியாதவை, இலத்திரனியல் கழிவுகள், கண் ணாடிக் கழிவுகள் எனப் பல. இக் கழிவுகள் ஒழுங்காக முகாமை செய்யப்படாது விடின் நீர், நிலம், வளி என்பவை மாசடையும்.




"இங்கு குப்பை போடவும்" என்று எழுதப்பட்டிருக்கும் குப்பைத் தொட்டிகளில் ஒரு குப்பையும் இல்லை. "இங்கே குப்பை போட வேண்டாம்" என எழுதி இருக்கும் இடங்களில் குப்பை குவிந்து கிடக்கின்றது. இன்று பலர் வீட்டுக் கழிவுகளை எல்லாம் கொண்டுசென்று சாலை ஓரங்களிலும் நீர் நிலைகளிலும் கொட்டிவிடுகிறார்கள் அல்லது எரித்து விடுகிறார்கள். இதனால் நீர், வளி, நிலம் என்பன மாசடைவதோடு பல நோய்களும் ஏற்படுகின் றன.

கழிவு முகாமைத்துவத்துக்கு சிறந்த வழி '3R'எண்ணக் கருவாகும். பாவனையைக் குறைத்தல் (Reuse) சமையல் கழிவுகளை உரமாக்கி பயன்படுத்தல், பிளாஸ்ரிக் கப்கள், டயர்கள், போத்தல்கள் என்பவற்றை சாடிகளாக்கல் மீள் சூழற்சி செய்யலாம்.



இதற்கு மேலதிகமாக எமது பிரதேசங்களில் காணப்படும் பெரிய குப்பைத் தொட்டிகளில் பின்வருமாறு தரம்பிரித்து போடலாம். பச்சை நிறத் தொட்டி உக்கும் கழிவு, நீல நிறத் தொட்டி பிளாஸ்ரிக், பொலித்தீன், மஞ்சள் நிற தொட்டி பேப்பர், கண்ணாடிக்கழிவுகள். எனவே நாம் கழிவுகளை ஒழுங்காக முகாமை செய்து நீர், நிலம், வளி என்பவற் றைப் பாதுகாப்பதோடு எம்மையும் பாதுகாத்துக்கொள்வோம்.


**லி.லக்ஷிகன்**, தரம்-10,
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*
*அங்கத்துவ இலக்கம்-012*

**மாணவர்களே!** நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## வழிகாட்டுவோம்




## தர்ப்பூசணி

- தர்ப்பூசணியின் தாயகம் தென் ஆபிரிக்கா.
- இதன் தாவரவியல் பெயர் 'சித்ரூலஸ் லேன்டஸ்'.
- வத்தகை, கோசாப், தண்ணீர் பழம், குமட்டி பழம் என்றும் அழைப் பர்.
- கோடையில் தான் அதிகம் விளைகிறது. பயிர் செய்த 100 நாட்க ளில் அறுவடை செய்யலாம்.
- உலகளவில், ஆசிய நாடான சீனா தான் தர்ப்பூசணி உற்பத்தியில் முதல் இடம் வகிக்கிறது.
- அடுத்த இடங்களில், மத்திய கிழக்கு நாடுகளான துருக்கி, ஈரான் மற்றும் ஆபிரிக்க நாடான எகிப்து ஆகியவை உள்ளன.
- உடலுக்கு தேவையான பைட்டோ நியூட்ரியன்ஸ், அன்டி அக்சி டென்ட் போன்றவையும் உள்ளன. விற்றமின் சத்துக்களை அதிகம் கொண்டு உள்ளன.



## கல்வியின் சிறப்பு

ஆறு வயதினில் அடி எடுத்தேன்;
அறிவெனும் கனத்தை நோக்கி,
ஆறில் வைத்த என் கால்கள்
இன்று பதினெட்டில்
நிற்கின்றன.......

பகைத்த நண்பர்கள்,
பழைய தோழர்கள்,
கற்பித்த ஆசிரியர்கள்,
காலம் பல கடந்தாலும்
கல்வி நிலை மாறாது...

பன்னிரெண்டு தனில்
படிக்கும் எனக்கு;
பல நண்பர்கள் தந்தே
பல பல நல் ஆசான்கள் தந்ததே,
இவ் அழகிய பாடசாலை.

இன்னும் ஒரு வருடங்கள்
என் கல்விப் பயணங்கள்....
போதாது இந்த ஒரு வருடங்கள்
ஒரு வருட நிறைவை எண்ண
என் கண்களில்
கண்ணீர்ப் பெருக்கு....

நான் எங்கு சென்றாலும்
என்னை வயிற்றில் சுமந்த தாய்
கல்வியில் சுமந்த என் பாடசாலை
இரண்டும் என்றும்
என் கண்களே....

**விஜயகுமார் டர்ஜினி**, தரம்12
யா| நெடுந்தீவு சைவப்பிரகாச
வித்தியாலயம்

## இளமைப் பெயர்கள்

பசு – கன்று
ஆடு – குட்டி
காகம் – குஞ்சு
குருவி – குஞ்சு
நாய் – குட்டி
கோழி – குஞ்சு
பாம்பு – குட்டி
மீன் – குஞ்சு
பாம்பு – குட்டி
நெல் – நாற்று
வாழை –குட்டி
கிளி – பிள்ளை
பனை – வடலி

**அ. கிருஸ்ணி**
யா| கனகரத்தினம்
ம.ம.வித்தியாலயம்.
அங்கத்துவ இல.11



## பிஞ்சு தூரிகைகள்

**பி.விஷ்ணுகன்**,
தரம்-9
ஆவரங்கால் நடராஜ ராமலிங்க
வித்தியாலயம்.




**அ.கிருஸ்ணி**,
யா| கனகரத்தினம்
ம.ம.வித்தியாலயம்.



**ஒ.மேரிடிஷானி**
தரம் 11
சென்.தோமஸ் பாடசாலை.



**சி.அர்ஜுன்**,
தரம் 07
யா/இந்துக் கல்லூரி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குக்கூ... குக்கூ முதல் உரிமையை மீட்போம் வரை

இலங்கையில் இருந்து வந்த தனது பாட்டியின் வரலாற்றை வெறுமனே பாடலுக்காக மாத்திரம் சேர்த்துக் கொள்ளாது உண்மையிலேயே அந்த வரலாற்றை அறிந்து கொள்ளவென, இரண்டு வருடங்களுக்கு முன்பதாக இலங்கை வந்திருந்தார் அறிவு.



## அறிவு அடித்தளமிடக்கூடிய அகலத்திரை

○ மல்லியப்புசந்தி திலகர்

அண்மைக்காலமாக தமிழ்த் திரை இசை அல்லாத சுயாதீனப்பாடலான தமிழ்ப்பாடல் ஒன்று தமிழ்ச் சூழலையும் கடந்து கோடிக் கணக்கான இசை ரசிகர்களிடையே சென்றுள்ளது. அதுதான் "குக்கூ ... குக்கூ... எஞ்சாயி எஞ்சாமி .. " எனத் தொடங்கும் பாடல். 'தெருக் குரல்' என சாமானிய மக்களின் வாழ்வியலை பாடலாக்கியவர் இளம் 'ரப்' கலைஞரான அறிவு. இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இசையில் 'தீ' எனும் இலங்கைப் பின்னணி ( வடக்கு ) கொண்ட பாடகியுடன் இணைந்து, அறிவு பாடியுள்ள இந்தப் பாடலின் வரிகளை எழுதியவரும் அதே 'தெருக் குரல்' அறிவு தான்.

இந்தப் பாடலின் இசையும் பாடகி 'தீ' (Dhee) யின் குரலைப் போலவே , அறிவின் வரிகளும், அந்த வரிகளுக்காக அவர் வரித்துக் கொண்ட பின்புலங்களும் பாடலுக்கு பலம் சேர்த்துள்ளன. ஏ.ஆர். ரகுமான் , பா.ரஞ்சித், சந்தோஷ் நாராயணன் போன்ற சினிமா பிரபலங்களின் இணைப்பில் சுயாதீன பாடல்களை ஊக்குவிக்கும் 'மாஜா' எனும் அமைப்பின் ஊடாக தயாரிக்கப்பட்டு வெளிவந்ததால் அதன் தரமும் வீச்சும் வேறு எல்லைகளைத் தொட்டுள்ளது.

பாடல் வரிகளை எழுதிய அறிவு, பாடலின் வெளியீட்டு விழாவிலும் அதற்குப் பின்னரும் மேடைகளில் பேசுகையில் அவரது வரிகளுடனேயான அரசியல் முன்வைப்புகளை வெளிப்படையாக பேசி வருகிறார். அந்த அரசியல் முன்வைப்பை மிகுந்த அவதானத்துடனும் தெளிவுடனும் முன்வைக்கும் அவர், சாதியற்ற சமூகம் ஒன்றை நோக்கிய அவரது இலக்கை தெளிவாக பேசுகிறார். இந்தப் பாடலை எழுதிப் பாடுவதற்கு முன்பிருந்தே 'Casteless Collective எனும் இசைக் குழுவில் இணைந்து இயங்கி வருபவர்.

இந்த "குக்கூ குக்கூ.." பாடலின் பின்னர் அல்லது இந்தப் பாடல் வரிகளின் பின்னணியில் இருக்கக் கூடிய தனது பாட்டி வள்ளியம்மை பற்றிய பதிவுகளின் இன்னுமொரு பக்கத்தை அறிவு, தனது உரைகளில் வெளிப்படுத்துகிறார்.

தனது தாயாரின் தாயாரான (பாட்டி) வள்ளியம்மா இலங்கை மலையகத்தில் பிறந்தவர் என்பதும், அவர் 1964 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய நாடுகள் செய்துகொண்ட சிறிமா - சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழ்நாட்டுக்கு (தாயகம் )திரும்பியவர்களில் ஒருவர் என்பதையும் நோக்கத்தோடு முன்வைக்கிறார் அறிவு . தன்னுடைய பாட்டி தன்னை 'ஏஞ்சாமி . . .' என விளித்து அழைக்கும் சொல்லையே தனது பாடலுக்கு தலைப்பாக்கியுமுள்ளார். அதேபோல பாட்டி பாடும் ஒப்பாரி பாடலின் வரிகளையும் கூட இந்த "குக்கூ. . ." பாடலில் சேர்த்துக் கொண்டுள்ளார். கூடவே தனது பாட்டியின் பெயரான வள்ளியம்மையையும் கூட பாடலில் கொண்டுவருகிறார்.

இது தவிர தமிழ் நாட்டு இடதுசாரி அறிவொளி இயக்க நாட்டார் பாடல் சேகரிப்புகளில் இருந்தும் சில வரிகளை அறிவு சேர்த்துக்கொண்டுள்ளார்.

இலங்கையில் இருந்து வந்த தனது பாட்டியின் வரலாற்றை வெறுமனே பாடலுக்காக மாத்திரம் சேர்த்துக் கொள்ளாது உண்மையிலேயே அந்த வரலாற்றை அறிந்து கொள்ளவென, இரண்டு வருடங்களுக்கு முன்பதாக இலங்கை வந்திருந்தார் அறிவு. புசல்லாவையில் மலையக அருங்காட்சியகத்தை நடத்தும் கண்டி, சமூக அபிவிருத்தி நிறுவனம், அதன் தலைவர் பெ. முத்துலிங்கம் ஆகியோருடன் தொடர்பை ஏற்படுத்திக்

> **தன்னுடைய பாட்டி தன்னை 'ஏஞ்சாமி ...' என விளித்து அழைக்கும் சொல்லையே தனது பாடலுக்கு தலைப்பாக்கியுமுள்ளார். அதேபோல பாட்டி பாடும் ஒப்பாரி பாடலின் வரிகளையும் கூட இந்த "குக்கூ..." பாடலில் சேர்த்துக்கொண்டுள்ளார்.**

கொண்டு, தனது பாட்டி பிறந்த தலவாக்கலை, ஆகரப்பத்தனை சென்.ரெகுலர்ஸ் தோட்டம், அவர் மணம் முடித்து வாழ்ந்து வந்த கொட்டகலை மண்வெட்டி தோட்டம் உள்ளிட்ட மலையகத்தின் ஏனைய பகுதிகளுக்கும் அறிவு பயணித்து, அங்குள்ள மக்களின் வாழ்வியலையை நேரடியாகத் தரிசித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம், கலைஞர் அறிவு உடனான இணையவழிக் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. குறித்த எண்ணிக்கையினரான பங்குபற்றுநர்களுடன் இடம்பெற்ற அந்தக் கலந்துரையாடலில் அறிவிடம் கேள்விகளை கேட்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. அதன்போது நான் (கட்டுரையாளர்) கோரிக்கை ஒன்றாக ஒரு கேள்வியை முன்வைத்து இருந்தேன்.

"இலங்கையில் வாழும் மலையகத் தமிழர்கள் இலங்கை வந்தது ஒரு வரலாறு. அது பரவலாகப் பேசப்பட்டுள்ளது, பேசப்படுகின்றது. அவர்களுள் ஒரு பகுதியினர் மீளவும் திரும்பிச் செல்ல அல்லது திருப்பி அனுப்பப்பட்ட வரலாறும் பரவலாக பேசப்பட்டுள்ளது. ஆனால், தாயகம் திரும்புகிறோம் எனும் பெயரில் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்ற மலையகத் தமிழர்களின் இந்திய வாழ்வியல் குறித்த பதிவுகள் பெரிதாகப் பேசுபொருள் ஆகவில்லை. இப்போது கலைஞர் அறிவு அடைந்திருக்கும் பிரபலத்தின் ஊடே அவர் இணைந்திருக்கும் சினிமாப் பின்புலத்தின் வெகுசனத்தளத்தில் தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்கள் குறித்த தமிழ்த் திரைப்படம் ஒன்றைக் கொண்டு வரும் சாத்தியம் உள்ளதா ? " என்பதே எனது கோரிக்கையும் கேள்வியும். சுருங்கச் சொன்னால் பாடலில் வந்த பாட்டி வள்ளியம்மையின் வரலாற்றைப் படமாக்கும் சாத்தியமுள்ளதா? என்பதே.

எனது கோரிக்கையின் நியாயத்தைப் புரிந்துகொண்டவராக பதில் அளித்த கலைஞர் அறிவு அதனைச் சாத்தியமாக்குவதை நோக்கிய நகர்வின் முன்மொழிவை வழிமொழிந்து ஏற்றார்.

இத்தகைய ஒரு திரைப்படத்தின் அவசியம் என்ன எனும் கேள்விக்கு பின்னாலுள்ள அரசியல் கோரிக்கை முக்கியமானது. இலங்கையில் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என அறியப்பட்டுள்ள மலையகத் தமிழ் மக்களுக்கு, இருந்த ஒரே மாற்றுத் தெரிவான இந்தியா சென்றவர்களின் வாழ்க்கை நிலைமையை பரவலாக அறிந்து கொள்ளக்கூடியதன் வாய்ப்பே அது. இவ்வாறு தாயகம் திரும்பிச் சென்றவர்களின் வாழ்வியலைப் பேசும் படைப்புகள் வெளிவராமலும் இல்லை. அவ்வாறு சென்றவர்கள் குழுவாக இணைந்து வெளியிட்ட 'எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்' ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு தமிழிலும் 'Alienated Everywhere' என ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளது.

(11ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குக்கூ...

(10 ஆம் பக்கம் பார்க்க)

மலையக மக்கள் மறுவாழ்வு மன்றத்தின் மூலவரான இர.சிவலிங்கம் தொகுத்திருக்கும் In the service of the displaced - Indo - Sri Lanka Agreement 1964 & 1974, எல்.வேதவள்ளி எழுதிய SriLankan Repatriates in Kotagiri, மலையகக் கல்வியாளரும் ஆய்வாளருமான எம்.வாமதேவன் தனது தத்துவ மாணி பட்டப்படிப்புக்காக சமர்ப்பித்து பின்னர் ஆங்கில நூலாகவும் வெளிவந்த Sri Lankan Repatriates in Tamil Nadu எனும் ஆய்வு நூலும் முக்கியமானது. இஸட் ஜெயசிங் எழுதிய 'இலங்கை வாழ் இந்தியர்களின் குடியகல்வு', மு.சி.கந்தையா எழுதிய ஆய்வு நூலான 'சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்', தமிழகன் (ராமச்சந்திரன்) தொகுத்த 'மலையகமும் மறுவாழ்வும்' அதேபோல சி.பன்னீர்செல்வம், அரு. சிவானந்தன், மு.சி.கந்தையா, தமிழகன் உள்ளிட்ட தாயகம் திரும்பிய முதல் தலைமுறையினரின் பல இலக்கிய படைப்புகளும் உள்ளன. தாயகம் திரும்பியவரான இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த தவமுதல்வன் இயக்கத்தில் வெளியான 'பச்சை ரத்தம்' ஆவணப்படமும் முக்கியமானது. அதேபோல தாயகம் திரும்பியவர்கள் அல்லாத இந்திய பூர்வீக தமிழர்களான பேராசிரியர் வி.சூரியநாராயணன் தொகுத்த Rehabilitation of Srilankan Repatriates: A critical Appraisal எனும் ஆங்கிலநூல், தமிழ் மகன் (வெங்கடேசன்) எழுதிய வனசாட்சி (நாவல்), இரா.வினோத் எழுதிய 'தோட்டக்காட்டீ' (கவிதை), முஹம்மட் யூசுப் அண்மையில் எழுதியுள்ள 'தட்டப்பாறை' (நாவல்) என பல படைப்புகள் தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்களையும், அவர்களது பூர்வீக மலையகத் தமிழர் பின்னணியையும் தொட்டுச் செல்வனவே. இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்களின் புனர்வாழ்வு குறித்து பதிவுசெய்யும் The Directory of Rehabilitation எனும் விபரப்பதிவும் கூட உள்ளது. தாயகம் திரும்பியோர்... எனும் அடைமொழியுடன் இயங்கும் பல அமைப்புகள் தமிழ் நாட்டில் பரவலாக உள்ளன. இப்போது தாயகம் திரும்பியோர் எனும் சமூக அடையாளத்துடன் ஒரு சட்ட மன்ற உறுப்பினரும் உள்ளார் (பொன். ஜெயசீலன் MLA கூடலூர் 2021).

அதேநேரம் தாயகம் திரும்பிய மூன்றாந் தலைமுறை இளைஞரான 27 வயது நிரம்பிய அறிவு, தமிழ் நாட்டிலேயே பிறந்து வளர்ந்தவர். தனது பாட்டி வள்ளியம்மையை முன்னிறுத்தி வெளிக்கொணர்ந்துள்ள கலைப்படைப்பின் காலமும், வடிவமும், நுட்பமும் வேறுபட்ட தளத்தில் இயங்குவால், இன்றைய நிலையில் தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்களது சமகால வாழ்வியல் வரலாற்றுப் பின்புலங்களுடன் திரைப்படமாகும்போது சமகாலத் தலைமுறையினருக்கு இரண்டு தரப்பு மலையகத் தமிழர்களினதும் நிலை பற்றிய புரிதலை ஏற்படுத்தலாம். தமிழக (இந்திய) நிலையில் தாயகம் திரும்பிய மலையகத் தமிழர்க்கும் ஈழ அகதிகளுக்கும் இடையேயான வித்தியாசத்தைப் புரிந்துகொள்ளவும், இலங்கை நிலையில் மலையகம் அடைந்திருக்க வேண்டிய அரசியல் நிலையைப் புரிந்துகொள்ளவும் திரைமொழியின் ஊடாக சொல்லப்படும் கதை வலுசேர்ப்பதாக அமையக்கூடும்.

கலைஞர் அறிவு ஏற்கனவே தமிழ் சினிமாவில் ஒரு கவிஞராக காலடி எடுத்து வைத்திருப்பவர் தான். ரஞ்சித் இயக்கத்தில் ரஜினிகாந்த நடிப்பில் வெளியான 'காலா' திரைப்படத்தில் அவர் எழுதிய "உரிமையை மீட்போம் .... நிலமே எங்கள் உரிமை ... நிலமே எங்கள் உரிமை...உரிமை..." எனும் பாடல் இலங்கை மலையகத் தமிழர் அரசியல் கோரிக்கைகளுக்கு மாத்திரமல்ல, இலங்கையில் இருந்து இந்தியா சென்று தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் 'தனித் தொகுதியினராக' வாழும் தாயகம் திரும்பிய மலையகத் தமிழருக்கும் கூட அவசியமானதே.

எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்களின் அரசியல் ஒன்றாக இருப்பதை ஒரு திரைமொழியில் சொன்னால் இன்னும் ஓர் அகலத்திரைக்கு அது செல்லக்கூடும் என்பது எதிர்பார்ப்பு.

# யாழ்ப்பாண வரலாறு

**1505-1948 வரை**

ந.பரமேஸ்வரன்

## பறங்கிப் படைகளுடன் மூண்டது போர்



### 1544

மன்னாரில் மதம் மாறியவர்கள் அனைவரும் போர்த்துக்கீசப் பிரஜைகள் என போர்த்துக்கல் அரசு அறிவித்தது. மதம் மாற மறுத்தவர்களை போர்த்துக்கீசர் கடுமையான சித்திரவதைகள் செய்தனர். மதம் மாறிய தனது பிரஜைகள் போர்த்துக்கீசருடன் இணைந்து தனக்கு எதிராக சதி செய்யக்கூடும் என அஞ்சிய சங்கிலி மன்னன், 5000 பேர் கொண்ட படையுடன் மன்னார் தீவினுள் நுழைந்து மதம் மாறிய அனைவரையும் கொன்றான். இவ்வாறு சங்கிலியால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 600 ? 700 வரை இருக்கலாமெனக் கூறப்படுகிறது. 1544 ஆம் ஆண்டு கார்த்திகை அல்லது மார்கழியில் இந்தச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென கூறப்படுகிறது. தோட்டவெளி என்ற இடத்திலேயே சங்கிலியனால் மதம் மாறிய கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களை வேதசாட்சிகள் என கத்தோலிக்கர்கள் அழைக்கின்றனர். சங்கிலி சிரச் சேதம் செய்தவர்களில் மன்னார் தளபதியாக அல்லது குறுநில மன்னனாக நியமிக்கப்பட்டிருந்த சங்கிலியின் மகனும் அடங்குகின்றான் எனப் போர்த்துக்கீசரின் குறிப்புகளில் காணக்கூடியதாகவுள்ளது.

மன்னாரில் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டதும் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுக்க தீர்மானித்தனர். கூலிக்கு அமர்த்தப்பட்ட வீரர்களுடன் போர்த்துக்கீசப் படை இந்தியாவின் நாகபட்டினத்திலிருந்து புறப்படத் தயாரானது. அந்த நேரம் பார்த்து போர்த்துக்கல்லில் இருந்து கோவா நோக்கி புறப்பட்ட கப்பலொன்று கடும் காற்று காரணமாக நெடுந்தீவுக்கருகே தரை தட்டியது. இந்தக் கப்பலில் இருந்த பொருள்கள் அனைத்தையும் சங்கிலி மன்னன் சூறையாடினான். இதனால் போர்த்துக்கீசர் சங்கிலி மீது போர் தொடுக்கும் எண்ணத்தை தள்ளி வைத்தனர். இந்தக்காலப் பகுதியில் கோட்டை இராச்சியமானது, கோட்டை, சீதாவாக்கை என இரண்டாக பிரிந்திருந்தது . கோட்டையை புவனேகபாகுவும் , சீதாவாக்கையை மாயாதுன்னையும் ஆண்டு வந்தனர். புவனேகபாகு போர்த்துக்கீச மேலாதிக்கத்தின் கீழ் கோட்டையை ஆட்சிசெய்து வந்தான்.

### 1560 செப்ரெம்பர் 07

கோவா ஆளுநராக பதவி வகித்த கொன்ஸ்தாந்தினு டீ பிரகன்ஸா 7 போர்க்கப்பல்களும் 92 மரக்கலங்களும் கொண்ட படையுடன் யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டான் சாந்தோம் நகரில் வசித்த கிறிஸ்தவர்களுக்கு விஜயநகர அரசு தொல்லை கொடுத்துவந்தது. இதனால் சாந்தோம் நகரில் வசித்து வந்த கிறிஸ்தவர்களை வேறிடத்தில் குடியமர்த்த வேண்டிய தேவை போர்த்துக்கீசருக்கு ஏற்பட்டது. சாந்தோம் நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை குடியமர்த்துவதற்கு பொருத்தமான இடமாக மன்னாரைத் தெரிவுசெய்தனர் போர்த்துக்கீசர். போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தின்மீது படையெடுப்பதற்கு இதுவும் ஒரு காரணம். தெமுது என்ற மேற்றிராணியரும் போர்த்துக்கீசப் படையுடன் வந்தார். 1560 ஒக்ரோபேர் 20 ஆம் திகதி போர்த்துக்கீச படைகள் சிறுத்தீவில் தரையிறங்கின.

சிறுத்தீவில் தரையிறங்கிய போர்த்துக்கீசப் படைகள் அங்கிருந்து புறப்பட்டு மாலை மூன்று மணியளவில் பண்ணையில் தரையிறங்கின. போர்த்துக்கீச படையில் 1200 வீரர்களிருந்தனர். பண்ணையில் தரையிறங்கிய பறங்கிப்படையை சங்கிலியின் மகனான சேது 2000 பேர் கொண்ட படையுடன் எதிர்கொண்டான், போர்த்துக்கீச படைகள் சேதுவின் படைகளைப் பின்வாங்கச் செய்து நகருக்குள் புகுந்தன. சங்கிலி நல்லூரையே தலைநகராக கொண்டு ஆட்சி புரிந்துவந்தான்.நல்லூரிலேயே சங்கிலியின் கோட்டை அமைந்திருந்தது. கோப்பாயிலும் ஒரு கோட்டை இருந்தது. கோப்பாயில் இருந்த கோட்டை, கோப்பாயிலிருந்து கைதடி பக்கமாக அமைந்திருந்தது. நல்லூருக்குள் நுழைந்த பறங்கிப்படைகளுக்கும் சங்கிலியின் படைகளுக்குமிடையே கடும் போர் மூண்டது.சங்கிலியின் படையிலிருந்த வீரர்களும் முஸ்லிம் (கூலிப்படை) துருப்புகளும் ஓர்மத்துடன் போர்புரிந்தன.

இரண்டாம் நாள் போர்த்துக்கீசப் படைகள் நல்லூரைக் கைப்பற்றின. சங்கிலி.கோட்டைக்கு நெருப்பு வைத்து விட்டு கோப்பாய்க்கு தப்பியோடினான்; போர்த்துக்கீச படைகள் நல்லூரைச் சூறையாடின. போர்த்துக்கீசப் படைகள் கோப்பாயை நெருங்கிய போது சங்கிலி, கோப்பாய்க் கோட்டைக்கு நெருப்பு வைத்துவிட்டு சரசாலைக்குச் சென்று அங்கிருந்து பச்சிலைப் பள்ளிக்கு தப்பிச் சென்றான். பச்சிலைப்பள்ளியில் வைத்து 1500 பேர் கொண்ட போர்த்துக்கீச படை சங்கிலியை சுற்றிவளைத்தது. எனினும் சங்கிலி வன்னியரசனின் உதவியுடன் வன்னிக்குத் தப்பிச்சென்றான். போர்த்துக்கீசருடன் போர்புரிவதை விட சமாதானமாகப் போவதே நல்லது என மந்திரிமார் கூறிய ஆலோசனையின் பிரகாரம் போர்த்துக்கீசருடன் சமாதானம் செய்யச் சம்மதித்தான் சங்கிலி.



(பட உதவி : மன்னாரின் அட்டூழிய வரலாறு, மறவன்புலவு சச்சிதானந்தம்)

### 1548

புனித சவேரியார் மன்னாருக்கு வந்தார். மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வந்த சவேரியார், போர்த்துக்கீசருடன் நட்பு பூணுமாறு சங்கிலியைக் கேட்டுக்கொண்டார். சங்கிலியும் அதற்குச் சம்மதித்து தனது தூதுவனொருவனை கோவாவுக்கு அனுப்பினான். கோவாவிலிருந்த போர்த்துக்கீச ஆளுநரும் சங்கிலியின் தூதனை வரவேற்று தனது நட்புக்கு அறிகுறியாக சில பொருட்களும், சங்கிலிக்கு ஒரு மடலும் கொடுத்து அனுப்பினான். சிறிது காலத்தின் பின்னர் போர்த்துக்கீசர் ஒரு கோயில் கட்ட அனுமதி கேட்டபோது சங்கிலி அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டான். சங்கிலியின் அரசவையில் முதல்மந்திரியாக இருந்த பரநிருப சிங்கன் என்பவனே அரச பதவிக்கு உரித்துடையவன். எனினும் சங்கிலி தானே ஆட்சியினை கைப்பற்றி ஆண்டு வந்தான். இதனால் மனமுடைந்திருந்த பரநிருப சிங்கன் போர்த்துக்கீசருடன் நட்பு பூண்டு, தான் அரசனாக முயற்சித்தான். போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தால் தான் போர்த்துக்கீசருக்கு உதவுவேன் என புனித சவேரியாருக்கு கடிதமொன்றை அனுப்பினான் பரநிருபசிங்கன். பரநிருபசிங்கன் இரகசியமாக இந்தியா சென்று போர்த்துக்கீசரை சந்தித்துவிட்டு வந்தான் எனவும் சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

(வரலாறு நீளும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை எனும் பயணம்

○ ம.மயூரபாலன்

ஒரு கணம் நின்று, ஒரு மலரை ரசித்துப் பார்ப்பதற்குக் கூட நேரம் இல்லாது, காலையும் மாலையும் கடுகதி வேகத்தில் ஓடிக்கொண்டிருந்த நமது வாழ்க்கையை, ஒரு கண்ணுக்குத் தெரியாத கிருமி வந்து அப்படியே ஸ்தம்பிதம் அடைய வைத்து விட்டது. ஆனால் நமது மனமோ அதிகூடிய வேகத்திலே ஓடிக் கொண்டே இருக்கிறது. நாளை என்ன நடக்கும் என்ற ஒரு அங்கலாய்ப்பை உருவாக்குகிறது. இந்த அலைபாயும் மனதுக்கு சற்று ஓய்வு கொடுத்து, வாழ்க்கையின் சில உண்மைத் தன்மைகளை அலசி ஆராய்ந்து பார்ப்போம்.

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் சுழலும் சக்கரம், வாழ்க்கை மேடு பள்ளம் நிறைந்தது என நாம் கேள்விப்பட்டுள்ளோம். நிஜமாகவே அதனை அனுபவித்தும் இருக்கிறோம். ஆனால் இந்த இன்ப துன்பங்களுக்கு அப்பாலே, என்றுமே மாறாத, நிரந்தரமான ஆனந்தம் ஒன்று உண்டு என்பதை அறிந்திருக்கிறோமா? "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என ஔவையார் கூறியுள்ளார். பெறுவதற்கரிய பிறப்பை பெற்றோம் என ஞானிகளும் மகான்களும் கூறியுள்ளார்களே, அதன் அர்த்தம் என்ன?



நாங்கள் இந்த வாழ்க்கை எனும் பயணத்திலே, தனியே பயணிக்கும் ஒரு வழிப்போக்கன்தான். ஆனால் இந்த பயணத்தைப் பற்றி சரிவர புரிந்து கொள்ளாவிட்டால் நாங்கள் தொலைந்து போய் விடுவோம். இந்த வாழ்க்கைப் பயணம் ஒரு இடத்தில் ஆரம்பித்து அதே இடத்தில் முடிவடையும் பாதையல்ல. ஏனெனில் கழிந்துபோன காலம் ஒரு பொழுதும் மீண்டும் வராது. நீங்கள் நேற்று செய்த காரியங்களைப் போன்ற காரியங்களை இன்று செய்தாலும், அவை ஒருபோதும் ஒரே மாதிரி இருக்கப் போவதில்லை. நீங்கள் இந்த வாழ்க்கைப் பயணத்திலே கடந்து போன இடத்தை மீண்டும் வந்து அடைய முடியாது.

அப்படியானால் நீங்கள் எங்கே செல்கிறீர்கள்? இந்த வாழ்க்கைப் பயணம் உங்களை எங்கே எடுத்துச் செல்கிறது? வாழ்க்கையிலே மூன்று மிக முக்கியமான நிகழ்ச்சிகள் உள்ளன. ஒன்று பிறப்பு, இரண்டாவது உயிர்வாழ்க்கை, மூன்றாவது என்னவென்று நம் எல்லோருக்கும் தெரியும். அது எவ்வளவு நிச்சயமானது என்பதும் நம் எல்லோருக்கும் தெரியும். ஒரு துளியாக ஆரம்பித்த ஒரு நதி, ஒரு நாள் கடலிலே சங்கமிக்கிறது. இந்த வாழ்க்கை என்பது அந்த முதல் துளி பற்றியதும் அல்ல, கடலில் சங்கமிப்பது பற்றியதும் அல்ல. இந்த வாழ்க்கைப் பயணம்தான் அந்த ஓடிக்கொண்டிருக்கும் நதி.

இது ஒவ்வொரு மனிதனதும் தனிப்பட்ட பயணம் பற்றியது. ஆனால் இந்த வாழ்க்கையை, நமக்குத் தரப்பட்டுள்ள இந்த கருணையை, நாங்கள் ஒரு அற்புதம் எனக் கருதுவதில்லை. வாழ்க்கை என்பது ஒரு பொக்கிசம் என்று நாம் காண்பதில்லை. ஆனால் யாராவது மருத்துவர் , உங்களுக்கு இன்னமும் ஆறு மாதங்கள்தான் பாக்கி உள்ளது எனக் கூறினால் உடனே விழித்துக் கொள்வோம். காலம் கடந்த பின்னர் அவ்வாறு கண்டுகொள்வது பெரும் துரதிர்ஷ்டம் ஆகும். விபத்துக்களும் விபரீதங்களும் நமக்கு பாடம் கற்றுக்கொடுக்க முன்னரே, இதனை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இப்பொழுதே அந்த பழக்கத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். வாழ்க்கை ஒரு அற்புதம் என்பதை இப்பொழுதே கண்டு கொள்ள ஆரம்பிக்க வேண்டும்..

இங்கே நம்பமுடியாத, மிகவும் இயல்பான விடயம் நடைபெறுகின்றது. நாங்கள் உயிர் வாழ்கிறோம், நம்மாலே சிந்திக்க முடிகிறது, பார்க்க முடிகிறது, உணர முடிகிறது, அழ முடிகிறது, சிரிக்க முடிகிறது, நாங்கள் நம் உள்ளே உள்ள நிம்மதியை உணர முடியும். "நீங்கள் எதனைத் தேடுகிறீர்களோ அது உங்களின் உள்ளேயே உள்ளது" என்பது மகான்கள் அருளிய ஒரு மிகவும் நல்ல செய்தி. பல காலங்களுக்கு முன்னரே "உன்னையே நீ அறிவாய்" என சோக்கிரட்டீஸ் எனும் ஞானி கூறினார். எங்களது உள்ளத்தின் விருப்பம் என்ன? நாங்கள் எப்பொழுதுமே விரும்பிய விடயம் என்ன? நாங்கள் திருப்தியாக இருக்க விரும்பினோம். எப்பொழுதுமே எங்களின் உள்ளே ஆனந்தத்தை அனுபவிக்க விரும்பினோம். ஆனால் இந்த வாழ்விலே வெறுமனே ஒன்றை நம்பி நாங்கள் செல்ல முடியாது என்பதை நாங்கள் உண்மையிலே அறிந்து கொள்ள வேண்டும். ஏதாவது ஒன்றை நம்புவதற்கும், அறிந்து கொள்வதற்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. ஒன்றை நம்புவதற்கு எதுவுமே செய்யத் தேவையில்லை. ஆனால் ஒன்றை அறிந்துகொள்வதற்கு, முயற்சி தேவையாக உள்ளது. கேள்விகள் கேட்க வேண்டி உள்ளது.

உலகத்திலே பலரும் பல விடயங்களைப் பற்றி பேசுகிறார்கள். உங்களது வீட்டை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று கூறுபவர்கள் உள்ளார்கள். உங்களை எவ்வாறு அழகுபடுத்தலாம் என சிலர் கூறுகிறார்கள். பரீட்சையில் எவ்வாறு தேர்ச்சி பெறலாம் என சிலர் கூறுவார்கள். ஆனால் நாம் உயிருடன் வாழ்வது எவ்வளவு ஒரு பெரிய விடயம் என யார் கூறுகிறார்கள்? நமக்கு கிடைத்திருக்கும் இந்த மனித வாழ்க்கை ஒரு விலைமதிக்க முடியாத அன்பளிப்பு என யார் கூறுகிறார்கள்?

அவ்வாறு ஒருவர் கூறினாலும், நமது தினசரி வாழ்விலே, எங்களது பொறுப்புக்கள், வேலைகள் மற்றும் பிரச்சினைகளின் மத்தியிலே ஓரிரு நிமிடங்கள் அது பற்றி சிந்தித்தாலும் பின்னர் நாம் அதனை மறந்து விடுகிறோம். இது பற்றி ஒரு ஞானி "கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர்" என கூறினார். அதாவது "இறை உணர்வு என்பது மிகவும் ஆழமான விடயம். யார் ஒருவர் தனது வாழ்விலே அதனை உணர்ந்தாரோ, அவர் அதுபற்றி பேசுவதில்லை. யார் அதிகம் பேசுகிறார்களோ, அவர்கள் அதுபற்றி அறிந்தது இல்லை" என கூறினார். ஏனெனில் இது அனுபவம் செய்ய வேண்டிய விடயம். பேசுவதற்கான விடயம் அல்ல.

இது எப்படியென்றால், நீங்கள் மிகவும் பசியுடன் ஒரு உணவகத்துக்கு செல்கிறீர்கள். அங்கு அந்த உணவகத்தின் முதலாளி உணவுப் பட்டியலை வாசிக்கிறார். உங்களுக்கும் மகிழ்ச்சியாக உள்ளது. பின்னர் சாம்பார், பருப்பு கறி பற்றி ஒருமணி நேரம் பேசுகிறார். அதன் பின்னர் சோறு, ரொட்டி என்பவை பற்றி ஒரு மணி நேரம் பேசுகிறார். உங்களுக்கு வாயிலே நீர் ஊறலாம், அவ்வளவுதான். ஆனால் அங்கே உண்பதற்கு உணவு இல்லை என்றால், பசியுடன் அங்கே வந்த நீங்கள் பசியுடனேயே திரும்பிப் போக வேண்டியதுதான்.

கடவுளைப் பற்றி, இந்த வாழ்வைப் பற்றி கூறுபவர்களுக்கு குறைவே இல்லை. ஆனால் அந்த அனுபவத்தை நாம் அனுபவிக்க முடியாவிடின் அதனாலே நமக்கு என்ன பயன்? வெறும் கையுடன் இந்த உலகத்துக்கு வந்த நாம், வெறும் கையுடன் இந்த உலகத்தை விட்டு போக வேண்டிய அவசியம் இல்லை. நம் உள்ளே உள்ள வர்ணிக்க முடியாத அந்த அழியாப் பொருளை உணரமுடியும். நம் உள்ளே உள்ள தாகம் தான் அந்த அழியாப் பொருளை அறிய வேண்டுமெனும் தேடலுக்கு வித்தாக அமைகிறது.

○ அகமது ஃபைசல்



# பதில் சொல்லுங்கள்

ஒரு 'மினி*க்கதை'

பறவைகள் எப்படி பறந்துகொண்டே ஒன்றோடு ஒன்று பேசிக்கொள்கிறன. பேசும்போது அதன் சொற்கள் காதில் விழாமல் கீழே விழுந்தால்? விழாதா? நீலக் கடதாசியை வைத்துக்கொண்டு வானம் என்கிறார்கள் அந்த பள்ளிச் சிறுவர்கள். என்னைப் போன்ற சிறுவர்களின் விரல்களில்தான் எழுத்துக்கள் பிறக்கின்றனவா? சிறுவர்கள் எழுத்துக்களை சரியாக அடுக்கியும், பிழையாக எழுதியும் விளையாடுகிறார்கள்.

சொல் என்ன விளையாட்டா? சொல்லுங்க. ஒரு சிறுவனுக்கு கடல் எப்படிப்பட்ட பொருளாகத் தெரியும்? அவ்வளவு தண்ணீரையும் அவனது சின்னஞ் சிறிய கண்கள் கொள்ளுமா? ஏன் நீங்கள் பேசாமலே வருகிறீர்கள். உங்களைப் போன்ற பெரியவர்களுக்கு சிறுவர்களின் வினோத உலகம் புரியாதா? உங்கள் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வராதா?


சொல்லுங்கள் மண் என்பதும் ஒரு சொல்தானே. அதெப்படி ஒரு சொல் இவ்வளவு பெரிதாக இருக்கிறது. "மண்" என்று எழுதும்போது மட்டும் எப்படி சிறிதாக மாறுகிறது.

நான் சிறுவன்தான் ஆனால் எனக்குள் தோன்றும் இந்தக் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்ல முடியுமா? ஒரு முறை நீங்கள்தானே சொன்னீர்கள் ஞாபகமிருக்கா? என் தாய் கண்களால் பேசுகிறாள், கைகளால் பேசுகிறாள் என்று. அவள் வாயால் பேசி நான் இன்னும் கேட்டதில்லை. நீங்கள் என் தாயை திருமணம் செய்துகொள்ளப்போகிறீர்கள் என பேசிக் கொள்கிறார்களே அப்போ நீங்கள் என் வாப்பா இல்லையா? நானும் ஒரு சொல்தானே. உங்களுக்கு நான் சொல்வது புரிகிறதா? ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து எழுதிய சொல்தானே குழந்தை. உங்களை நான் எனது வீட்டில் தினமும் காண்கிறேன். இரவு வேளைகளிலும் நீங்கள் என் வீட்டில் தங்கியிருக்கிறீர்கள். உங்களைத் தவிர எனது வீட்டில் வேறு ஆண்கள் யாரும் இல்லை. அதனால் நீங்கள் என் வாப்பா என்று நினைத்திருந்தேன்.

இனி நீங்களே எனக்கு வாப்பாவாக இருங்கள் அப்போதுதான் என் வீட்டுக்கு நீங்கள் வருவதை நான் விரும்புவேன். இரவில் நீங்கள் என் உம்மாவுடன் தங்கிச் செல்வதையும் நான் விரும்புவேன். என் தாயோடு நீங்கள் கைகளாலும், கண்களாலும் மேலும் தலையாலும் பேசுகிறீர்களே என் தாய் என்ன ஊமையா சொல்லுங்கள்? என் தாய் என்ன ஊமையா சொல்லுங்கள்? என் தாய் தூக்கத்தில் எதையோ பேச நினைத்து பேச முயற்சிப்பாள் ஆனால் ஒரு வித பரிதாபக் குரல்தான் சொற்கள் இல்லாமல் வெளியே வருகிறது. அது எனக்குப் புரிவதில்லை சிலவேளை உங்களுக்குப் புரியலாம் அதனால்தான் சொல்கிறேன் நீங்கள் எனக்கு வாப்பாவாக இருங்கள்.

ஏன் என்னைத் தனியே இங்கு விட்டுப் போகிறீர்கள் நில்லுங்கள்" அந்த புத்திசாலிப் பிள்ளையின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அவனை அநாதை இல்லத்தில் விட்டுச் சென்றவர் ஒரு நாளும் அவனைப் பார்க்க வந்ததேயில்லை. பல ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் தன் அம்மாவைப் பார்க்க அவன் வீட்டுக்கு வந்தான். வயதான ஒரு கிழவி தனிமையின் துன்பத்தில் துவண்டுபோய் வீட்டுக்கு வெளியே சுவரில் சாய்ந்தபடி இருப்பதைக் கண்டான். "அம்மா" என்று அழுதுகொண்டு அவள் அருகே போய் அமர்ந்துகொண்டான். அப்போதுதான் அவள் இறந்துபோய் இருப்பது அனுக்குத் தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பயணக் கட்டுப்பாட்டு: பேஷன் மற்றும் பாதுகாப்பு

கொரோனா காரணமாக நீங்கள் எங்கும் செல்ல முடியாது. ஆனால் தைரியம் மற்றும் பாதுகாப்பு மூலம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கக்கூடிய நேரம், நீங்கள் மற்றவர்களின் பாதுகாப்பில் ஒரு கூட்டாளியாக முடியும். ஒவ்வொரு நாளும் ஒரு சில சிறிய விடயங்களுக்கு நீங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டும். இந்த நேரத்தில், நீங்கள் பாதுகாப்பு மற்றும் பேஷனுடன்இருந்து கொண்டால், நீங்கள் நன்றாக உணர்வீர்கள், இந்த விரக்தியின் சகாப்தத்தில் நேர்மறை எண்ணத்துடன் இருங்கள்.

**வண்ணமயமான முகமூடி**
கொவிட் தொற்று ஏற்படும் அபாயம் அதிகரிக்கும் சகாப்தத்தில், உங்கள் முகமூடியை அணிவது மிகவும் முக்கியம். நீங்கள் பல வண்ணமயமான பருத்தி ஆடைகளை அணியுங்கள், இது உங்கள் சுகாதாரத்தை மேம்படுத்தும், மேலும் இதுபோன்ற முகமூடிகளும் அழகாக இருக்கும்.

**முழு சட்டைகளில் போடுங்கள்**
நீங்கள் அவசர வேலையிலிருந்து வெளியே செல்கிறீர்கள் என்றால், முழு உடலையும் மூடுங்கள், எனவே நீங்கள் தொற்றுநோய்க்கான அபாயத்தை ஓரளவுக்கு குறைக்கலாம்.

**சன்கிளாசஸ்**
இப்போதெல்லாம் சூரிய ஒளியுடன், உங்கள் கண்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. இந்த நேரத்தில் நீங்கள் வெளியே செல்கிறீர்கள் என்றால், உடலின் மற்ற பாகங்களைப் போலவே கண் பாதுகாப்பும் முக்கியம். எனவே நீங்கள் இருண்ட நிழல்களின் சன்கிளாஸைப் பயன்படுத்தலாம்.

**குறுகிய வண்ணப்பூச்சு மற்றும் சட்டை தவிர்க்கவும்**
இந்த நேரத்தில் அரை கை ஆடைகளை அணியாமல் இருப்பது நல்லது, எனவே தேவையான தொற்று அபாயத்தை நீங்கள் தவிர்க்கலாம்.



# மாங்காய் வடை

**தேவையான பொருள்கள்**

| | |
|---|---|
| மாங்காய் | – 1 (துருவிக் கொள்ளவும்), |
| பச்சை மிளகாய் | – 2 (விழுதாக அரைத்துக் கொள்ளவும்), |
| உளுத்தம் பருப்பு | – 100 கிராம், |
| கடலைப் பருப்பு | – 100 கிராம், |
| சோம்பு | – 1 டீஸ்பூன், |
| உப்பு | – தேவைக்கு, |
| கொத்தமல்லித்தழை, கறிவேப்பிலை | – சிறிது, |
| எண்ணெய் | – தேவையான அளவு. |



**எப்படிச் செய்வது?**
பருப்புகளை நீரில் ஊற வைத்து சொர சொரப்பாக அரைத்துக்கொள்ளவும். இதனுடன் துருவிய மாங்காய், மிளகாய் விழுது, சோம்பு, உப்பு, அரிந்த கறிவேப்பிலை, கொத்தமல்லி சேர்த்து பிசைந்துகொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் பிசைந்த மாவை வடையாக தட்டி பொன்னிறமாக இருபுறமும் திருப்பிப் போட்டு பொரித்தெடுக்கவும். எண்ணெய் நன்றாக சூடாகாவிட்டால் வடை எண்ணெய் குடிக்கும். இந்த வடை புளிப்பு சுவையுடன் ருசியாக இருக்கும். மாங்காயில் விட்டமின் ஏ, நார்ச்சத்து உள்ளன. பசியை தூண்டக்கூடியது. உடலுக்கு சூடு என மாங்காயை பலர் சாப்பிடுவதில்லை. எதையுமே அளவோடு சாப்பிட்டால் அதன் விட்டமின் சத்துகள் நமக்குக் கிடைக்கும்.



# ஐஸ் கட்டியின் அழகு ரகசியங்கள்

**மென்மையான சருமம்** : சரும ஐசிங் உங்கள் முகத்தை பதனிடப்படுத்தும். இதனால் சருமத்தின் தோற்றம் மென்மையாகும். குப்பைகள் மற்றும் அதிகமான சரும மெழுகால் பெரிதாக இருக்கும். துவாரங்களின் அடைப்பை நீக்க உதவுவதால், மேலும் பெரிதாக உள்ள துவாரங்களை குறைக்கவும், இறுக்கவும் இது உதவும்.

**சரும பதனிடுதல்**: மேக்அப் போடுவதற்கு முன் முதலில் ஐஸ் கட்டியை கொண்டு முகத்தில் தடவவும். அதன் பின்னரே பிரைமரைத் தடவ வேண்டும். இது மலிவான சரும பதனிடுதலாக செயல்படும். மேக்கப்புக்கு கீழ் உள்ள மிகப்பெரிய துவாரங்களின் தோற்றங்களை இது குறைக்கும். இதனால் பவுண்டேஷன் மென்மையாகவும் குறைபாடற்றதாகவும் இருக்கும்.

**கண் அழகு** : ஐஸ் தடவுவதால் கண்களுக்கு கீழ் ஏற்படும் வீக்கம் குறையும்.

வெப்பத்தில் தோல் கருப்பாவதைக் கட்டுப்படுத்துதல்
ஒரு ஐஸ் கட்டியை உங்கள் முகத்தின் மீது தடவினால் அது சருமத்தை மென்மையாக்கி, வெப்பத்தாலான கருமையை குறைக்கும்.


**இரத்த ஓட்டம் மேம்படும்**: ஐஸ் கட்டி என்பது உங்கள் சருமத்தின் இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும். குளிர்ச்சி உங்கள் இரத்த குழாய்களை சுருங்க செய்யும். அதனால் சரும மேற்பரப்புக்கு குறைந்த அளவிலேயே தான் இரத்தம் செல்லும் (இது வீக்கம் அல்லது அழற்சியை குறைக்கும்).

## குறிப்பு

ஐஸ் பேஷியலை தொடங்குவதற்கு முன்பு முகத்தை நன்றாக கழுவிக் கொள்ளுங்கள். பின் துடைப்பதற்கு மென்மையான துணியை எடுத்து, அதில் 12 ஐஸ் கட்டிகளை போட்டு மூடிக்கொள்ளுங்கள். ஐஸ் கட்டி உருகி, துணி ஈரமாகும் வரை இதனை முகத்தில் தடவுங்கள். 12 நிமிடங்கள் வரை இந்த துணியை முகத்தின் பல பகுதிகளில் தடவுங்கள். வட்ட இயக்கத்தில் அந்த ஐஸ் கட்டிகளை உங்கள் தாடை, கன்னங்கள், நெற்றி, மூக்கு மற்றும் கண்களுக்கு கீழ் மென்மையாக தடவுங்கள். டோன்னர், பரு சிகிச்சை மற்றும் மாய்ஸ்சுரைசருடன் இந்த பேஷியலை முடித்துக் கொள்ளுங்கள்.

ஐஸ் கட்டிகளை அப்படியே பயன்படுத்த போகிறீர்கள் என்றால், அவைகளை குளிர்சாதன பெட்டியில் இருந்து எடுத்த உடனேயே தடவாதீர்கள். அதிகமான குளிர் சருமத்துக்கு கீழ் இருக்கும் தந்துகிகளை உடைத்து விடும். ஏற்கனவே உடைந்த தந்துகிகளை கொண்ட சருமத்தின் மீது வெறும் ஐஸ் கட்டிகளை பயன்படுத்த வேண்டாம். அதே போல் நீண்ட நேரமும் இதனை தடவ வேண்டாம்.

குளிர் உங்களுக்கு சேரவில்லை என்றால் உடனே நிறுத்தி விடுங்கள். ஒரு பகுதியில் தொடர்ந்து 15 நிமிடங்களுக்கு மேல் ஐசிங் செய்யாதீர்கள்.




# கொவிட் காலங்களில் ஆரோக்கியமாக பேண...

நம் நாட்டுக்கான உடை குறிப்பாக ஆண்களுக்கு உகந்தது, வேட்டி. உடல் மெலிந்தாலும், பெருத்தாலும் பயன்ப டுத்தலாம். தேவையான நேரங்களில் பிறஆடைகள் பயன்படுத்தலாம். நம் வெப்ப மண்டல நாட்டுக்கு கைத்தறி ஆடையே ஏற்றது. அதையே பயன்படுத்தி இயற்கையோடு இணைந்து நம் முன்னோர்கள் வாழ்ந்தனர். வீட்டு முற்றங்களில் பசுஞ்சாணம் பயன்படுத்துவது கிருமிநாசினியாகவும் சகல ஐஸ்வர்யத்தையும் தரும் அன்றாட நிகழ்வாகவும் வழக்கில் இருக்கிறது.

தற்போது பஞ்சகவ்யம் பயன்படுத்துவது இயற்கை உரமாக வளம் உண்டாக பயன்படுகிறது. "கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்ற மூதுரை வாக்குப்படி தனி மனித சுகாதாரம் மேம்படுகிறது. வெளி இடங்களுக்கு சென்று வந்தால் கை, கால்கள் சுத்தம் செய்துவிட்டு வீடுகளுக்குள் பிரவேசிக்க அன்றே அறிவுறுத்தினர். தற்போது கொரோனா வைரஸ் மிகப்பெரிய சவாலாக விளங்குகிறது. அம்மை நோய் ஏற்பட்ட காலத்தில் பாதிக்கப்பட்டோர் வீடுகளில் அவர்களை குடும்பத்தாரோடு தனிமைப்படுத்தி (Quarantine) இருந்தனர்.

இதே நெறிமுறைகளை, வழிமுறைகளை நாம் இப்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு பயன்படுத்தினாலே நல்ல முறையில் சமூகத் தொற்றாக மாறாமல் இருக்கச் செய்யலாம். கொவிட் காலங்களில் அம்மன் கோவிலில் கஞ்சி பிரசாதமாக தரப்படும்.

மிளகு, சீரகம், வெந்தயம், ஏலக்காய், பூண்டு மற்றும் மருந்து சரக்குகள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். மாச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச் சத்துக்கள் உடலுக்கு வலிமை தரும். நமது பாரம்பரியத்தில் மஞ்சள் முக்கிய இடத்தை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. சோப்பை பயன்படுத்தி கை கழுவுவது, முகக்கவசம் அணிவது போன்ற தற்காப்பு விஷயங்களை கடைபிடிக்க அறிவுறுத்தப்படுகிறோம். மஞ்சளில் உள்ள குர்குமின் வேதிப்பொருள் புற்று நோயை எதிர்க்கும் தன்மையுடையது. நாம் பழங்கால வாழ்வியல், உணவு, பழக்கவழக்கங்களை கடைப்பிடித்து இன்றும் என்றும் ஆரோக்கியமாக வாழ முன் வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலைப்பேச்சு


வைரமுத்து @Vairamuthu · 10h
ஆழ்ந்த மூச்சுப்பயிற்சி
அழுத்தமான நடைப்பயிற்சி

அளவான சத்துணவு
அளவற்ற பேரன்பு

மூக்கு மூடிய முகக்கவசம்
மூச்சு தொடாத இடைவெளி

இவை
கொரோனாக் கால மருந்துகள்
#Corona

51 418 2.9K










www.facebook.com/revathy.ravikanth

எண்ணெய் இல்லாமல் தண்ணீரில் பூரி பொரிப்பது எப்படி! – யூ ட்யூப்
இவ்ளோ கண்டுபிடிக்கிறவன் அப்பிடியே கொரோனாவ ஒழிக்க ஏதாச்சும் கண்டுபுடிங்கடா!

www.facebook.com/sowmya.ragavan?

யாராவது இறந்துட்டா முன்பெல்லாம் வருத்தம், துக்கம்னு அவரைப் பற்றி யோசிப்போம். இப்பலாம் செய்தி கேட்டதுமே எம்மை அறியாம கொரோனாவா எண்டு தான் முதல்ல கேட்டுக் கொள்கிறோம்.

twitter.com/shivaas_twitz

டேய் கொரோனா... வருஷா வருஷம் இன்க்ரிமென்ட் டைம்ல உச்சத்துக்குப் போயிடுறாய் இது நியாயமா?

twitter.com/ThirutuKumaran

வேக்ஸின் வந்தால் சொல்லி அனுப்பு...
உயிரோடிருந்தால் வருகிறேன்.

twitter.com/myck @smbsultan

இந்த உலகில் பலர் நல்லவர்களை பார்க்க விரும்புகிறார்களே தவிர...
நல்லவர்களாக இருப்பதற்கான முயற்சியை மேற்கொள்வதில்லை...

## கடவுளுக்கே வந்த சந்தேகம்

52 வயதுப் பெண்மணி ஒருத்திக்கு இதயத்தில் அறுவைச் சிகிச்சை நடந்தது . கிட்டத்தட்ட மரணத்தின் விளிம்புக்குப் போன ஒரு தருணத்தில் அவள் கடவுளைக் கண்டாள். என் காலம் முடிந்துவிட்டதா? என்று துக்கத்துடன் கேட்டாள் கடவுளிடம் . இல்லை... இல்லை. உனக்கு இன்னும் 38 வருடங்கள், ஏழு மாதம், எட்டு நாள்கள் இருக்கின்றன என்றார் கடவுள். இதய சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. பிழைத்து விழித்ததும், அந்தப் பெண்மணி என் மூக்கைச் சற்று நிமிர்த்தி தொங்கிப்போன கன்னச் சதைகளை இழுத்துத் தைத்து, முகத்தை அழகாக்கி விடுங்கள். தொய்ந்து போன அங்கங்களைத் திடமாக்கி, என் தொப்பைக் கொழுப்பை அகற்றிவிடுங்கள். என் அழகுக்கு இங்கே இன்னும் பல வருடங்கள் வேலை இருக்கிறது - என்றாள் .

ஏராளமான செலவில் அவள் விரும்பியபடி அவள் தோற்றம் மாற்றப் பட்டது. கூந்தலின் நிறத்தைக்கூட மாற்றிக் கொண்டாள் அவள். எல்லாம் முடிந்து, மருத்துவமனையில் இருந்து வெளியேற்றப்பட்டாள். இளைஞர்களின் கண்கள்கூட அவளையே மொய்ப்பதை ரசித்துக் கொண்டு தெருவைக் கடந்தாள் .

வேகமாக வந்த லொறி ஒன்றின் கீழ் சிக்கினாள். தலத்திலேயே உயிர் இழந்தாள் . கடவுளின் முன் கொண்டுபோகப்பட்டாள். எனக்கு இன்னும் 38 வருடங்கள் இருப்பதாகச் சொன்ன நீங்கள் என்னை இழுத்துக் காப்பாற்றியிருக்க வேண்டாமா? என்று கோபமாகக் கேட்டாள். "அட, நீயா அது ?" அடையாளம் தெரியாமல் போய் விட்டதே ! என்றார் கடவுள்.

## கொரோனா விழிப்புணர்வு

வைரஸை வைரலாகப் பரப்ப வேண்டாமே!



வாழ்க்கையை நீட்டிக் கொள்ள மாஸ்க்கை மாட்டிக்கொள்ள வேண்டும்.

மாஸ்க் இன்றி மாஸ் ஏது?

கூடி வந்(வாழ்ந்)தால் கோடி கொரோனா.

முகமூடியை மாட்டு...
கொரோனாவை ஓட்டு...

அலையில் இருந்து மீள அலையாது இரு..!

மூக்குக்குக் கீழே முகக்கவசத்தை இறக்கவும் வேண்டாம்;
கொரானா வந்து இறக்கவும் வேண்டாம்!

சிலநேரம்
தேவைக்கேற்ப
தேடிப்பிடித்துக்
கொள்ள வேண்டும்
கவலைக்கு
மத்தியில்
சந்தோசங்களை



## மலையாள மஞ்சனத்தி!


கர்ணன்' படம் கொடுத்த வெற்றிக்குப் பிறகு அடுத்தடுத்து தோலிவுட் பக்கம் அதிக கவனம்செலுத்தத் தொடங்கியுள்ளார் ரஜிஷா விஜயன். அடுத்ததாக, கார்த்தி பி.எஸ்.மித்ரன் கூட்டணியில் உருவாகும் 'சர்தார்' படத்தில் நாயகியாக நடிக்கவுள்ளார். அத்தோடு, 'கூட்டத்தில் ஒருவன்' இயக்குநர் ஞானவேல் இயக்கும் புதிய படத்திலும் சூர்யாவுடன் நடிக்கவுள்ளார்.

சஞ்சீவி



## சிங்கப் பெண்ணே...!

பாலிவுட்டின் பிரபல தயாரிப்பாளர் ரோனி ஸ்க்ரூவாலா சவாலான புதுப்புதுக் கதைகளைப் படமாக்கக் கூடியவர். அந்த வரிசையில் 'காண்டம்' தொழிற்சாலைகளில் பணியாற்றும் 'காண்டம்' பரிசோதனையாளரின் கதையைப் படமாக்கவுள்ளார். இதில் நடிப்பதற்காக முதலில் சாரா அலிகான், அனன்யா பாண்டே ஆகியோரை அணுகியுள்ளார். ஆனால், அவர்கள் தயங்கவே. "நான் வர்றேன்" என்று வந்து படத்தில் ஆன் போர்டு ஆகியுள்ளார் ரகுல் ப்ரீத் சிங்.




## திரும்ப வந்துட்டேன்னு சொல்லு...!

நடிகை ரைசா கடந்த மாதம் சிகிச்சைக்கு தோல் மருத்துவரிடம் சென்றேன் எனவும் அதனால் தனது முகத்தில் ஏற்பட்ட காயம் குறித்தும் பதிவிட்டிருந்தார். இதனால், தொடர்ந்து பல சர்ச்சைகள் நடந்தன.
தற்போது ரைசா ட்விட்டரில் அவரது புகைப்படம் ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில் அவரது கண்ணுக்கு கீழ் இருந்த வீக்கம் முற்றிலும் குணமடைந்துள்ளது. மேலும் அவரது முகம் பொலிவாகவும் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ இராகவன்

# நடுகை (இதழ், 05, இதழ் 06) பற்றிய ஒரு நோக்கு







யாழ்ப்பாணத்திலிருந்து 2004 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 'கவிதைக்கான ஒரு காகித விதைப்பு' எனும் இலக்கோடு வெளிவந்த நடுகை 2009ஆம் ஆண்டு காலப்பகுதி வரை 4 இதழ்களைத் தந்து தன் வருகையை நிறுத்திக் கொண்ட நிலையில், தற்போது கிளிநொச்சியிலிருந்து 12 வருடங்களின் பின்னர் 2021ஆம் ஆண்டுபங்குனியிலிருந்துமீள வெளிவர ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும்.

'.... கவிதைக்கான களமொன்றைக்காலம் கோரிநிற்கையில்நிகழ்ந்துள்ள நடுகையின் மீள்வருகை புதியவர்களை கவிதைப் பரப்பில் இனங்காட்டுவதோடு ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பரப்பில் ஒரு மாற்றத்துக்கான அதிர்வையும் உண்டுபண்ண வாசகர்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்...' என ஆசிரியர் தலையங்கத்தில் (இதழ்05) குறிப்பிட்டிருப்பது கவனிப்புக்குரியதாகும்.

ஐந்தாவது இதழின் (2021 பங்குனி) முகப்புக் கவிதையாக மஹாகவியின் குறும்பா இடம்பெற்றிருப்பது ஒரு நல்ல தொடக்கம் எனலாம். அதை இங்கே பகிர்ந்து கொள்வதும் சாலப் பொருந்தும்.

***சிவபெருமான் இந்நிலத்தில் வந்தால்***
***சில்லாலைப் பக்கம் நடந்தார்***
***அவர் உடை கண்டால் விடுமா***
***அவ்விடத்து நாய்? அப்பன்***
***அவசரமாய் தம்விடை இவர்ந்தார்!***

அத்தோடு 'காலம் வாய்க்க வேண்டும்...' எனும் பிரியந்தி.அ வின் கவிதையின் நல்லதொரு காலப் பதிவாக அமைந்துள்ளது. மேலும் இவ்விதழில் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் முதலாவது கவிதைத் தொகுப்பான 'வானம் சிவக்கிறது' நூலுக்கு 'சொல்லொழுக்கின் வசமாதல்' எனும் தலைப்பில் கவிஞர் முருகையன் எழுதியிருக்கும் முன்னுரையும் 'கவிதையும் ஜீவாவின் மல்லிகையும்' எனும் தலைப்பில் ராதேயன் எழுதிய குறிப்பும், பா.அகிலனின் 'ஒன்றும் பலவும்: சொற்களதும் மௌனத்தினதும் உருவங்கள்' எனும் கவிதைக் காட்சிப்படுத்தல் குறித்து 'உணர்தலும் தரிசித்தலும்' எனும் தலைப்பில் சு.குணேஸ்வரன் எழுதிய சிறு குறிப்பும் 'பார்போற்றும் பாவலர் துரையப்பாவின்' எனும் தலைப்பில் சி.ரமேஷ் எழுதியுள்ள ஆய்வுக் குறிப்பும் குறிப்பிடத்தக்கவையாகும். இத்தோடு வேலணையூர் ரஜிந்தன் (பிரிவு வேண்டும்); இராசேந்திரம் குந்தவி (இயற்கை சீர் அற்புதம்); அகமதுஃபைசல் (தூக்கத்தின் தந்தை); தே.பிரியன் (வேட்கை மேவட்டும்); வட்டக்கச்சி வினோத் (குட்டிச் சுவரான குட்டித் தீவு); நெடுந்தீவு க. யோகேஸ் (ஒன்றித்திருக்கும் நிகழ்); சு.க.சிந்துதாசன் (கொக்குகளின் காத்திருப்பு); கோஜியா நவரூபன் (எனக்கென்றோர் வானம்); த.நிரஞ்சலன் (மகனே!); charlotte zolotow) அவை மட்டும் அவையாகவே - தமிழில் : கோகுலராகவன் ); ஜிவிதன் (ஹைக்கூக்கள்); தீபச் செல்வன் (சந்தனப் பேழை); மீசாலையூர் சக்திவிஜயாவேல் (மனித மனச்சமநிலை); அஷ்வினி வையந்தி (ஞாபகங்கள் தாலாட்டும்); பா.கனகேஸ்வரி (விழுந்தாலும் எழுவோம்); தர்சிகா சிறீதரன் (கனவு); கயூரி புவிராசா (நிஜங்களைத் தேடி) ஆகிய 17 பேரினதும் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

ஆறாவது இதழ் (2021 சித்திரை) குறுங்கவியின்
***'யாழ்ப்பாணம் என்ற பெயர்***
***பெருந்தாது***
***இம்மாநகருக்கு***
***வாள்ப்பாணம் என்றழைப்போமினி!'***

என்ற முகப்புக்கவிதையுடன் 'அழுகைமொழி' எனும் கோ.நாதனின் சிறப்புக் கவிதையும் முன்னட்டையில் தாங்கி வெளிவந்துள்ளது. இத்துடன் 'மஹாகவி து. உருத்திரமூர்த்தி- தமிழ் கவிதையின் புதிய சகாப்தம்' எனும் தலைப்பில் அமைந்த சி.ரமேஷின் சிற்றாய்வுக் குறிப்பும், என்.செல்வராஜா தொகுத்துள்ள 'ஈழத்தின் தமிழ்க் கவிதையியல்- ஒரு நூல் விவரப்பட்டியல்' எனும் நூல் பற்றி 'விரல் நுனியில் ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பரப்பு ' எனும் தலைப்பில் மாதவி சிவலீலன் எழுதிய நயப்புக் குறிப்பும், 'விதை குழுமம்' ஏற்பாட்டில் இடம்பெற்ற கவிஞர் தில்லையின் 'விடாய்' கவிதைத் தொகுப்பும் பற்றிய 'சூம்' உரையாடல் குறித்துத் 'தடம் மாறும் உரையாடல்வெளி' எனும் தலைப்பில் ஈழக்கிழவி (பிரான்ஸ்) எழுதியுள்ள விமர்சனக் குறிப்பும் கவனிப்புக்குரியவை.

இவை தவிர 05.04.2021மாரடைப்பால் பதுளையில் காலமான கல்முனை பூபால் (கவிஞர் நீலாபாலன்) குறித்து கணபதிப்பிள்ளை குணராசாவின் அஞ்சலிக் குறிப்பும் 28.02.2021 அன்று நடைபெற்ற (கிளிநொச்சியில்) நடுகை அறிமுக நிகழ்வு பற்றிய குறிப்பும் 14.03.2021 அன்று யாழ்ப்பாணம் உதயன் வளாகத்தில் நடைபெற்ற வேலணையூர் ரஜிந்தனின் 'கார் காலப் புலர்வுகள்' மற்றும் மணற்காடரின் 'ஒரு சிறு புள்ளின் இறகு' இரு கவிதை நூல்களின் வெளியீட்டு நிகழ்வு பற்றிய குறிப்பும் பின் உள்ளட்டையில் திரும்பி வரும் பொய்கள்' எனும் மனுஷ்யபுத்திரனின் சிறப்புக் கவிதையும் குறிப்பிடத்தக்கவை.

இவற்றுடன் 'நான் எனும் நாற்காலி' (த.அஜந்தகுமார்); 'இதயநாற்காலி' (ஜெனிஅகோச்); 'அயலும் அலரும்' (பிரசாந்தி ஜெயபாலன்); 'காலநதிப் பயணம்'( ஆ.மதுமிதா); 'எனக்கென்றும் ஒரு நிலம்' (கனக.பாரதி செந்தூரன்) 'ஆறாவடு' (காவலூர் அகிலன்) 'யார் பெரியவர்?' (நெடுந்தீவு பவி); 'நிலம் வந்த தெய்வம்' (டக்ஸனா கிருஷ்ணானந்தன்); 'பறவைகளுக்குத் திசைகள் தெரியாது' 'சித்தாந்தன்); 'கழிவறை' (நபீல்); 'நடுகை' (பளையூர் செ.கஜானன்); 'நானில்லாப் பாழ்வெளி' (கவிஞர் அன்பழகி); 'கருவி வீழ்ந்த கனவில் காலம்' (சி.ஸ்ரீரஞ்சன்); 'உருவில்லாத் தெய்வத்துக்கு ' (பழனிநாதன் நிரோசன்); 'உருக்கண்டு உவகை' (நகுலன்); 'சவக்காலப் பாடல்-04' (எஸ்.சிவசேகரன்) ஆகிய 16 கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் மஹாகவி து.உருத்திரமூர்த்தி நினைவாக நடுகை நடத்தும் மாபெரும் கவிதைப் போட்டி பற்றிய அறிவித்தலும் பின்னட்டையில் வெளியாகியுள்ளது. இதுவொரு வரவேற்கத்தக்க கவிதையாக்க முயற்சி என்பதில் சந்தேகமில்லை. கைக்கடக்கமாக கண்கவர் வடிவமைப்பில் இருபது ரூபா விலையில் கிடைக்கும் நடுகை இதழ் தொடர்ந்து வெளிவரக் கவிதை மீதார்வமுள்ளவர்கள் மட்டுமன்றி அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

---

## திருவள்ளுவரின் தேநீர்க்கடை



18

○ இ.சு.முரளிதரன்

அனைத்து உயிர்களும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கலத்தால் உருவானவையே! பக்றீரியா போன்ற சில நுண்ணுயிர்கள் தனியொரு கலத்தால் உருவானவையாகும். ஒரு உயிரின் தொழிற்பாடென்பது ஒவ்வொரு தனிக்கல இயக்கத்தின் மொத்தத் தொழிற்பாட்டைச் சார்ந்துள்ளது. கலமானது முதிர்ச்சியடைந்து உடலியல் தொழிற்பாடுகளுக்குப் பொருந்தாத நிலையிலும், வேறுவகையிலே பாதிப்படைகின்ற தருணத்திலும் தற்கொலை செய்கின்றது.

கலத்தின் தற்கொலையில் லைசோசோம் (Lysosome) எனும் கலப்புன்னங்கத்தின் வகிபாகம் குறிப்பிடத்தக்கது. லைசோசோம்களில் காணப்படும் லைற்றிக் நொதியம் (Lytic enzyme) கலங்களையும் [illegible] யச் செய்கின்றது. இத்தகைய வகிபாகத்தால் லைசோசோம்கள் 'கலத்தின் தற்கொலைப் பைகள்' எனப்படுகின்றன

மரணம் துன்பியல் நிகழ்வுதான்! தற்கொலையை நியாயப்படுத்தி விட முடியாது. எனினும் பிறர்க்கு உதவாமல் வாழ்வதில் அர்த்தமில்லை எனத் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார். பிறர்க்கு உதவும் பண்பை மேலெடுத்துச் செல்ல, உதவ முடியாத தருணத்திலே மரணித்தல் குறித்துப் பேசுகின்றார். உள்ளவரைக்கும் உதவி செய் என்ற தொனியை முன்னிறுத்துகிறார். ஈகையை வலியுறுத்தி சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தளத்திலே நின்று தனது கருத்தைப் பதிவு செய்கிறார். திருவள்ளுவரின் கருத்தைச் சமன் செய்யும் வகையிலே தான், கலமும் ஈகைப்பண்போடு செயலாற்ற முடியாத சந்தர்ப்பத்திலே தன்னுயிரை மாய்த்துக் கொள்கிறது. 230 ஆவதுகுறட்பாவிலே கலத்தின் தற்கொலைப் பண்பை இனங்காண முடிகிறது.

**"சாதலின் இன்னாதது இல்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை""**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பஞ்சவர்கள்!

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதியாட்டம் இந்த மாதம் 18ஆம் திகதி இங்கிலாந்தின் சவுத்தாம்டனில் இடம்பெறவுள்ளது. இந்திய அணியை எதிர்த்து நியூசிலாந்து அணி இறுதியாட்டத்தில் மோதவுள்ளது. இந்த ஆட்டத்துக்காக இரு அணிகளிலும் இடம்பிடித்துள்ள ஐந்து வீரர்கள் பற்றிய ஆச்சரியமான தகவலொன்று சர்வதேச அளவில் தற்போது ட்ரெண்ட் ஆகி வருகின்றது.

இந்திய அணித் தலைவர் கோலி, ரவீந்திர ஜடேஜா, நியூசிலாந்து அணித்தலைவர் வில்லியம்சன், போல்ட், சவுத்தி ஆகியோர் பற்றிய செய்தியே அது.

அதாவது இந்த ஐந்து வீரர்களும் ஒன்றாகவே தமது சர்வதேச கிரிக்கெட் பயணத்தை ஆரம்பித்திருக்கின்றனர். 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கான உலகக்கிண்ணத் தொடரில் இவர்கள் தாம் சார்ந்த நாடுகளைப் பிரதிநிதித்துவம் செய்துள்ளனர். அந்தத் தொடரில் இரு அணியினரும் நேருக்கு நேர் சந்தித்துமிருந்தனர். தற்போது அந்த ஐந்து வீரர்களும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதியாட்டத்தில் ஒன்றாக விளையாடவுள்ளனர்.

ஐந்து, பத்து ஆட்டங்களுடன் அஸ்தமித்துப்போகும் வீரர்களுக்கு மத்தியில், 19 வயதுக்குட்பட்ட அணிக்குள் இடம்பிடித்து அதன் பின்னர் தேசிய அணிக்குள் நுழைந்து இதுகாலும் தமது இராச்சியத்தை இறுகக் கட்டிவைத்திருப்பதென்பதே பெரிய சாதனைதானே.

*'நட்சத்திரங்கள் மின்மினிகள் அல்ல'*

ஆர்.லயனல்



# ஐரோப்பாவின் ஜாம்பவான் யார்?

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் ஆரம்பமாக இன்னும் சில தினங்களே எஞ்சியுள்ளன. எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடர் ஜூலை மாதம் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற இந்தத் தொடரில் எவரும் எதிர்பார்க்காத வகையில் றொனால்டோவின் தலைமையிலான போர்த்துக்கல் அணி கிண்ணம் வென்றது. இறுதியாட்டத்தில் பலம் வாய்ந்த பிரான்ஸை போர்த்துக்கல் வீழ்த்தியிருந்தது. இந்தக் கிண்ணம்தான் போர்த்துக்கலின் கால்பந்தாட்ட வரலாற்றில் ஆகச் சிறந்த அடைவாகக் கருதப்படுகின்றது. இதனால் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கும் போர்த்துக்கல் மீது இந்த வருடமும் அதிக எதிர்பார்ப்பு இருக்கவே செய்கின்றது.

அதேநேரம் மறுமுனையில் ஜேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெய்ன் ஆகியவை பலம் வாய்ந்த அணிகளாக உள்ளன. குறிப்பாக பெல்ஜியம் அதிகப்படியான தாக்குதல்பாணி வீரர்களை தன்வசம் வைத்துள்ளது. கடந்த உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரையில் முன்னேறிய குரோஷியா மீதும் இம்முறை எதிர்பார்ப்பு இருக்கவே செய்கின்றது. ஆக, அடுத்த 30 நாள்கள் பரபரப்புக்குப் பஞ்சம் இல்லாமல் நகரப்போகின்றது. பார்க்கலாம் ஐரோப்பிய கால்பந்தாட்ட உலகை ஆளப்போகும் நாயகன் யார்? என்பதை.

## விளையாட்டு

# "உலகப்பந்தையே கலக்கும் உதைபந்தில் கலக்கப்போவது யாரோ?

*வந்துட்டேன்னு சொல்லு...*



பார்சிலோனா கழகத்தில் இருந்து மெஸ்ஸி வெளியேறப் போகின்றார் என்று செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், அவை வெறும் வதந்திகள் என்றுரைத்திருக்கின்றார் மெஸ்ஸி. மெஸ்ஸி பார்சிலோனாவில் தொடர்ந்தும் விளையாடுவதற்காக செய்துகொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தம் மேலும் இரு ஆண்டுகளுக்கு தற்போது நீடிக்கப்பட்டுள்ளது.

மெஸ்ஸிக்கும் பார்சிலோனா நிர்வாகத்துக்கும் இடையில் மனக்கசப்புக்கள் உள்ளன. மெஸ்ஸி குறிப்பிடும் வீரர்களை பார்சிலோனா அணிக்குள் உள்வாங்காமை, ஊதிய ஒப்பந்த விவகாரம், நெய்மர், மெஸ்ஸி, சுவாரஸ் கூட்டணி உடைக்கப்பட்டமை என்று பல விவகாரங்களில் மெஸ்ஸிக்கும் அணி நிர்வாகத்துக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இதனால் மெஸ்ஸி அணியை விட்டு விலகப் போகின்றார் என்றும் சொல்லப்பட்டது.

இந்தக் கருதுகோள்கள் ஒன்றும் இந்த வருடம் புதிதாக முன்வைக்கப்பட்டவை அல்ல. காலாகாலமாக வெவ்வேறு வடிவங்களில் இருந்து வருபவைதான். ஆனால், இதுகாலும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் போதெல்லாம் அதை மெஸ்ஸி மறுத்துரைத்திருக்கின்றார். இந்த வருடம் அவர் மௌனித்தே இருந்ததால், மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு வெளியேறத்தான் போகின்றார் என்று பார்சிலோனா ரசிகர்கள்கூட எதிர்பார்த்தனர். இத்தகையதொரு பின்னணியிலேயே பார்சிலோனாவுடனான ஒப்பந்தத்தை நீடித்துள்ளார் மெஸ்ஸி.

*'மெஸ்ஸி வேறு பார்சா வேறா...'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளதிகாரம்!

ஆஸ்திரேலிய அணியின் மிரட்டல் வேகப்பந்து வீச்சாளரான மிட்ச்செல் ஸ்ராக், ஆரம்பத்தில் ஒரு இலக்குக் காப்பாளர் என்று சொன்னால் உங்களால் நம்ப முடிகின்றதா?. ஆனால், அதுதான் உண்மை. கிரிக்கெட் வாழ்க்கைக்குள் மிட்ச்செல் ஸ்ராக் காலடி எடுத்துவைத்தபோது அவர் ஒரு இலக்குக் காப்பாளராகவே இருந்தார். 9 வயது முதல் 14 வயது வரை இலக்குக் காப்பைத்தான் மிட்ச்செல் ஸ்ராக் செய்து வந்தார். அதன் பின்னர் ஸ்ராக் தனது அப்போதைய காதலியும் தற்போதைய மனைவியுமான ஹைய்லியை சந்திக்கின்றார். ஹெய்லிதான் ஸ்ராக் வேகப்பந்து வீச்சாளராக வரவேண்டும் என்று விரும்பி அவரை வேகப்பந்து வீச்சாளராக உருவெடுப்பதற்கு உறுதுணையாக இருந்தாராம்.



6 அடிகளுக்கும் அதிகமான உயரமும், நீளமான கைகளும் உள்ள ஸ்ராக்குக்கு இலக்குக் காப்பை விட வேகப்பந்து வீச்சுத்தானே பொருத்தமானதாக இருக்கும். அதனால், ஹெய்லியின் முடிவு மிகச் சரியானதுதான்.

சரி யார் இந்த ஹெய்லி?. ஸ்ராக்கின் மனைவி என்பதுதான் அவரின் அடையாளமா?. இல்லவேயில்லை. ஆஸ்திரேலியாவில் உள்ள மிகப் பிரபலமான கிரிக்கெட் வீராங்கனைகளில் ஹெய்லிக்குத் தனி இடமுண்டு.

அதேவேளை ஹெய்லி முதலில் ஒரு வேகப்பந்து வீராங்கனையாக வரத்தான் விரும்பினார். ஆனால் அவர் கடைசியாக விக்கெட் காப்பாளராகவும், அதிரடி துடுப்பாட்ட வீராங்கனையாகவும் மாறிவிட்டார்.

ஸ்ராக் விரும்பியதை ஹெய்லியும், ஹெய்லி விரும்பியதை ஸ்ராக்கும் அடைந்துவிட்டனர். அதனால் ஒரு கிரிக்கெட்டில் இவர்கள் ஆச்சரியத் தம்பதியராகவே உள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் டெஸ்ட் அணித்தலைவர் ரிம் பெய்ன்கூட ஒரு நேர் காணலில் நகைச்சுவையாக, 'ஸ்ராக்கின் குடும்பத்தில் அவர் இரண்டாவது சிறந்த கிரிக்கெட் வீரர்' என்றிருப்பார். அதில் உண்மையும் இருக்கத்தான் செய்கின்றது.

*'நினைப்பதெல்லாம் நடப்பதில்லை'*